# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 113 | பங்குனி 06ஆம் நாள் | புதன்கிழமை | 20 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


## போரில் இராணுவத்தினர் தவறு இழைக்கவில்லை!

*இராணுவத் தளபதி கூறுகிறார்*

கொழும்பு, மார்ச் 20
போரின்போது இலங்கை இராணுவத்தினர் எந்தத் தவறும் செய்யவில்லை. இராணுவத்தினரைப் பாதுகாக்க எந்த விசாரணைக்கும் தயாராக உள்ளோம் என்று தெரிவித்துள்ளார் இலங்கை இராணுவத் தளபதி மகேஸ் >> 21

## புத்தர் சிலையை காரணம் காட்டி ஆலயக் காணியை பறிக்க முயற்சி

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கடும் கண்டனம்



இருவருடங்களுக்கு முந்திய படம்

வவுனியா, மார்ச் 20
வவுனியா, மூனாமடு நாகபூசனி அம்மன் ஆலயக் காணியை அபகரித்து பௌத்த மதத்தலம் அமைக்க முயற்சிக்கப்படுகின்றது என்று >> 21

## குழந்தையைத் தரையில் அடித்த குற்றச்சாட்டில் தந்தை கைது

யாழ்ப்பாணம், மார்ச் 20
இலங்கையின் நொச்சியாகமம் பகுதியில் குடும்பத் தகராறில் மூன்று மாத சிசுவை தரையில் அடித்தார் என்று கூறப்படும் தந்தையொருவரை பிரதேசவாசிகள் >> 21

## மாமியாரின் காதை துண்டாடிய மருமகன்

*யாழ்ப்பாணத்தில் சம்பவம்*


யாழ்ப்பாணம், மார்ச் 20
குடும்பத் தகராறின்போது மாமியாரின் காதைக் கடித்துக் குதறியுள்ளார் >> 21



# கிளர்ந்தது கிழக்கு

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 20
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி கிழக்கில் நேற்று பெரும் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து கொண்டனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக முழுக் கடையடைப்பும் நேற்று நடத்தப்பட்டது. >> 21



## சுழற்சி முறையில் மின்வெட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 20
நுரைச்சோலை மின் நிலையத்தின் 2 ஆவது மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதால் அது சீர்செய்யப்படும் வரை நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.
வடக்கு மாகா >> 21

## இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20
எல்லைதாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவர் உள்ளிட்ட இந்திய மீனவர்கள் எட்டுப் பேரையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உத்தர விட்டுள்ளார். >> 21

## சுமந்திரன் ரணிலுடன் தொலைபேசியில் பேச்சு!

கொழும்பு, மார்ச் 20
ஜெனிவாவில் இலங்கை அரச பிரதிநிதிகள் இலங்கை தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், அதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற >> 21

## தமிழகத்தில் தேர்தல் காலம் ஈழத் தமிழர் மீது கரிசனை

சென்னை, மார்ச் 19
இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்க >> 21

## இணை அனுசரணை இலங்கை வழங்கும்

*அயலுறவுத்துறை அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 20
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைபுக்கு இணை அனுச >> 05

## புலம்பெயர் அமைப்புகளும் தீர்மானத்துக்கு எதிர்ப்பு

ஜெனிவா, மார்ச் 20
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.
இந்தத் தீர்மா >> 05

## ஐ.நா. ஆணையரை சந்தித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஜெனிவா, மார்ச் 20
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்றுநேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை இன்று உத்தியோகபூர்வமாக சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளிக்கவுள்ளது. இலங்கை தொடர்பான பிரிட்டன் >> 04

## தமிழருக்கு நீதி கிடைக்க பிரிட்டன் ஒத்துழைக்கும்

கொழும்பு, மார்ச் 20
மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்போம் என்று பிரிட்டன் நாடாளு >> 04




## வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2018.06.30 ஆம் திகதி 2077/55 இலக்கங் கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

**கிளை பொதுச் சபைக்கூட்டங்கள் தொடர்பான விவரம் (24.03.2019)**

| கிளை இல | கிளையின் பெயர் | நேரம் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்களின் விவரம் | உத்தியோகத்தர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | அச்செழு | மு.ப.10.00 மணி | அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் | திரு.இ.வேல்குமார் |
| 02 | அச்செழு வடக்கு | மு.ப.10.00 மணி | அச்செழு ஆ.ஆ.வு.ஆ. பாடசாலை | திரு.ச.சுவர்ணன் |
| 03 | நீர்வேலி வடக்கு | மு.ப.10.00 மணி | நீர்வேலி கிளை இல.03 | திரு.ஸ்ரீ.குகதீப் |
| 04 | நீர்வேலி விக்னேஸ்வரா | மு.ப.10.00 மணி | சு.ஊ.தமிழ் கலவன் பாடசாலை, நீர்வேலி வடக்கு | திரு.க.பிரதீபன் |
| 05 | நீர்வேலி மத்தி | மு.ப.10.00 மணி | நீர்வேலி மத்தி சனசமூக நிலையம் | திரு.சி.பிரதீபன் |
| 06 | நீர்வேலி சந்தி | மு.ப.10.00 மணி | வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை சங்கம், நீர்வேலி | செல்வி.ச.லாவண்யா |
| 07 | நீர்வேலி இராச வீதி | மு.ப.10.00 மணி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி | திரு.த.பிரபாகரன் |
| 08 | நீர்வேலி கரந்தன் | மு.ப.10.00 மணி | கரந்தன் சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையம் | திரு.அ.வசிகரன் |
| 09 | நீர்வேலி கோயிலடி | மு.ப.10.00 மணி | ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி | திருமதி.சு.கஸ்தூரி |
| 10 | நீர்வேலி பூதர்மடம் | மு.ப.10.00 மணி | ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்கம், நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி | திருமதி.செ.இந்திரவதனா |
| 11 | நீர்வேலி ஐங்கரன் | மு.ப.10.00 மணி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி | திரு.ஐ.மயூரன் |
| 12 | கோப்பாய் சந்தி | மு.ப.10.00 மணி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | திரு.நா.ஜெயவதனன் |
| 13 | கோப்பாய் விநாயகர் | மு.ப.10.00 மணி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | திரு.தி.பிரதீப் |
| 14 | கோப்பாய் கண்ணகை | மு.ப.10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோயிலடி, கோப்பாய் | திரு.இ.தனுசன் |
| 15 | கோப்பாய் அம்பாள் | மு.ப.10.00 மணி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் | திரு.பா.பாலரவி |
| 16 | கோப்பாய் இராசவீதி | மு.ப.10.00 மணி | கோப்பாய் காளிகோயிலடி சனசமூக நிலையம் | திரு.சி.சியாந்தன் |
| 17 | கோப்பாய் மத்தி | மு.ப.10.00 மணி | நாவலர் வித்தியாலயம், கோப்பாய் மத்தி | திரு.ப.தவப்பிரியன் |
| 18 | கோப்பாய் மத்தி | மு.ப.10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோயிலடி, கோப்பாய் | திரு.தா.தவமன்னன் |
| 19 | கோப்பாய் மத்தி | மு.ப.10.00 மணி | வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி சனசமூக நிலையம், கோப்பாய் | திரு.கு.நிசாந்தன் |
| 20 | கோப்பாய் தெற்கு | மு.ப.10.00 மணி | கலைவாணி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | திரு.செ.பகீரதன் |
| 21 | கோப்பாய் தெற்கு | மு.ப.10.00 மணி | ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | திரு.பா.பாலவரதன் |
| 22 | கோப்பாய் தெற்கு | மு.ப.10.00 மணி | முழுமதி சனசமூக நிலையம், கோப்பாய் தெற்கு | திரு.பா.குருபரன் |
| 23 | உரும்பிராய் சந்தி | மு.ப.10.00 மணி | ஞானவைரவர் சனசமூக நிலையம், உரும்பிராய் தெற்கு | திரு.சு.அகிலன் |
| 24 | உரும்பிராய் தெற்கு | மு.ப.10.00 மணி | அண்ணா சனசமூக நிலையம், யோகபுரம் | திரு.ம.கபிலன் |
| 25 | உரும்பிராய் கணேசா | மு.ப.10.00 மணி | உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | திரு.ச.பிறேமிலன் |
| 26 | உரும்பிராய் கிழக்கு | மு.ப.10.00 மணி | செல்லப்பா சனசமூக நிலையம், உரும்பிராய் கிழக்கு | திரு.யோ.ஜெகதாஸ் |
| 27 | உரு.வேதக்கோயிலடி | மு.ப.10.00 மணி | றோமன் கத்தோலிக்க பாடசாலை, வேதக்கோயிலடி, உரும்பிராய் | திரு.இ.உதயகுமார் |
| 28 | உரும்பிராய் கந்தன் | மு.ப.10.00 மணி | கலைவாணி சனசமூக நிலையம், உரும்பிராய் கரந்தன் | திரு.க.சுரேஸ்பாபா |
| 29 | உரும்பிராய் வடக்கு | மு.ப.10.00 மணி | கலைவாணி சனசமூக நிலையம், ஊரெழு | திரு.இ.கஜேந்திரன் |
| 30 | ஊரெழு | மு.ப.10.00 மணி | ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு | திரு.பா.சிவபாலன் |
| 31 | ஊரெழு மேற்கு | மு.ப.10.00 மணி | ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு | திரு.வி.சிவபாலன் |
| 32 | ஊரெழு வடக்கு | மு.ப.10.00 மணி | ஊரெழு கணேசா வித்தியாலயம், ஊரெழு | திரு.சோ.தங்கேஸ்வரன் |
| 33 | இருபாலை சந்தி | மு.ப.10.00 மணி | கோப்பாய் மகாவித்தியாலயம், இருபாலை, கோண்டாவில் வீதி | திரு.வ.நிதர்சன் |
| 34 | இருபாலை கிழக்கு | மு.ப.10.00 மணி | பாரதி சனசமூக நிலையம், இருபாலை கிழக்கு | திரு.க.பரநிருபன் |

கூ.ஆ.உ.ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
12.03.2019

ஒப்பம் : செல்வி பரீன் ஹஸ்ஸான அப்துல் சமீயூ
கூ.அ.உ.ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

(IN 9674) (14.17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**ஞானறாஜா பூமணி**

பிறப்பு 26 . 01 . 1938 — இறப்பு 20 . 03 . 2017



"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்
யோ.வா: 11-25"

ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும் அம்மா உங்கள் அன்பு நினைவுகள்
ஒரு கணமும் எம்மை விட்டகலாது கடல் கடந்தும் கடமையில்
தவறாத நீர் கரு சுமந்தவரை தோள் சுமந்தீர் வாழ்வில்
நாம் வளமுடன் வாழ ஏணிப்படியாய் இருந்து நல்வழிகாட்டிய
அன்பு அம்மாவை என்றுமே மறவோம்.

432/6, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 3ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர்
**வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன்**
(யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன ஆலோசகர்குழு உறுப்பினர்)

தோற்றம் 26 . 01 . 1939 — மறைவு 23 . 03 . 2016

தமிழுக்கும் தாய் நாட்டிற்கும்
மருத்துவத்திற்கும் மட்டுமல்ல
வாடிய வலுவிழந்தோர்
வளம்பெற யாழ்.ஜெய்ப்பூரில் நின்
சேவை வழங்கியதுடன்
தன் இனிய இல்லாளை எமக்களித்த

உள்ளத்தின் நல்ல உள்ளம்
அமரர் வைத்தியகலாநிதி
இராஜசிங்கம் தெய்வேந்திரன்
அவர்களை என்றும்
மறவாத நன்றியுடன்
நினைவுகூருகின்றோம்

யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின்
முகாமைத்துவக் குழுவினரும்
பணியாளர்களும்

(IN 9668)(14.17)

## மரண அறிவித்தல்



# திருமதி சாந்திமலர்(ரதி) சுரேஸ்குமார்

*(ஓய்வு பெற்ற நூலக உதவியாளர் - வலி வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை)*

யாழ். மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சிறுவிளான், இளவாலையை வசிப்பிடமாகவும் ஆவுஸ்திரேலியா Sydney ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சாந்திமலர் சுரேஸ்குமார் 18.03.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ் - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் சிறுவிளான் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - சகுந்தலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் சுரேஸ்குமாரின் அன்பு மனைவியும் ஐஸ்வரியாவின் அன்புத் தாயாரும் ஸ்ரீராம் இன் அன்பு மாமியும் சந்திரமலர்(பபி - Sydney), மகேந்திரன்(Sydney) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானசுந்தரம்(Sydney), சாரதா தேவி(Sydney), சுசிகலா(Sydney) காலஞ்சென்ற சசிகலா மற்றும் சூரியகுமார், சிவகுமார்(சிவம் - போட்டோ சுன்னாகம்), சந்திரகுமார்(கனடா), சூரியகலா(கனடா), சக்திகலா(கனடா), செந்தில்குமார்(Sydney) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2019) புதன்கிழமை 6.30pm - 8.30pm Guardian Minchinbury Chapel இல் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (21.03.2019) வியாழக்கிழமை இறுதிக்கிரியைகள் பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 1.30 - 3.30 மணிக்கு Pine Grove Crematorium, Kington St, Minchinbury NSW 2770, Australia இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகுமார்
சோதி வீதி, காங்கேசன்துறை.
077 379 2318/0718839568

தகவல்:
குடும்பத்தினர்.

ஐஸ்வர்யா - மகள் : +61430208484 / ஸ்ரீராம் - மருமகன் : +61435607262
சிவஞானசுந்தரம் - மைத்துனர் : +61405227578
செந்தில்குமார் - மைத்துனர் : +61431243639

## மரண அறிவித்தல்

# திருமதி சறோஜினி சிவானந்தன்



மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மற்றும் 45, பழைய சிலாப வீதி நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி சிவானந்தன் கடந்த (18.03.2019) திங்கட்கிழமை அகால மரணமாகி விட்டார்.

அன்னார் சிவானந்தனின் (AT ரவல்ஸ் உரிமையாளர்) அன்பு மனைவியும் சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் அபிலாசினி (பிரான்ஸ்) , துஷாளினி (லண்டன்), அபிலாஸ் (நீர் / மரிஸ்ரெலா கல்லூரி), மனுதர்ஷன் (நீர் / சர்வதேசப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரகுபரன் (பிரான்ஸ்), குமரநாத் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கனகரத்தினம் (அதிபர் - புங்குடுதீவு மகா வித்தியாலயம்), தனபாலசிங்கம் (குணம் அன்ட் சண்ஸ் நெல்லியடி), கமலேஸ்வரி, புஸ்பலதா, கனகாம்பிகை (பிரான்ஸ்), வரதலிங்கம் (லண்டன்), துரைரத்தினம் (அதிபர் - யா / சுதுமலை வடக்கு த. க. வி), சுவேந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரிபூராணந்தன், பரிமளகாந்தன் (நோர்வே), செல்வானந்தன் (லண்டன்), ஜெயரூபி (டென்மார்க்), சுந்தரலட்சுமி (சுவிஸ்), தயாளினி (லண்டன்), தவநாயகி (ஆசிரியை), இராசேஸ்வரி, இராசேந்திரம், பாலேந்திரன், ரவீந்திரன் (பிரான்ஸ்), தயாளினி (லண்டன்), நிஷாந்தி (ஆசிரியை - வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலை) ஆகியோரின் மைத்துனியும் யோக ரஞ்சினி, பாலரஞ்சினி, உமாமகேஸ்வரி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நீர்கொழும்பில் பி.ப. 3.00 மணிக்கு இடம்பெற்று நீர்கொழும்பு பொது மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0312222225,
0779839429

தகவல்: சிவானந்தன் (கணவன்)
மற்றும் குடும்பத்தினர்

(CS 24131/15/17)

தேசிய அபிவிருத்தி வங்கியின் அரலிய கணக்குடன் பெண்களுக்கான மாதத்தை கொண்டாடுங்கள்.



NDB யின் அரலிய கணக்கானது இலங்கையில் எண்ணி லடங்கா பெண்களுக்கு. அவர்களையும் அவர்களது குடும்பத்தையும் பாதுகாக்கும் தேவைகளுக்காக பல உதவிக்கரம் வழங்கியுள்ளது. அண்மையில் அறிமுகப்படுத் தப்பட்ட அரலிய இலங்கையின் இல்லத்தரசிகள் தொடக்கம் வியாபாரத்தில் ஈடுபடும் பெண்கள் வரையில் அனைவருக்கும் தமது இலக்கினை அடைவதற்காக நிதி. நிதிசார்பற்ற உதவியினை வழங்குவ துடன், இலங்கையின் பெண்கள் தமது வாழ்வின் இலக்கினை அடைய உதவிபுரியும் சிறந்த இடமாக திகழ்கிறது. "பெண்களை" உலகம் முழுவதும் கொண்டாடும் மார்ச் மாதம் முழுவதும். NDB யின் அரலிய மீண்டும் ஒரு குறிப்பிடத்தக்க சலுகையை ஏற்படுத்தியுள்ளது. பெண்களுக்கான மாதத்தில், ஒரு விசேட பரிசில் திட்டம் மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் அரலிய ஊடாக நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்கினை ஆரம்பிப்பவர்களுக்கு காத்திருக்கிறது.

NDB யின் அரலிய கணக்கானது சேமிப்பதற்கான பாரிய தளமாக இருப்பதையும் தாண்டி வலுவூட்டும் தூணாக செயற்படும். அரலியவின் சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு மாத்திரமே ஆயுள் காப்புறுதி மற்றும் வைத்தியச் செலவுகளை கணக்கு வைத்திருப்பவருக்கு மாத்திரமன்றி குடும்பத்தவர்களுக்கும் வழங்குவதுடன், பிற சேவைக ளான நடைமுறைக் கணக்கு, வியாபார கடன்கள், கடன் அட்டைகள் அதே போல அவர்களின் கனவுகள், இலக்குகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்ற உதவும் ஒரே பெண்கள் கணக்காகும்.

ஒரு தனிநபர் அரலிய கணக்கை ஆரம்பிப்பதுடன் பல விசேட பரிசில்களையும் பெறலாம். தேசிய அபிவிருத்தி வங்கியின் அரலிய தற்பொழுது இலங்கையின் இல்லத்தரசிகள், முழுநேர வேலை செய்பவர்கள் தொடக்கம் வியாபாரத்தில் ஈடுபடும் நிதி, நிதி-சார்பற்ற உதவியினை பெறும் பெண்கள் வரையில் அனைவருக்கும் தமது இலக்கினை அடைவதற்கு தேவையான அவர்களது சுயதொழில்சார் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தி, சீரிய முறையில் வழி நடத்துகின்றது.

அரலிய பெண் சுயதொழிலாளர்கள் தமது நிதி மற்றும் வியாபார கல்வியினை பெறுவதற்கான தளமாக அமைகிறது. இது வங்கியினால் வழங்கப்படும் நிதி சார் கல்வி மற்றும் நிதித் திட்டமிடல் சேவைகளை பயன்படுத்தி வங்கியின் நிதி சேவைகளின் செயற்பாடுகளை திறன்பட புரிந்து கொள்ள மற்றும் அவர்களது வியாபாரத்தின் முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான வெற்றிகரமான யுக்திகளை கற்றுக்கொள்ளவும் உதவுகிறது. தேசிய அபிவிருத்தி வங்கியானது கணிசமான முறையில் SME மற்றும் மைக்ரோ பைனான்ஸ் மூலமாக பெண்களை வலுவூட்ட தொடர்ந்தேர்ச்சையான பல முயற்சிகளை எடுத்துள்ளது. ஒரு வங்கி என்ற வகையில் தேசிய அபிவிருத்தி வங்கியானது தொடரான உற்சாகமூட்டுதலையும், நிதிசார் வழிகாட்டும் உந்துதலையும் இலங்கை பெண்கள் தமது வாழ்வில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக திடசங்கர்ப்பத்துடன் ஒவ்வொரு முயற்சியையும் எடுக்கிறது.

NDB வங்கியானது இலங்கையின் முதலாவது EDGE சான்றிதழ் பெற்ற ஒரே ஒரு பெருநிறுவனமாகும். EDGE சான்றிதழானது வேலையில் பாலின சமத்துவத்தை பேணுவதை தரப்படுத்தும் சர்வதேச முன்னணி தரப்படுத்த லாகும். NDB வங்கியானது NDB குழுமத்தின் தாய் நிறுவனங்களில் ஒன்றாகும். NDB வங்கியானது இலங்கை யின் நிதி சேவைகளில் துரித வளர்ச்சியடைந்து வரும் பெருநிறுவனங்களுள் ஒன்றான NDB குழுமத்துடன் தொடர்புடைய, நிதிச் சேவை மற்றும் வங்கித் துறையில் மேலாதிக்கம் செலுத்தும் யுக்தியை நோக்காகக் கொண்ட நிறுவனமாகும். அது ஆரம்பகாலத்திலிருந்தே NDB வங்கி, NDB முதலீட்டு வங்கி, NDB சொத்துக்கள், NDB பத்திரங்கள் மற்றும் NDB மூலதனம் போன்றவற்றை உள்ளடக்கி இருப்பதுடன், சமூக வளர்ச்சிக்கு ஊக்கியாகவும், சுயதொழிலாளர் கள் மற்றும் பெரு நிறுவனங்களை உறுதிப் படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும், அனைத்து படிநிலைகளிலும் உள்ள தனிநபர்களுக்கும், இக்குழுமத்தின் அனைத்து வாடிக்கையாளர்களும் பயன்பெறும் உற்பத்தி மற்றும் சேவையை வழங்கக் கூடிய நிறுவனமாக NDB திகழ்கிறது.

(C/32435)(10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளிப்பிள்ளை சீனியர்



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை சீனியர் நேற்று (19.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாக்குட்டி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் சீனியரின் அன்பு மனைவியும் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர்), அமரசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), அமரசிவம் (பிரதி அதிபர், யா/ மயிலிட்டி றோ.க.த. பாடசாலை), அமரஜோதி (ஆசிரியர் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), தனேஸ்வரி (ஆசிரியை - யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராசா (ஓய்வுபெற்ற அதிபர்), சிவமகேஸ்வரன் (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கல்விசாரா உத்தியோகத்தர்), ஸ்ரீரஜனி (ஓய்வுபெற்ற நூலகர்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2019) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"அபிராமி இல்லம்"**
**மத்தொனி, கரவெட்டி தெற்கு, கரவெட்டி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

### நவரத்தினம் வேலும்மயிலும்

***(ஓய்வு பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் - வவுனியா மற்றும் யாழ்மாவட்டச் செயலகங்கள்)***



"அப்பாவளவு" மல்லாகத்தைப் பிறப்பிட மாகவும் பலாலி வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் வேலும்மயிலும் நேற்று (19.03.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - தங்கச்சியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் நாகநாதர் - புஷ்பகாந்தி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் சேந்தனின் (விரிவுரையாளர் - ஆசிரிய கலாசாலை கோப்பாய்) அன்புத் தந்தையாரும் ராஜினி (ஆசிரியர், யா/ இணுவில் மத்திய கல்லூரி) அன்பு மாமனாரும் ஆதிரை, ஆவகன், ஆகியோ ரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற அங்கயற்கரசி மற்றும் அன்னலட்சுமி, சிவ சோதி காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச்ச கோதரனும் காலஞ்சென்றவர் களான ஸ்ரீபுஷ்பநாதன், கமலேந்திரன் மற்றும் சாம்பசிவமூர்த்தி, சத்தியசிவசொரூபினி மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், தர்மாவதி மற்றும் பத்மாவதி, கௌசலாதேவி, சத்தியநாதன் மற்றும் காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"குருவருளகம்", 3ஆவது ஒழுங்கை,**
**பலாலி வீதி, திருநெல்வேலி.**
**077 971 0730, 077 977 3414**

**தகவல்: குடும்பத்தினர்.**

# குழந்தைகளின் முன் பெற்றோர் செய்யக்கூடாத விடயங்கள்!

குழந்தைகளின் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்தான். அவர்களிட மிருந்தே குழந்தைகள் தமது பழக்க வழக்கங்களை உருவாக்கிக்கொள்கின்றன. அதனால், பெற்றோர் தனது குழந் தைகளுக்குக் கூற வேண்டியதை, வாழ்ந்து காட்டினாலே போதும். இது, குழந்தை வளர்ப்பில் முதன்மையான அம்சம்.

பெற்றோர் கடைப்பிடிக்கும் நல்ல விஷயங்களைக் குழந்தை பின்பற்றும். இந்தப் பழக்கம் கெட்ட விஷயங்களிலும் தொடரும். எனவே, குழந்தைகள் முன் செய்யக்கூடாதவை குறித்த முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லது. ஏனெனில், குழந்தைகளால் நகர்த்த அல்லது தூக்க முடியாத பொருள்களை அவர்கள் முன் நகர்த்த, தூக்க முயலாதீர்கள் என்று கூறுகி றார்கள். எனவே, பெற்றோர் தங்கள் குழந்தையின் முன் செய்யக் கூடாத விஷயங்களில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்.

**சண்டை தவிர்** -எவ்வளவு தீவிரமான விஷயமாக இருந்தாலும் குழந்தையின் முன் சண்டைப் போடுவதைத் தவிர்க்கவும். ஏனெனில், சண்டை போடும்போது அதிக உணர்ச்சிவசப்பட்டு, தவறான வார்த்தைகளைக் கூறிவிடலாம். ஒருவர் மற்றவரை அடிக்கும் சூழலும் ஏற்படலாம். இவை எல்லாமே குழந்தையின் மனதில் ஆழப் பதிந்துவிடும். இது ஆரோக்கியமான தல்ல.

**பொய்** -பொய் சொல்லாமல் ஒரு நாளை கடத்துவது என்பது முடியாது என்கிறநிலையில்தான் நாம் இருக்கிறோம். ஆனாலும், இயன்ற வரை குழந்தைகளின் முன் பொய் பேசுவதைத் தவிர்க்கவும். நிறைவேற்ற முடிகிற வாக்குறுதிகளை மட்டுமே கொடுங்கள். வீண் ஆசைகளை உருவாக்கும் பொய்களைக் கூற வேண்டும்.

**புறம் பேசாதீர்**-உங்கள் வீட்டிலுள்ளவரையோ உறவினரையோ புறம் பேசாதீர்கள். புறம் பேசினீர்கள் என்றால், அந்த நபர் பற்றிய உங்கள் குழந்தை யின் மனநிலை மோசமாக மாறக்கூடும் அல்லது அவர் இல்லாதபோது வேறு விதமாகப் பேசும் உங்களைப் பற்றிய சித்திரம் உடையக்கூடும்.

**கேலி** -ஒருவரின் நிறம், உயரம், குள்ளம், தோற்றம் போன்றவற்றைக் கேலி செய்யாதீர்கள். நீங்கள் கேலி செய்யும் குணத்தில் உங்கள் குழந்தைக்கு நண்பர்கள் இருக்கக்கூடும். நீங்கள் செய்யும் கேலிச் சொற்களை, தங்கள் நண்பர் மீதும் பிரயோகிக்கப் பழகிவிடுவர்.

**போதை**-ஒருவேளை சிகரெட் அல்லது மது அருந்தும் பழக்கம் இருக்கும் பட்சத்தில் மறந்தும்கூடக் குழந்தையின் முன் அவற்றைச் செய்துவிடாதீர்கள். ஏன் என்பதை விளக்க வேண்டியதில்லை.

**உறவுகள் மீதான மதிப்பீடு**-நாம் மதிக்கும் உறவுகள் மீதான மதிப்பீட்டைக் குலைக்கும் விதத்தில் நடந்துகொள்ளாதீர்கள். வீட்டில் உள்ள முதியவர்களை மதிக்காமல் நடந்து கொள்வதைப் பார்க்கும்போது அந்த முறையையே குழந்தைகளும் பின்பற்றுவார்கள். மேலும், உறவுகள் மீதான அன்பும் ஈர்ப்பும் குறைந்துவிடும்.

செவ்வாய்க்கிழமை
நியத ஜய
நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 755 | வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2019.03.19
வெற்றி இலக்கங்கள்: 32 33 43 47 | ஆங்கில எழுத்து: E
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 23,679,304/-
web : www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 19.03.2019 | வெற்றி வாரம்: 2480 | வர்ணம்: சிவப்பு
மேடம்
வெற்றி இலக்கங்கள்: 16 30 45 55
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 35, 48, 590/=
20.03.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 421
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.03.19
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 117,661,808/-
A 02 16 18 75
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 559
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,594,395/-
வெற்றி இலக்கங்கள்: 08 28 34 67 | ஆங்கில எழுத்து: G
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 943
சீட்டிழுப்பு திகதி 2019.03.18 திங்கட்கிழமை
L 09 38 45 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,361,748/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Trade Finance & Investments Plc

பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு கிளிநொச்சிக் கிளையில்

| Modal | Reg.Number | Condition |
|---|---|---|
| APHCHE | NP BEZ - 5043 | Running |
| ACTIVA | NPBGC - 9982 | Running |
| ACTIVA | NPBHB - 6782 | Running |
| DIO | NPBHA - 9719 | Running |
| FAZER | NPBGZ - 6582 | Running |
| PULSAR | NPBGX - 2930 | Running |
| DIC | NP BFD - 0831 | Running |
| TWT | NP BFO - 6452 | Running |
| LET | NPBGK - 9280 | Running |
| FAZER | NP BFN - 2962 | Running |
| APACHE | NP BFV - 0291 | Running |
| SHINE | NPBGH - 8708 | Running |

வேலைநாள்தளில் கிளிநொச்சிக் கிளையில்
08.30 am - 05.30 pm பார்வையிடலாம். பணம் செலுத்தியதுடன் அனைத்து ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
நிபந்தனைக்குட்பட்டது.

மேலதிக விவரங்களுக்கு:- 077 212 5848, 077 166 1648, 021 228 0110, 021 228 0108

(IN/9677)(11.17)

## Wanted

A/L படித்த, கணினி அறிவுடைய, ஆங்கிலம் மற்றும் தமிழ் Typing செய்யக்கூடிய பெண் ஊழியர்கள் தேவை.

**070 375 0002**

## வேலையாள்கள் தேவை

Lee Hed ges PLC எனும் ஆடைத் தொழிற் சாலைக்கு தையலில் முன் அனுபவம் உள்ளவர்களும் மற்றும் பஸ் சாரதியும் தேவை. **சங்குவேலி, மானிப்பாய்**

**077 086 8911, 077 5351601, 021 225 6600**

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் தனியார் பாசல் சேவை நிறுவனத்துக்கு (யாழ். நிறுவனத்தின் கிளை) கொழும்பில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண்கள் தேவை.

உணவு, தங்குமிடம் இலவசம்.

(CS/24125)(11,17)

**077 766 7715**

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 10 - 05 - 1927

விண்ணில் 04 - 04 - 2015

### திருமதி பொன்னம்மா நாகலிங்கம்

திதி : பூரணை (20.03.2019)

எம் நினைவுகள் எங்கணும் நிறைந்திருக்கும்
நிறைமதியே நிகிலமே எம் அம்மாவே
நீளும் எம் பயணத்தின் ஒவ்வோர் தடத்திலும்
நிழற்குடை நீங்களே அம்மா
உங்களின் கனவுகளை எம்மனத்துள் விதைத்துள்ளோம்
அவை கனிந்திடும் நாள் கைவரும்
காணிக்கையாக்குவோம் உம் மலரப் பாதங்களில்
அனுதினமும் உங்களை அர்ச்சிக்கின்றோம்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற நுணுவில்
பிள்ளையாரைத் தினமும் துதிக்கின்றோம்

**நுணுவில் பிள்ளையார் கோயிலடி,
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.**

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி இராசம்மா அழகரத்தினம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா அழகரத்தினம் நேற்று (19.03.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அழகரத்தினத்தின் அன்பு மனைவியும் இராசாத்தி அம்மா, இரட்ணசேகரம், காலஞ்சென்ற திலகரத்தினம் மற்றும் தெய்வேந்திரன், திருச்செல்வம் (கனடா), இந்திரகுமார் (லண்டன்), செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரவியம் (ஓய்வுபெற்ற தபால் திணைக்கள ஊழியர்), பாக்கியலெட்சுமி, திரேசம்மா, சுசீலா, கீமாராணி (கனடா), லதா (லண்டன்), பத்மநாதன் (லாவண்யா ஜுவல்லறி உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கந்தவனத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2019) புதன்கிழமை இலக்கம் 203/6, கண்டி வீதி (சரஸ்வதி சனசமூக நிலையத்துக்கு முன் ஒழுங்கை) யிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**203/6, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS24129/11/17)

## வேலைவாய்ப்பு
## Northern Group of Company

**யாழ்.மண்ணில்! - புதிய கிளைக்கு** ஆண், பெண் இருபாலாருக்குமான பதவி வெற்றிடங்கள்.

**தகைமைகள்** :- O/L, A/L கற்றவர்கள், உடல் உள ஆரோக்கியமுள்ளவர்கள்.

**வயதெல்லை** :- 18 - 30 வரை.

No:646, 1st Flour, Hospital Road, Jaffna.

Contract:- **021 790 4574, 077 518 9963, 021 439 4574**

(அலுவலக நேரத்தில் 8.00 am - 5.00pm வரை தொடர்பு கொள்ளவும்)

(CS/24120)(11,17)

## கட்டடம் குத்தகைக்கு

நெல்லியடி சந்தியில் இருந்து 20m தூரத்தில் M.M.V வீதியில் 3500 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உடைய கீழ்த்தள, மேல்தள கட்டடம் நிர்மாணிக்கப்படுகின்றது. **இக்கட்டடம் வங்கி, தனியார் நிறுவனங்கள், Food City** போன்றவற்றுக்கு உகந்தனவையாகக் காணப்படும்.

(ANE/756)(11,17)

**021 226 3021, 077 501 7938**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில்நுட்பபீடம்
அறிவியல்நகர், கிளிநொச்சி
இரண்டாம் வருட 2015/16 கல்வியாண்டு
மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள்
மீள ஆரம்பம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட இரண்டாம் வருட 2015/16 கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 25.03.2019 திங்கட்கிழமை மீளவும் ஆரம்ப மாகும் என்பதனை அறியத்தருகின்றேன். விடுதி வசதிகள் 24.03.2019ல் இருந்து வழங்கப்படும்.

**பதிவாளர்
18.03.2019**

(IN/9675)(11,17)

## கண்ணீர் அஞ்சலி



சைவ பரிபாலன சபையின் தலைவர்
**இ.வசந்தசேனன்** (முன்னாள் இளைப்பாறிய நீதிபதி)
அவர்களின் சகோதரனும் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினருமாகிய

### இராசேந்திரன் வசந்தகுமார்

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திஅடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**சைவபரிபாலன சபை, 66, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்**

**தலைவர், செயலாளர்,
பொருளாளர்
மற்றும் சபை உறுப்பினர்கள்.**

## இதய அஞ்சலி



எமது யா/நவாலி மகா வித்தியாலய
முன்னாள் அதிபரும் சிறந்த மனித
நேயமிக்கவருமான

### இராஜேந்திரன் வசந்தகுமார்

அவர்களது பிரிவால் தவிக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர் நலன்புரி மன்றம்,
யா/நவாலி மகா வித்தியாலயம்**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 06.03.1956 மறைவு 17.03.2019

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியின்
முன்னாள் உப அதிபரும், எமது கல்லூரியின்
வளர்ச்சியில் அளப்பரிய சேவையாற்றிய
காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணி
**இராசேந்திரன்** அவர்களின் மகனும்
தந்தையைத் தொடர்ந்து கல்லூரிக்கு
பலவிதத்திலும் உதவிகளை நல்கி வந்த
சட்டத்தரணி
**இரா. வசந்தசேனன்**
(ஓய்வு நிலை நீதிபதி) அவர்களின் அன்புச்
சகோதரனுமாகிய

### இரா. வசந்தகுமார்

(ஓய்வு நிலை - அதிபர்)

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியுற்று பெருந்துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!*

ஓய்வுநிலை அதிபர் - **யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி
திருமதி சூ.ஜெயவீரசிங்கம்**
ஓய்வுபெற்ற அதிபர் - **திருமதி சா.பாலசுப்பிரமணியம்**
முன்னாள் ஆசிரியர் - **திருமதி ச.ஜெயந்திக்குமார்.**

(CS24124)(13,17)

## தமிழருக்கு...

மன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்துள்ளது. பிரிட்டன் நாடாளுமன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அந்தக் குழு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அங்கு கருத்துத் தெரிவித்த கென்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான றொபேர்ட் ஹல்ஃபோன் தெரிவித்ததாவது: தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு நாம் தொடர்ந்து போராடுவோம். இந்த விடயம் பிரிட்டன் நாடாளுமன்றில் பலமாக ஒலிக்கின்றது. போர் இடம்பெற்ற காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த வன்முறைகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார்.

அதேவேளை, இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்று தமிழர்களுக்கான பிரிட்டன் அனைத்துக் கட்சிக் குழுவின் போல் ஸ்கல்லி குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)

## ஐ.நா....

கொண்டுவந்துள்ள புதிய தீர்மானம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நிறைவேற்றப் படவுள்ளது.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஜெனிவாவில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

'ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை ஒரு பக்க நிகழ்வில் சந்தித்த போது இலங்கை விடயமாக உரையாடினேன். அவரது அறிக்கைக்காக எமது மக்களது நன்றிகளைத் தெரிவித்தேன். நாளைக்கு (இன்று) அந்த அறிக்கையை தான் சமர்ப்பிப்பார் என்று கூறினார். நாளைய (இன்றைய) அமர்வில் இலங்கை விவகாரம் பேசப்படும். அதன் பின்னர் நாளை மறு நாள் (நாளை) தீர்மானம் நிறைவேற்றப்படும்' என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளையும் கூட்டமைப்பினர் நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைபு பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் கால அட்டவணை ஒன்று இணைக்கப்பட வேண்டுமென்றும் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை இணை அனுசரணை வழங்க வேண்டுமென்றும் அதிலிருந்து இலங்கையை விலக விடக் கூடாதென்றும் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கை தொடர்பில் ஏற்கனவே வெளியான தீர்மான வரைபை இலங்கை மீறாமல் பார்த்துக் கொள்வது தமது கடமை என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## மின்னியலாளர் விண்ணப்பம் கோரல்

**மின்னியலாளர் NVQ 4**

விண்ணப்பிக்கும் முகவரி:-

**athithii1@gmail.com**

## விற்பனைக்கு

லொறி 40 - XXXX, கார் 30 - XXXX இலக்கம் உடைய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு - 077 005 0344

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306/077 138 7596**

## சிறுப்பிட்டியில் வேலைவாய்ப்பு

சிறுப்பிட்டி மேற்கில் உணவு பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு பெண்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். அனுபவம் இருந்தால் முன்னுரிமை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்க முடியும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 313 5195, 077 953 0606**

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபல வெதுப்பகம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர்(ஆண்/ பெண்) தேவை.

(CS 24123)(14,17)

**077 713 1594/ 077 314 7580**

## இணை...

ரணை வழங்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, கலாநிதி சரத் அமுனுகம, வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் இலங்கை சார்பாக ஜெனிவா சென்றுள்ளனர். இலங்கை அரசின் நிலைப்பாடு பற்றிய அறிக்கை அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான குழுவால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைபால் நாட்டுக்கு ஆபத்து என்றும், அதற்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கக் கூடாது என்றும் எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்சவும், அவரது ஆதரவுக் கட்சிகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. எனினும் இணை அனுசரணை வழங்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளது.

(எ)

## புலம்பெயர்...

னம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்மானத்தை வழங்காது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் உள்ளதைப் போன்று மாற்று வழிகள் கையாளப்பட வேண்டும். பன்னாட்டு விசாரணை இடம்பெற வேண்டும் என்று அந்த அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

பிரிட்டன் தமிழர் பேரவை, நாடுகடந்த தமிழீழ அரசு, அனைத்துலக ஈழத் தமிழர் பேரவை போன்ற அமைப்புக்களே இந்தத் தீர்மானம் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டுள்ளன.

(எ)


## கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில் 23.05.1935 | ஆண்டவன் மடியில் 18.03.2019

எமது கல்லூரியின் ஆசிரியரும், வளனார் விடுதி இயக்குநருமாகிய
**வண பிதா. ஜினோல்ரன் விஜின்ரஸ்**
அவர்களின் அன்புத் தந்தை

**மனுவேற்பிள்ளை சிறில் இராசநாயகம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அவர்களது துயரில் நாமும் பங்குகொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

## மரண அறிவித்தல்

### அன்ரன் அமல்ராஜ் (தேவரா)



பிறப்பு 04.05.1991 | இறப்பு 19.03.2019

மணியந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் அமல்ராஜ் நேற்று (19.03.2019) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(20.03.2019)புதன்கிழமைபிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வசந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மணியந்தோட்டம்,**
**மனிப்புரி,**
**1ஆம் ஒழுங்கை.**

தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 11 . 07 . 1940



விண்ணக வாழ்வில் 30 . 03 . 2018

### திருமதி பாலசிங்கம் இந்திராதேவி

ஆண்டொன்று சென்றாலும் அகலுமா உங்கள் நினைவு .
ஆலமர விழுதுபோல் தாங்கி அவனியில் வாழ வழிவகுத்தீர்
ஆசைப்பட்டதெல்லாம் நாம் பெற அல்லும் பகலும் உழைத்தீர்
ஆறிட முடியுமா பிரிவுத்துயர் அன்பே வடிவாய் எம்முடன் வாழும்

என்றும் உங்கள் நினைவுகளுடன்

பாலசிங்கம்,
56, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 11.03.1989 | மறைவு 18.03.2019

# மோகன்ராஜ் லக்சன் (சாளி)

**(லக்சன் ரான்ஸ்போட் உரிமையாளர் - வவுனியா)**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பால்பண்ணையை பிறப்பிடமாகவும் வவுனியா தேக்கம்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி மோகன்ராஜ் சாந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் லக்சன் திங்கட் கிழமை 18.03.2019 அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோகனசுந்தரம் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் லில்லிஞானம்மா ஆகியோ ரின் அன்புப் பேரனும் சிவநந்தினி (சுபா)வின் அன்புக் கணவரும் டேனிஷா, திசாந், நிலிசா, கிசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரத்தினம் காலஞ்சென்ற வாசுகி ஆகியோரின் அன்பு மரு மகனும் லக்சனா (சூட்டி), சுதாகரன் (சனா - கராஜ் தாண்டிக்குளம், வவுனியா) சுகேந்தன் (அனு)சாரதி - கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வவுனியா), விமல்ராஜ் (விமல் Feel Free வாடகை கார் உரிமையாளர் - வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரன் (ஜேர்மனி), ரகுபதி இந்திரன்(பிரான்ஸ்), நகுலேந்திரன் (ஜேர்மனி), தெய்வேந்திரன் (யாழ்ப்பாணம்), ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவி (பிரான்ஸ்) பெறா மகனும் சிவதீபன் (தீபன்) அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.03.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 120 A. கண்டி வீதி,**
**தேக்கம்தோட்டம்.**
**வவுனியா. 077 617 8275**

தகவல்:
குடும்பத்தினர்.

# ஏற்றுக்கொள்ள முடியாதது ராகுல் காந்தியின் கருத்து!



இந்துமதி

இறுதிப் போரின்போது இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கும் தமது கட்சிக்கும் எவ்வித தொடர்புமில்லையென காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி கூறியதை எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.


**இறுதிப்போர் இடம்பெற்றபோது காங்கிரஸின் ஆட்சியே இருந்தது**

இறுதிப்போர் இடம்பெற்றபோது காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஆட்சியே இந்தியாவில் அதிகாரத்தைக் கொண்டிருந்தது. மன்மோகன்சிங் தலைமை அமைச்சராகவிருந்தார். வெளிநாட்டில் பிறந்தவர் என்ற காரணத்தினால் அந்தப் பதவியில் அமர முடியாத சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற வகையில் சகல அதிகாரங்களையும் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தார். மன்மோகன்சிங் சோனியாவின் தாளத்துக்கு ஏற்பவே ஆடிக்கொண்டிருந்தார். இந்தியாவின் முன்னாள் அரச தலைவர் பதவியை வகித்த ராஜிவ் காந்தி 1991ஆம் ஆண்டு தற்கொலைதாரி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் விடுதலைப் புலிகள் இருந்தனர் என்று காங்கிரஸ் கட்சியினர் நம்பினார்கள். இதனால் விடுதலைப் புலிகளைப் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணமும் அவர்களிடம் நிறையவே காணப்பட்டது. புலிகளைப் பழிவாங்குவதற்கு இறுதிப் போர் நல்லதொரு வாய்ப்பாக அவர்களுக்குஅமைந்துவிட்டது. பேச்சுக்கள் மூலமாகத் தமது பிரச்சி னைகளுக்குத் தீர்வு கிடைக்காது என்பதை உணர்ந்து கொண்ட இலங்கைத் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள். சுமார் 30 ஆண்டுகள் நீடித்த போரில் ஏராளமான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பெருமளவு சொத்துக்கள் நாசமாகின. அரச படைகள் வேறொரு நாட்டுடன் போரிடுவதைப் போன்று தமிழர் பிரதேசங்களில் கண்மூடித் தனமான வகையில் தாக்குதல்களை மேற்கொண்டன. ஆனால் தமிழ்ப் போராளிகளை மண்டியிட வைக்க முடியவில்லை.

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிராகரித்தனர் விடுதலைப் புலிகள்**

1987ஆம் ஆண்டு ராஜிவ் காந்தி இலங்கைக்கு வந்து அப்போதைய இலங்கை அரச தலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் இணைந்து ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார். இது இந்திய இலங்கை ஒப்பந்தமென அழைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இரண்டும் இணைக்கப்பட்டு இரண்டுக்கும் பொதுவான மாகாணசபை ஒன்று உருவாக்கப்பட்டது. இதை அடியொற்றியதாகவே ஏனைய மாகாணங்களிலும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் மாகாண சபையையும் விடுதலைப் புலிகள் முற்றாகவே நிராகரித்தனர். ஆனால் சில தமிழ்க் குழுக்கள் இவற்றை ஏற்றுக்கொண்டன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைதிப்படை என்ற பெயரில் இந்தியப் படைகள் தமிழர் பகுதிகளில் காலடி எடுத்து வைத்தன. ஆனால் புலிகளை அழிப்பதற்கென ராஜிவ் காந்தியினால் அனுப்பி வைக்கப்பட்டவர்களே அந்தப் படையினர் என்பது பின்னர் தெரிய வந்தது. இந்தி யப்படைகள் புலிகளைத் தேடியழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டன. ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேறவில்லை. பலத்த உயிரிழப்புக்களைச் சந்தித்த பின்னர் தோல்வியுடன் தாயகம் திரும்பிச் செல்லவே அவற்றால் முடிந்தது. பின்னர் ராஜிவ்காந்தி கொலை செய்யப்பட்டதும். இந்தக் கொலைக்கு விடுத லைப்புலிகள் குற்றம் சாட்டப்பட்டதும்அனைவருக்கும்தெரிந்த விடயங்களாகும்.



**புலிகளின் வலிமை கொழும்புக்குத் தெரியும்**

தனித்து நின்று போரிட்டு புலிகளைத் தோற்கடிக்க முடியாதென்பதை இலங்கை அரசு நன்றாகவே தெரிந்து வைத்திருந்தது. இதனால் பிற நாடுகளின் உதவியை நாடியது. புலிகளின் போராட்டத்துக்கு பயங்கரவாத முத்திரையும் குத்தப்பட்டது. இதனால் அமெரிக்கா உட்பட்ட சில நாடுகள் இலங்கைக்கு உதவுவதற்கு முன்வந்தன. இந்தியா முழு அளவில் உதவிகளை வழங்கியது. இறுதிப் போரின் போது எந்த விதமான கருணையும் தமிழர்கள் மீது காட்டப்படவில்லை. தமிழர்கள் அனைவரும் புலிகளாகவே பார்க்கப்பட்டனர். இறுதிப்போரின் போது சுமார் 40 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் அதைவிடக் கூடுதலான எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டனர் என்று வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இறுதிப் போர் படுகொலையில் இந்தியாவுக்கும் தொடர்புண்டு**

இந்தக் கொலைகளுடன் இந்திய அரசுக்கும் தொடர்புகள் உள்ளன. போர் இடம்பெற்ற போது இந்தியா முக்கியபங்கு வகித்துள்ளது. இந்தியப்படையினரும் களத்தில் நின்றனர் என்று தகவல்கள் அப்போது வெளிவந்தன. இதனால் தமிழர்களின் படுகொலைகளுக்கு இந்தியாவின் பங்கும் இருந்தமை தெளிவாக நிரூபணமாகின்றது. காங்கிரஸ் அரசே பதவியில் இருந்ததால் காங்கிரஸ் கட்சிக்கும் இந்தக் கொலைகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கதான் செய்கின்றன.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ள நிலையில் தமிழக மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக ராகுல்காந்தி கூறுவதை எவருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதே வேளை இறுதிப் போர் இடம்பெற்ற போது இந்தியாவின் மத்தியில் காங்கிரஸ் கட்சியும், தமிழ் நாட்டில் தி.மு.கவும் ஆட்சியில் அமர்ந்திருந்தன. போரில் தமிழர்கள் கொல்லப்படுவதை வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமே இந்த அரசுகளால் முடிந்தது. தமிழர்கள் கொல்லப்படுவது தொடர்பாக இந்த இரண்டு அரசுகளும் சிறிதுகூட அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு நினைத்திருந்தால் ஒரு தற்காலிக போர் நிறுத்தத்தையாவது ஏற்படுத்தி தமிழர்களைப் பாதுகாத்திருக்க முடியும். ஆகவே தமிழர்களின் படுகொலைகளில் இந்திய அரசுக்கும் தொடர்புள்ளமை தெளிவாகின்றது.

இதனால் அரசை அமைத்த காங்கிரஸ் கட்சிக்கும் தொடர்பு இருக்கத்தான் செய்கின்றது. ஆகவே ராகுல் காந்தியின் கருத்து ஏற்க முடியாத ஒன்றாகும். இவற்றை இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி தமிழ்நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்

## ஆசிரியருக்கான கடிதம்

# நடமாடும் சேவையின் நோக்கம் என்ன?

பொதுமக்களின் அரச சேவை தொடர்பான பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்பதனை நோக்கமாகக் கொண்டே பிரதேச செயலகங்களில் அவ்வப்போது நடமாடும் சேவை நடத்தப்படுவதாக மக்கள் கருதுகின்றனர். இந்தச் சேவைக்கு சமூகமளித்தும் நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய நிலையுமுள்ளது. உதாரணமாக தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவத்தை உரிய முறையில் நிரப்பி ஆவணங்களுடன் வலி.தெற்குப் பிரதேச செயலகத்தில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது ஒப்படைத்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் இன்றுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்கப்பெறவில்லை. கடந்த ஆண்டு இறுதியில் பிரதேச செயலகத்துக்கு சென்று வினவிய போது கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு அடையாள அட்டை விநியோகம் நடைபெறுதால் விண்ணப்பம் பரிசீலனையிலுள்ளதாக கூறப்பட்டது.

பின்னர் மாதாந்தம் பிரதேச செயலகத்துக்கு சென்று வினவும்போது அவர்கள் ஒன்லைனில் பார்வையிட்டு அச்சுப் பதிவில் உள்ளதாகக் கூறுகின்றனர். இவ்வாறான பதில் என் போன்ற பொதுமக்களுக்கு ஏமாற்றமளிக்கிறது. உரிய அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து உரிய தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

**ச.ஞானகுமார்**
**மருதனார்மடம்.**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத் காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# இரு தலைக் கொள்ளி எறும்பாகச் சம்பந்தன்

தாம் எப்போதும் ஏமாற்றப்படுகிறார்கள் என்றே தமிழ் மக்கள் உணர்கின்றார்கள் எனத் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பிரிவினது முன்னாள் செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் தன்னைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும் அதன் வழிப்படுத்தலில் தமிழ் மக்களாலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்தத் தடவை ஆட்சி, அதிகார பீடத்துக்கு கொண்டுவரப்பட்டாலும்கூட அவர்களால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்கிற உண்மையையே ஜெப்ரி பெல்ட்மனுக்கு நாசுக்காகச் சொல்லியிருக்கிறார் சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை அரசின் புதிய அரசமைப்பு முயற்சிக் குழுவின் தீவிர அங்கத்தவருமான ஏப்ரகாம் சுமந்திரன் ஜெனிவாவில் ஊடகங்களிடம் தெரிவித்திருக்கும் கருத்தின்பின்னணியில் சம்பந்தனது கருத்தையும் பொருத்திப் பார்ப்பது அவசியமானது.

புதிய அரமைப்புத் தொடர்பில் கூடி ஆராயப்பட்ட விடயங்கள் அடங்கிய அறிக்கை அதாவது நகல் வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது, ஆனால் அதற்கு மேல் இதனை முன்நகர்த்திச் செல்லும் அரசியல் விருப்பு யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவித்திருக்கிறார் சுமந்திரன்.

ஆக மொத்தத்தில் மைத்திரி – ரணில் கூட்டை நம்பித் தாம் மோசம் போய்விட்டோம், ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதையே சம்பந்தன் வேறு வார்த்தைகளில் கூறியிருக்கின்றார். நம்பிக்கையையும் வாக்குறுதிகளையும் வழங்கிவிட்டு அவற்றை நிறைவேற்றாமல் விடுவது சிங்களத் தலைவர்களுக்கு ஒன்றும் புதிதில்லை. தந்தை செல்வா காலந்தொட்டு மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படுவதுதான் இது. அதற்குள் இந்தத் தடவை சம்பந்தன், சுமந்திரன் ஆகிய இருவரும் அகப்பட்டுக் கொண்டார்கள். அவ்வளவே!

அதேநேரத்தில் சம்பந்தன் மற்றொரு விடயத்தையும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியிருக்கிறார். இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற பன்னாட்டு அழுத்தம் மேலும் தேவை என்கிறார் அவர். இதே அழுத்தத்தைப் பன்னாட்டுச் சமூகம் மட்டுமல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கொடுக்க முடியும். அரசுக்கு எதிராக ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் போராட்டங்கள் மூலம் இந்த அழுத்தத்தைக் கொடுக்க முடியும். ஆனால் கூட்டமைப்பு அத்தகைய அழுத்தங்களைக் கொடுக்க முன்வருவதில்லை.

அண்மைக்காலங்களில் மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்குக்கூட கூட்டமைப்பு ஆதரவு வழங்கியதே தவிர, அவற்றுக்குத் தலைமை தாங்கி அரசுக்கு அழுத்தம் கொடுக்கத்தக்க பெரும் போராட்டங்கள் எதனையும் நடத்தவில்லை. அதற்குக் காரணம், அத்தகைய அழுத்தத்தை தற்போதைய ஆட்சிக்குக் கொடுப்பதன் மூலம் மகிந்த ராஜபக்ச தரப்பினர் ஆட்சியைக் கைப்பற்றி விடுவார்களோ என்கிற அச்சம். ஐப்பசி 26ஆம் நாள் அரசியல் சதிக்குப் பின்னால் இந்த விடயத்தில் கூட்டமைப்பு இன்னும் அதிக கவனமாகவே இருக்கின்றது.

கூட்டமைப்பின் இந்த இக்கட்டு நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ரணில் தலைமையிலான ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் தமிழர்களை ஏமாற்றி வருகின்றனர். சம்பந்தனோ இந்த ஆட்சியை பாம்பென்று அடிக்கவும் முடியாமல் பழுதென்று மிதிக்கவும் முடியாமல் திண்டாடுகின்றார். இரு தலைக் கொள்ளி எறும்பின் நிலையை ஒத்திருக்கிறது அவரது அரசியல் சூழல். அதனாலேயே பன்னாட்டுச் சமூகத்தைத் துணைக்கு அழைத்துக் கொண்டே இருக்கிறார் சம்பந்தன்.



# மக்கள் உரிமைகள் மறைந்தால் ஜனநாயகமும் மறைந்து போகும்

சேரலாதன்

ஜனநாயகம், மக்களாட்சி என்றெல்லாம் வாய்கிழியக் கூறுகின்றோம். அரசியல்வாதிகளும் இவற்றைக் கூறியே பதவியில் அமர்ந்து கொள்கின்றனர். ஜனநாயகத்தில் நாம் எல்லோருமே மன்னர்கள் என்று கூறும்போது புல்லரித்துப் போய் நிற்கின்றோம். தேர்தல்கள் இடம்பெறும் வேளைகளில் மக்களை மன்னர்கள் போன்றே அரசியல்வாதிகள் மதிக்கின்றனர். அவர்கள் முன்பாகக் கூனிக்குறுகி நிற்கின்றனர். தேர்தல்கள் இடம்பெற்றதன் பின்னர் தாம் வாக்களித்தவர்களைக் காண்பதற்குத் தவம் கிடக்க வேண்டிய நிலைதான் மக்களுக்கு.

மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்ற அந்தஸ்து இந்தியாவுக்கு உண்டு. மொழி ரீதியாக பல மாநிலங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. ஹிந்தி மொழியைப் பேசுகின்ற மக்கள் பெரும்பான்மையினராக அங்கு வசிப்பதால் ஆட்சியில் அதிக உரிமைகளைக் கொண்டவர்களாக இந்த மக்களே காணப்படுகின்றனர். நாட்டின் ஆட்சி மொழியாகவும் ஹிந்தியே பயன்படுத்தப்படுகின்றது. ஹிந்தி இனத்தைச் சேர்ந்த ஒருவரே அந்த நாட்டின் தலைமை அமைச்சர் பதவியை வகிக்க முடியுமென்ற எழுதாத விதியொன்றும் அங்கு காணப்பட்டது. பல்வேறு காரணங்களால் பின்னர் அந்த நடைமுறையில் தளர்வு ஏற்பட்டது. ஹிந்தி இனத்தவர் அல்லாத சிலரும் தலைமை அமைச்சர் பதவியை வகித்தனர்.

### இந்திய அரசியலில் சாதிப்பாடு அதிகம்

இந்திய அரசியலில் சாதிப் பாகுபாடு முக்கிய இடத்தை வகிக்கின்றது. சாதி அடிப்படையில் கட்சிகளும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. ஒரு ஜனநாயக நாட்டில் இதை அனுமதிக்க முடியாது. ஏற்றுக்கொள்ளவும் முடியாது. இதைவிட மத ரீதியாகவும் மக்கள் பிளவுபடுத்தப்பட்ட நிலையில் அங்கு காணப்படுகின்றனர். குறிப்பாக இந்துக்களும் முஸ்லிம்களும் நாடு அந்நியரிடமிருந்து சுதந்திரமடைந்து 72 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் சுமுகமான உறவைக் கொண்டிருக்கவில்லை. அரசியலிலும் இதன் பிரதி பலிப்பைக் காண முடிகின்றது. இதன் விளைவாகத் தேர்தல் பரப்புரைகளின்போதும் தேர்தல் இடம்பெறும்போதும் வன்முறைகள் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. இதனால் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையை இழந்து நிற்கின்றனர்.

### இலங்கையில் ஜனநாயகம் தோல்வியிலேயே உள்ளது

எமது நாட்டைப் பொறுத்த வரையிலும்கூட ஜனநாயகமும் மக்களாட்சித் தத்துவமும் தோல்வியடைந்திருப்பதையே காண முடிகின்றது. இங்குள்ள மக்களிடையே இனரீதியான வேறுபாடுகள் நிறையவே காணப்படுகின்றன. ஆட்சியதிகாரங்கள் முழுவதையும் பெரும்பான்மையினரே தம்வசம் வைத்துக்கொள்கின்றனர். சிறுபான்மையினத்தவர்கள் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் பதவிகளைக் கனவிலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத நிலையில் உள்ளனர். இலங்கையின் 71 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக்கூடத் தமிழர்கள் இரண்டு தடவைகள்தான் வகித்திருக்கின்றனர். இறுதியாக கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் அந்தப் பதவியை வகித்தார். ஆனால் இதைக்கூடப் பொறுக்க முடியாத இனவாதிகள் அவரை அந்தப் பதவியிலிருந்து கபடத்தனமான வகையில் அகற்றிவிட்டனர். இனவாதம் பேசிக்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாப்பதென்பது இயலாத காரியமாகும். இனைஞர்களுக்கிடையில் ஐக்கியம் தோன்றும்போதுதான் ஜனநாயகமும் செழித்து வளரும்

அமெரிக்காவுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட கறுப்பின மக்கள் கணிசமான அளவில் அங்கு வாழ்கின்றனர். விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் கறுப்பின மக்களே அமெரிக்க நாட்டுக்கு அதிகளவில் வெற்றிகளை ஈட்டிக் கொடுக்கின்றனர். இந்த இனமக்கள் வாழ்க்கின்ற வெள்ளையின மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நாடுகளிலும் இதேநிலைதான் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் இந்த நாடுகளில் வாழ்ந்த கறுப்பின மக்கள் எதிர்கொண்ட இன்னல்கள் ஏராளம். தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்கள் பெரும்பான்மையினராக வகித்தபோதிலும் சிறுபான்மையி னரான வெள்ளையர்களால் அடிமைகள் போன்று நடத்தப்பட்டனர். அவர்களது ஜனநாயக உரிமைகள் யாவும் பறிக்கப்பட்ட நிலை அங்கு காணப்பட்டது. இதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த கறுப்பினத் தலைவரான நெல்சன் மண்டேலா 26 ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்களால் கறுப்பின மக்களுக்கு வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது.



சிம்பாவே நாட்டிலும் இதேநிலைதான் ஏற்பட்டது. மிகப்பெரிய ஜனநாயக நாடென சொல்லிக்கொள்ளும் அமெரிக்காவில்கூட கறுப்பின மக்கள் தமது உரிமைகளை இழந்த நிலையிலேயே வாழ்ந்தனர். பொது இடங்களில்கூட வெள்ளையர்களால் இந்த மக்கள் புறமொதுக்கப்பட்டனர். இந்த நிலை இன்னும்கூட ஓரளவு காணப்படுகின்றது. இந்த நிலையில் கறுப்பினத்தைச் சேர்ந்தவரான பராக் ஒபாமா அந்த நாட்டின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் எட்டு ஆண்டுகள் அந்தப் பதவியில் அமர்ந்திருந்தார். இது அமெரிக்க வெள்ளையின மக்களின் பரந்த மனப்பான்மையை எடுத்துக்காட்டியது. அமெரிக்கா ஜனநாயகத்துக் கிடைத்த பெருவெற்றியெனவும் இதைக் கூறலாம். ஆனால் உலகின் பலநாடுகளில் வாழ்கின்ற ஒரு பகுதி மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை இழந்த நிலையிலேயே வாழ்கின்றனர். இது தொடர்பாக எவருமே அக்கறை காட்டுவதில்லை. ஒரு நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் தமது சகல உரிமைகளையும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழும்போதுதான் அந்த நாட்டில் ஜனநாயகம் செழித்து வளர்ந்திருப்பதாகக் கூறமுடியும். மக்களாட்சிக்கும் இதுவே வழிசமைக்கும். அதைவிடுத்து ஒருபகுதி மக்களின் உரிமைகளைப் பறித்தொடுத்துவிட்டு அவர்களை அடிமைகள்போன்று நடத்திக்கொண்படு ஜனநாயகம், மக்களாட்சி எனக் கூக்குரலிடுவதால் எதுவும் இடம்பெறப்போவதில்லை.


யாழ்ப்பாணம
ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
தேர்த்திருவிழா
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கோபாலச் செட்டியாரின் திருமகனான வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் இற்றைக்கு இருநூற்றுப்பதினொரு வருடங்களுக்குமுன் (கி.பி 1790) கட்டுவிக்கப்பட்டது. பெரும் பொருள் ஈட்டி தனவந்தரான வைத்திலிங்கச் செட்டியார் தனக்கென ஒரு மாளிகை அமைக்க எண்ணிய போது கூழங்கைத்தம்பிரான் செட்டியாரிடம் உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த பரம பிதாவாகிய வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க வேண்டும் என்று கூறினார். செட்டியார் அதற்குச் சம்மதித்தார். சைவ ஆலயங்களை இடித்தும், சைவ சமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்தை பரப்பி வந்த ஒல்லாந்தர் மத்தி யில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட வைத்திலிங்கச் செட்டியார் அவர்கள் தனது செல்வாக்கினைப் பாவித்து வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலை கட்டுவதற்கு ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்றார். 1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 இல் வேலையினைப் பூர்த்தி செய்து, வாலாம்பிகா சமேத வைத்தீஸ் வரப் பெருமானுக்கான பரிவாரக் கோயில்களையும் அமைத்து, அதே ஆண்டிலேயே (1790) சாதாரண வருடம் சித்தரை மாதம் பூர்வபட்ச சப்தமியோடு கூடிய புனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் செய்வித்தார். நித்திய நைமித்தியங்கள் கிரமமாக நடைபெற்றுவரச் செய்தார்.
20.03.2019 புதன்கிழமை தேர்த்திருவிழா
காலை 7.30 மணிக்கு வசந்தமண்டப பூசையுடன்
ஆரம்பமாகி 9.00 மணிக்கு பஞ்சரதரோகணம்


மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்
"நீரினால் ஏற்படும் தொற்று நோய்களுக்கும் நீரிலுள்ள கடினமான தாது உப்புக்களால் ஏற்படும் சிறுநீரக கல், பித்தப்பை கல்,
சிறுநீரக அழற்சி போன்ற நோய்களை தவிர்ப்பதற்கு வடிகட்டிய நீரினை பருகுவது வைத்தியர்களால் பரிந்துரைக்கப்படுகின்றது."
மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது
வடமாகாணத்தில் சகல விதமான நீர் சார்ந்த பிரச்சினைகளுக்கும் உயர்தர
தீர்வினை வழங்கி வருகின்றது.
இலகு தவணை கொடுப்பனவு முறையிலும்
பெற்றுக்கொள்ளலாம்
மாதம் 3642/=லிருந்து
(நிபந்தனைக்கு உட்பட்டது)
Everpure Hi-Tec (Pvt) Ltd.
No.341, K.K.S Road, Jaffna.
HOTLINE: 075 331 3310
Tel: 021 222 6888


ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி பேரருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்
VMK JEWELLERY
நியூ வீ.எம்.கே
ஜுவல்லறி
80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515
நியூ
வீ.எம்.கே
ஜுவல்லர்ஸ்
வீ.எம்.கே ஜுவல்லர்ஸ்
V.M.K JEWELLERS
60 வருடங்களுக்கு மேலாக வட மாகாணத்தில் திருமண வைபவங்களுக்கு
கலைநயத்துடன் கூடிய டிசைன்களில் தங்க நகைகளை உங்களுக்கு ஏற்ற
விதத்தில் வடிவமைத்து கொடுக்கும் கைராசியான ஸ்தாபனம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
021 227 1616 / 077 7849 369


KIRUBA
LEARNER



# கொள்ளைக்காரர் காவலாளியாயிற்றார்!

*பரப்புரையில் ராகுல் காட்டம்*

கர்நாடகா,மார்ச்.20

இந்திய நாடாளுமன்றத் தேர்தலையொட்டிக் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கர்நாடகாவில் பரப்புரையில் ஈடுபட்டார். அந்தப் பரப்பரையில், கொள்ளைக்காரர்களாக இருந்தவர்கள் நாட்டின் காவலாளிகளாக மாறியிருக்கின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பா.ஜ.க தலைவர்கள் தங்களைக் காவலர்கள் எனக்கூறி வருகின்றனர். மோடி கீச்சகத்தில் காவலர் நரேந்திர மோடி என மாற்றித் தானும் நாட்டின் காவலாளி என்கிறார்.

ஆனால் அவர் கடந்த 5 ஆண்டுகளாக அனில் அம்பானி, அதானி, விஜய் மல்லையா, நீரவ் மோடி, லலித் மோடி ஆகியோருக்கு மட்டுமே காவலாளியாக இருந்துள்ளார். ரபேல் விவகாரத்தில் அம்பானிக்கு மோடி ரூ. 30 ஆயிரம் கோடியை வழங்கியுள்ளதை இங்குள்ள பத்திரிகைகள் விசாரணை செய்து அம்பலப்படுத்தின.

கொள்ளையில் ஈடுபட்டிருந்த மோடி காவலாளி ஆகிவிட்டார். இப்போது தான் தலைமை அமைச்சர் இல்லை, காவலாளி எனச் சொல்லி மக்களை ஏமாற்றுகிறார் - என்றார்.



# பூமியை அண்மித்து வெடித்தது விண்கல்

*2018இல் நடந்ததை கண்டறிந்தது 'நாசா'*

வோஷிங்டன்,மார்ச்.20



புவியின் வளிமண்டலப் பகுதியில் பெரியதொரு விண்கல் வெடித்துச் சிதறியதாக அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா தெரிவித்தது. இந்த விண்கல் வடக்குப் பசுபிக் பெருங்கடலுக்கு மேலாகவுள்ள வளிமண்டலப் பகுதியில் 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வெடித்துச் சிதறியுள்ளது.

பூமியை அண்மித்து, அதன் வளிமண்டலப் பகுதிக்குள் நுழையும் தறுவாயில் குறித்த விண்கல் வெடித்துச் சிதறியிருக்கிறது. கடந்த 30 ஆண்டுகளில் வெடித்துச் சிதறிய இரண்டாவது பெரும் விண்கல் இதுவாகும்.

வளிமண்டலத்தில் தொலைவுப் பகுதியில் நடந்த இந்த வெடிப்புக் குறித்து நாசா தற்போதே தெரியப்படுத்தியுள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, ரஷ்யாவில் உள்ள செல்யபின்ஸ்க் நகரத்தின் மீது இதுபோன்று பெரியதொரு விண்கல் வெடித்தது. ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் பெரிங் கடலின் மீது வெடித்து சிதறி அதுவும் பெரிதாகக் கவனிக்கப்படவில்லை. 2ஆம் உலகப் போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுகுண்டு வெளிப்படுத்திய ஆற்றலைவிட, 10 மடங்கு அதிகமான ஆற்றல் இந்த விண்கல் வெடித்தபோது வெளியானது என்று தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு நூறு ஆண்டுகளுக்கு இரண்டு அல்லது மூன்று முறைதான் இவ்வளவு பெரிய விண்கல் பூமியை நெருங்கி வெடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக 'நாசா' தெரிவிக்கிறது.

### நியூஸி. துப்பாக்கிச் சூடு பற்றிச் சர்ச்சையான கருத்து

# நாடாளுமன்ற உறுப்பினருக்கு முட்டை அடி

மெல்போர்ன்,மார்ச்.20

நியூஸிலாந்துத் துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புபட்டு முஸ்லிம்கள் குறித்து சர்ச்சைக்குரிய விதத்தில் கருத்துத் தெரிவித்த ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினரின் தலையில் சிறுவன் ஒருவன் முட்டையால் அடித்தான்.

நியூஸிலாந்தில் கிறிஸ்ட் சர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமையன்று முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 49பேர்சாவடைந்தனர். ஏராளமானவர்கள் காயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புடைய சந்தேக நபராக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரெண்டன் டாரண்ட் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் கிறிஸ்ட் சர்ச் துப்பாக்கிச் சூடு குறித்து ஆஸ்திரேலிய வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினரான பிரேசர் என்பவர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்தார். அதில் அவர் பேசும்போது, முஸ்லிம் களை நியூஸிலாந்தில் அனுமதித்ததால்தான் கடுமையான சூழலைச் சந்தித்திருக்கிறது என்று சாரப்படத் தனது கருத்தை முன்வைத்தார்.



அவர் இந்தக் கருத்தைச் சொன்னதும் அருகில் இருந்த 17வயது சிறுவன் கையிலிருந்த முட்டையை அவரது தலையில் அடித்தான். இதனைச் சற்றும் எதிர்பாராத பிரேசர் சிறுவனைத் தாக்கினார். இந்த விடயம் பூதகரமாகிப் பொலிஸ் விசாரணைக்கும் இட்டுச் சென்றுள்ளது. இந்த நிலையில் பிரேசரின் கருத்துக்கு ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் மோரிசன் உட்படப் பலர் கண்டனம் தெரிவித்தனர்.

# நெதர்லாந்திலும் துப்பாக்கிச் சூடு 3 பேர் சாவு; துப்பாக்கிதாரி கைது

அம்ஸ்ரார்டெம்,மார்ச்.20

நியூசிலாந்து மசூதிகளில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்து, கடந்த திங்கட்கிழமை நெதர்லாந்தின் யுடெர்ட் நகரிலும் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் 3பேர் சாவடைந்தனர்.

பலர் காயமடைந்தனர். உடனடியாக நெதர்லாந்துப் பொலிஸார் யூட்ரெக்ட் நகரம் முழுவதும் துப்பாக்கிதாரியைத் தேடும் நடவடிக்கையில் இறங்கினர். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் கைது செய்யப்பட்டார்.

துருக்கியைச் சேர்ந்த 37 வயதான கோக்மென் டானிஸ் என்ற நபரே துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 3 கிலோமீற்றர் தொலைவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரின் நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவர் ஐ.எஸ். இயக்கத்துடன் தொடர்புடையவரா? என்ற கோணத்தில் விசாரணையை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் குறித்து மிகுந்த கவலை கொள்வதாக அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் மார்க் ருட்டே தெரிவித்தார்.



# இன்றைய நாள்



**மேடம்:** நண்பர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் குறைகளை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. முக்கிய செலவுக்கு சேமிப்பு கரையும். பணியாளர்கள் பணிச்சுமையால் சிரமப்படுவர்.



**இடபம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர்.தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு பின்பற்றவும்.



**மிதுனம்:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். மனதில் நிம்மதியும், பெருமிதமும் ஏற்படும். தொழில் வியாபார வளர்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும்.



**கடகம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். நண்பரின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கை அடைவீர்கள். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.



**சிம்மம்:** திகைப்பு தந்த பணியை எளிதில் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை பெருகும். லாபம் உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.



**கன்னி:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரம் செழிக்க நவீன மாற்றம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.



**துலாம்:** பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில்வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.



**விருச்சிகம்:** வசீகரத் தன்மையுடன் பேசுவீர்கள். நற்குணம் உள்ளவர்களின் நட்பு கிடைக்கும்.தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள்.



**தனுசு:** சிலர் உங்களிடம் எதிர்மறையாக பேசுவர். பெருந்தன்மையுடன் விலகுவது நல்லது. தொழில்வியாபாரத்தில் லாபம் சுமாரான அளவில் இருக்கும். பணவரவு சுமாராக இருக்கும்.



**மகரம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.தொழிலில் குறுக்கிடும் தடைகளை சரி செய்வீர்கள். பணவரவு சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைப் பெறுவர்.



**கும்பம்:** எண்ணம், செயலில் இனிமை நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் திருப்திகரமாக இருக்கும்.



**மீனம்:** உங்கள் செயலில் நேர்மை நிறைந்திருக்கும்.தொழில் வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும். கூடுதல் லாபம் கிடைக்கும். பெண்கள் சுப நிகழ்ச்சியில் பங்கேற்பர்.

# இணை அனுசரணை வேண்டாம் தூதுவர்களுடன் உடன் பேசுங்கள்

## கூட்டு எதிரணியின் தலைவர்கள் அரச தலைவர் சிறிசேனவுக்கு கடிதம்

கொழும்பு, மார்ச் 20

ஐ. நா. மனித உரிமைப் பேரவையில், நாட்டுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கவுள்ள நாடுகளின் தூதுவர்களுடன் அரசதலைவர் கலந்துரையாட வேண்டும் என்றும், இணை அனுசரணை வழங்கும் விடயத்திலிருந்து முழுமையாக விலகிக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கூட்டு எதிரணியின் தலைவர்கள் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அரசமைப்புத் திருத்தத்தை மறுசீரமைப்புச் செய்தலை கண்காணித்தல், இராணுவம், பொலிஸ் பிரிவினருக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தல், அதிகார பகிர்வு தொடர்பிலான விடயங்களை நிறுவுதல், பாதுகாப்புத் துறையின் சட்டதிட்டங்களை நீக்குதல், திருத்தல், இராணுவத்தினருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல், பன்னாட்டு நீதிபதிகளின் தலையீட்டை ஏற்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இணையனுசரணை வழங்குவதாக குறிப்பிடப்பட்ட தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், இராணுவத்தினர் மற்றும் முக்கிய பொலிஸ் தரப்பினர் குறிப்பிடப்பட்ட நாடுகளுக்குச் செல்வதற்கு அந்த நாடுகளில் தடைகள் விதிக்கப் பட்டன.

இந்தத் தீர்மானம் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்ற நாம் முற்படும் போது நாட்டின் சுய இறைமையை விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். நாட்டுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் தீர்மானங்களிலிருந்து விடுபட வேண்டியது அவசியமாக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் தாங்கள் நேரடிக் கவனம் செலுத்த வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் இந்தமுறை இடம்பெறும் மனித உரிமைப் பேரவையில் இணையனுசரணை வழங்குவதாகக் குறிப்பிட்ட தீர்மானத்திலிருந்து விலகிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். எமது நாட்டுக்கு எதிராகத் தீர்மானங்கள் முன்வைக்கத் தீர்மானித்துள்ள நாடுகளின் தூதர்களுடன் கலந்துரையாடல் முன்னெடுப்பது அவசியம் என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, இலங்கை கம்யூனிசக் கட்சியின் தலைவர் ராஜா கொல்லுரே, சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, இலங்கை மக்கள் கட்சியின் தலைவர் அசங்க தவரத்ன, தேச விமுக்தி மக்கள் முன்னணியின் தலைவர் டி. கலங்சூரிய, இடதுசாரிக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

(த)

# கரன்னகொடவிடம் மீண்டும் விசாரணை

கொழும்பு, மார்ச் 20

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, மூன்றாவது தடவையாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில், 14 ஆவது சந்தேக நபராக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையில் இருந்து தப்பிக்க தலைமறைவாக இருந்தார்.

தன்னைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்வதற்கு உயர்நீதிமன்றத்தில், தடை ஆணை கோரியிருந்த அவருக்கு, உயர் நீதிமன்றம் சாதகமான உத்தரவை வழங்கியிருந்தது.

கடந்த 11ஆம் திகதி அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய, அவரிடம் காலை தொடக்கம் மாலை வரை விசாரணைகள் நடத்தப்பட்டன. அதற்குப் பின்னர், மீண்டும் ஒருமுறை அவரிடம் 6 மணிநேர விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் மூன்றாவது தடவையாக அவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ளது.

(த)

# வழக்குகள் மீளப் பெறப்பட்டன: ஜோன்ஸ்டன் எம்.பி. விடுதலை

கொழும்பு, மார்ச் 20

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 4 வழக்குகளை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மீளப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த 4 வழக்குகளில் இருந்தும் அவரை விடுதலை செய்வதாக நீதிமன்றம் அறிவித்தது.

இந்த வ்ழக்கு கொழும்பு தலைமை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்குகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக அவற்றை மீளப்பெற்றுக் கொள்வதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

அதனடிப்படையில் குறித்த வழக்குகளை மீளப்பெற்றுக்கொள்ள தலைமை நீதிவான் அனுமதி வழங்கி, பிரதிவாதியான ஜோன்ஸ்டன் பெர்னான்டோவை விடுதலை செய்யுமாறும் உத்தரவிட்டார்.

2010 முதல் 2014ம் ஆண்டுவரையான காலப் பகுதியில் முன்னாள் கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தனது சொத்து விவர அறிக்கையைச் சமர்ப்பிக்காததன் காரணமாக இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் குற்றமிழைத் துள்ளார் என்று கூறி இலஞ்சஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது.

(த)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகால் நடத்தப்படும் பயிச்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிற்சி நெறிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் கற்பதற்கு ஆர்வமுள்ள பாடசாலை யை விட்டு விலகியவர்களை விண்ண ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திர ராஜா கேட்டுக்கொண்டுள்ளனர்.

தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆடை வடிவமைப்பும் தயாரிப்புப் பயிற்சி , இராமநாதன் கல்லூரியில் அழகுக்கலைப் பயிற்சி ,தாவடி இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலையில் சிங்கள மொழிப் பயிற்சி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை அழகுக் கலைப் பயிற்சி நடைபெறும் நிலையங்களில் விண்ணப்பங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பயிற்சி நெறிகள் யாவும் பகுதி நேரமாக ஆறு மாதங்கள் நடைபெறவுள்ளன.

(க-ரி)

# செயற்கை மழை பெற தயாராகின்றது திட்டம்

## தாய்லாந்து நிபுணர்களுடன் இலங்கையில் தீவிர நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

வறட்சி தாண்டவமாடத் தொடங்கியுள்ள நிலையில், செயற்கை முறையில் மழையை உருவாக்கும் திட்டமொன்றை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தாய்லாந்து நிறுவனமொன்றின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

மின்வலு, சக்திவலு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ச ஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் வறட்சியுடனான காலநிலை சில பகுதிகளில் தொடர்வதால் சுமார் 10ஆயிரத்து 800க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மிக முக்கிய மான பல நீர்த்தேக் கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. இந்த நிலையில் செயற்கை மழை அவசியப்படுகிறது என்று அமைச்சு தெரிவிக்கிறது.

வறட்சியுடனான காலநிலை நிலவும் தருணங்களில் வானில் காணப்படுகின்ற மேகக் கூட்டங்க ளுக்குள் இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்களைச் செலுத்தி, மழை உருவாக்கப்படவுள்ளது. இதற்காக தாய்லாந்து நாட்டின் நிபுணர்கள் சிலர் சில தினாங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து ஆராய்ந்தனர். அதன்படி இலங்கையில் மழையை உருவாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்று கூறியுள்ளனர். அந்த நிபுணர்கள் எதிர்வரும் சில தினங்களில் மீண்டும் வருகை தரவுள்ளனர். வந்ததும் மழையை உருவாக்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது என்றும் அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முதற்கட்ட நடவடிக்கைகள் மலையகத்தின் காசல்ரீ மற்றும் மவுசாகலை ஆகிய நீர்த்தேக்கங்களை அண்மித்த பகுதிகளை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.

சோடியம் குளோரைட், கல்சியம் குளோரைட், கல்சியம் ஒக்சைட் மற்றும் ஐஸ் கட்டிகளைப் பயன்படுத்தி மழையை உருவாக்கும் தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வானூர்தியில் எடுத்துச் செல்லப்படும் இந்த ரசாயனப் பதார்த்தங்கள் வானூர்தி மூலமாக வான் நோக்கிக் கொண்டு செல்லப்பட்டு மேகக்கூட்டங்களுக்குள் செலுத்தப்படும். இதன் மூலமாக மேகக்கூட்டங்களை அதிகரிக்கச் செய்து, மழை உருவாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் இலங்கை வானூர்திப்படை, இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியனவற்றின் ஒத்துழைப்புடன் நகர்த்தப்படுகிறது என்று அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழா இன்று முதல் ஆரம்பம்

குருநகர், மார்ச் 20

பாலைதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தலத் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் இன்று 20ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளன. கொடியேற்றத்தைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். யாத்திரைத் தலத் திருவிழா இன்று தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை வரை நடைபெறும் என இந்த ஆலயத்தின் பரிபாலகராக அருட்பணி செய்யும் வலைப்பாட்டு ஆலயப் பங்குத்தந்தை வண பிதா எம்.ரி.அலோய் அருள்நேசகுமார் அடிகளார் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்குப் பெரிய சிலுவைப் பாதையைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். மறுநாள் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குத் திருச்சிலுவைப் பாதை, நற்கருணைப் பெருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆசீரும் இடம்பெறும். மறுநாள் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 5 மணிக்கு திருவிழா நாளின் முதல் திருப்பலியும் காலை 6.45மணிக்கு திருவிழாத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாத் திருப்ப லியை யாழ்ப்பாண குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் ஒப்புக் கொடுக்கவுள்ளார். திருவிழாத் திருப்பலி யைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் புனிதரின் திருச் சொரூப ஆசிரும் இடம்பெறும்.

வலைப்பாடுபங்கால் நிர்வகிக்கப்படும் இந்தக் கடல் கடந்த யாத்திரைத் தலத்துக்கு அல்லைப்பிட்டி, வலைப்பாடு, பள்ளிமுனை, குருநகர், நாவாந்துறை, பாசையூர் பங்குளில் இருந்து இயந்திரப் படகுகள், வள்ளங்கள் மூலம் வருடா வருடம் கத்தோலிக்க மக்கள் சென்று பங்குபற்றி திரும்புவர். இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளைப் பூநகரிப் பிரதேச செயலகமும், பூநகரிப் பிரதேச சபையும் ஏற்பாடு செய்துள்ளன.

திருவிழாவில் கலந்துகொள்ளச் செல்லும் இறைமக்கள் அனைவரும் திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து அன்று காலையேதமது இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட வேண்டும் என யாழ்.ஆயர் அறிவித்தல் தந்துள்ளதாக இந்த ஆலயப் பரிபாலகர் வண.பிதா அலோய் அருள்நேசகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

(எ-51)

# பேரணியால் போக்குவரத்து பாதிப்பு

கொழும்பு, மார்ச் 20

ஆர்ப்பாட்டம் காரணமாக அரசதலைவர் செயலகத்துக்கு முன்பாக காலி வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

புத்தளம், அறுவக்காலு பிரதேசத்தில் குப்பைகளைக் கொட்டும் அரசின் திட்டத்தை நிறுத்துமாறு கோரியும், மக்களைப் பாதுகாக்குமாறு கோரியும் நேற்றுப் பேரணி நடைபெற்றது. பேரணி தொடர்பில் அரசதலைவருடன் பேசுவதற்காக பேரணியில் கலந்து கொண்ட குழுவொன்று அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. இதனால் அங்கு வாகன நெரிசல் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறுகோரி சில மாதங்களாக அங்குள்ள மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (த)

## காரைநகர் மருத்துவமனை

# சேவைகள் தொடர்பில் நோயாளர்கள் விசனம்

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20

காரைநகர் பிரதேச மருத்துவமனையின் சேவைகள் தொடர்பில் மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். காரைநகர் பிரதேச மருத்துவமனை இது வரை காலமும் இருந்த தரத்தில் இருந்து குறைந்த தரமுடைய மருத்துவமனையாக மாற்றமடைந்துள்ளது என்றும் தெரிவித்தனர்.



பழைமைவாய்ந்த மருத்துவமனைகளில் காரைநகர் மருத்துவமனையும் ஒன்று. இந்த மருத்துவமனை கடந்த 2017ஆம் ஆண்டு புதுப் பொலிவு பெற்று அப்போதிருந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலனால் திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்டு இரு ஆண்டுகள் ஆகின்ற போதும் அந்த மருத்துவமனையின் சேவைகளில் குறைபாடுகள் உள்ளன என்று மக்கள் விசனித்தனர். நாய் கடிக்கான ஏ.ஆர்.வி ஊசி போடுவதற்குச் செல்லும் நோயாளர்களுக்கு யாழ்ப்பாணம் செல்லுமாறு கூறப்படுகிறது.

அதே போன்று குழந்தைகளுக்கான பூச்சி மருந்து எடுப்பதற்குச் செல்வோர் மருத்துவரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு பூச்சிமருந்து எழுதிக் கொடுக்கும் போது மருந்தகத்தில் அந்த மருந்து இல்லை என்று திருப்பி அனுப்பப்படுவதாகவும் பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

"கடந்த ஒருவாரமாகவே குழந்தைகளுக்கான (பாணி) பூச்சி மருந்து காரைநகர் மருத்துவமனையில் இல்லை என்றே கூறப்படுகிறது. கரைநகர் முழுவதும் உள்ள மக்கள் மட்டுமல்லாது பொன்னாலை, மூளாய் போன்ற இடங்களில் இருந்தும் அதிகளவான மக்கள் காரைநகர் மருத்துவமனைக்கே செல்கின்றனர்.

ஆரம்பத்தில் தரமான சேவையை வழங்கிய மருத்துவமனை தற்போது குறைபாடுகளுடன் இயங்கிவருகின்றது. எனவே அது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

காரைநகர் மருத்துவமனையில் மருத்துவர்களின் வருகையும் உரிய நேரத்தில் அமைவதில்லை என்றும் மக்கள் பலத்த குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.

வெளிநோயாளர் பிரிவுக்குச் செல்லும் நோயாளர்கள் நீண்டநேரமாக காத்திருந்தனர். மருத்துவர் (பெண்) ஒருவர் கடமையில் இருந்தார் எனினும் அவர் நோயாளர்களைச் சந்திக்க மறுத்தார். கிளினிக்குக்கு வருபவர்களை மட்டுமே அவர் சோதனைக்குட்படுத்தினார். இதனால்

கைக்குழந்தைகளுடன் செல்லும் பாலூட்டும் தாய்மார்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

மருத்துவமனைக்கு காலை 7 மணிக்கெல்லாம் குழந்தைகளுடன் செல்லும் தாய்மார்கள் முற்பகல் 9.15 மணி வரை மருத்துவர் வருகை தராததால் காத்திருப்பதாவும் தெரிவித்தனர்.

நேரம் செல்லச் செல்ல குழந்தைகள் அழத் தொடங்குகின்றனர். இதனால் ஏற்கனவே கடமையில் உள்ள பெண் மருத்துவரிடம் காட்டுவதற்குச் செல்லும் போது அவர் குழந்தையை வெளியில் கொண்டு செல்லுங்கள் நான் பார்க்க மாட்டேன் மற்ற மருத்துவர் வந்து பார்ப்பார் என்று கூறினார். எனப் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் மக்களை பெரிதும் பாதித்துள்ளன. மருத்துவமனையை நம்பிவரும் நோயாளர்கள் திருப்பி அனுப்படுவதும் காத்திருப்பதும் மருத்துவமனையின் சேவையை கேள்விக்குள்ளாக்குகியுள்ளது.

அதிகாரிகள், அல்லது சம்மந்தப்பட்டவர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பில் உரிய கவனம் எடுக்க வேண்டும் என்றும் எமது பிரதேசத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இவ்வாறான தவறுகள் இனிமேலும் இடம்பெற அனுமதிக்கக் கூடாது என்று மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

மக்களுடைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் காரைநகர் மருத்துவமனையுடன் நேற்றுக் காலை தொடர்பு கொண்டபோது மருத்துவமனை அத்தியட்சகர் இல்லை எனவும் அவர் வந்தவுடன் தொடர்பு கொள்கின்றோம் என்றும் தெரிவித்தனர்.

முற்பகல் 1.10 மணிக்கு மீண்டும் அழைப்பை ஏற்படுத்தியபோது இது தொடர்பில் யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

1.12 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு அழைப்பை ஏற்படுத்தி சம்பவம் தொடர்பில் வினவினோம். அதற்கு பதிலளித்த அதிகாரி மருந்துத் தட்டுப்பாடுகள் இருந்தால் மருத்துவமனை எமக்கு தெரியப்படுத்தவேண்டும். எமக்கு வரும் மருந்துகள் அனைத்தையும் மருத்துவமனைகளுக்கு பகிர்ந்தளிக்கின்றோம்.

நாய்க் கடிக்கான மருந்து இலங்கை முழுவதுமே தட்டுப்பாடு உள்ளது. மருத்துவர்களின் பற்றாக்குறை அங்கு உள்ளது அதை நிவர்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். நேரில் சென்று அந்த விடையங்கள் தொடர்பில் ஆராய்கிறேன் - என்றார். (ஐ-21)

## டெங்கால் நேற்றுவரை 15 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் இந்த மாதத்தில் நேற்று வரைக்கும் டெங்கின் தாக்கத்தால் 15 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பகுதி தெரிவித்துள்ளது.

கடந்த இரு நாள்களில் வண்ணார் பண்ணை மற்றும் குருநகர் பிரதேசங்களில் இருந்து 3 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர். டெங்கால் பாதிக்கப்பட்ட இடங்களில் தொடர்ந்தும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குருநகரில் செபஸ்ரியார் வீதி, வண்ணார் பண்ணையில் முருகமூர்த்தி வீதி, உடையார் ஒழுங்கை போன்ற இடங்களில் நேற்று இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ஐ-17)

## ஈருருளி கையளிப்பு



வறிய நிலையில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு ஈருருளி வழங்கிவைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் நல்லைக்கந்தன் தண்ணீர்ப் பந்தல் உதவும் கரங்கள் அமைப்பால் இந்த உதவி வழங்கப்பட்டது. கொக்குவிலைச் சேர்ந்த தங்கராசா சுகந்திக்கு சின்மயா மிசன் சுவாமிகளால் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டது. இதேவேளை இந்த அமைப்பால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காலணிகளும் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொதுக்கூட்டம்

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்ப்பாண பிரதேச பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைவர் வி.சிறிசக்திவேல் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண பிரதேச செயலக கணக்காளர் சூடாமணி அகிலன், யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்வாக அலுவலர் திருமதி பாலசுப்பிரமணியம் விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ51)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 20

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் லயன் கு.பிரணவராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட பிரதி மாவட்டச் செயலர் லயன் ஆர்.எல். ராஜ்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 101 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ- 9)

## சி.வேலுவின் 49 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி தொகுதியின் தொழிற்சங்கவாதியும் கூட்டுறவாளருமாகிய சி.வேலுவின் 49 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு இடம்பெறவுள்ளது. கொடிகாமம் பேருந்து நிலையத்தில் வைத்து 1970 ஆம் ஆண்டு துப்பாக்கியால் சுடப்பட்டு இவர் சாவடைந்தார். இந்த இடத்திலேயே இன்று புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு நினைவு நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் பிரமுகர்கள் தொழிற்சங்கவாதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-131)

### நபரொருவரால் தாக்கப்பட்டு

## குடும்பத்தலைவர் மருத்துவமனையில்

### மானிப்பாய் பொலிஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

நபரொருவரால் கழுத்திலும் தாடைப் பகுதியிலும் தாக்கப்பட்டு குடும்பத் தலைவரொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 62 வயதுடைய குறித்த நபர் மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் வழிபாடு செய்வதற்காக நேற்றுக் காலை உந்துளியில் சென்ற போது, சுதுமலைச் சந்தியில் வைத்து குறித்த சந்தேக நபர் அவர்மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இதையடுத்து தாக்குதலுக்கு ஆளானவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். அவருக்குத் தாடைப் பகுதியில் தையல் போடப்பட்டுள்ளது. மேலதிக சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நாளைய தினம் (இன்று) நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் - என்றனர். (ம-26)

### மானிப்பாய் சந்தையில்

## அமைக்கப்பட்ட கடைகள் முதற்கட்டமாக வாடகைக்கு

மானிப்பாய் மத்திய சந்தையில் அமைக்கப்பட்ட 20 கடைகளைக்கொண்ட தொகுதியின் கீழ் தளத்திலுள்ள 10 கடைகள் முதற்கட்டமாக வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மானிப்பாய் பொதுச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு இரு வருடங்களுக்கு முன் மீள்குடியேற்ற அமைச்சால் முதற்கட்டமாக 30 மில்லியன் ரூபா பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிதி மூலம் 20 கடைகளைக்கொண்ட கடைத்தொகுதியும் மரக்கறி விற்பனைப் பிரிவும் அமைக்கப்பட்டிருந்தது.

வியாபாரிகளினதும் மக்களினதும் கோரிக்கையைத் தொடர்ந்து ஒரு வருட காலத்துக்குப் பின்பு 20 கடைகளில் 10 கடைகள் வாடகைக்கு விடப்படவுள்ளன.

கடைகள் வாடகைக்கு விடுவது குறித்து பிரதேச சபை கூட்டத்தில் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு கடைக்கும் முற்பணமாக 6 லட்சத்து 60ஆயிரம் ரூபாவும் வாடகையாக முற்பகுதியிலுள்ள 7 கடைகளுக்கு மாதம் 2 ஆயிரத்து 750 ரூபா வீதமும், மீதி 3 கடைகளுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வீதமும் வாடகை அறிவிடப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. (ஐ-115)

## பாலர் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 20

"லிற்றிள் மாஸ்ரேஸ்" பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு லிற்றிள் மாஸ்ரேஸ் மைதானத்தில் சமாதான நீதவான் கி.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக மகாஜனாக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் கலந்து கொள்ளவுள்ளார். (க-ரி)

# அரச தலைவரின் அறிவிப்பை புறக்கணிக்க நகரசபை முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 20

பௌத்தர்கள் இல்லாத மண்ணில் புனித திரிபீடகத்தை கடைப்பிடிக்க வேண்டிய தேவை இல்லை என்று வல்வெட்டித்துறை நகரசபை முடிவு செய்து அரச தலைவரின் அறிவிப்பை புறக்கணித்துள்ளது.

இலங்கை பிக்கு பரம்பரையின் உன்னத பங்களிப்பில் பேணப்பட்டு வந்த தூய பௌத்த போதனைகள் உள்ளடங்கிய புனித திரிபீடகத்தை கடைப்பிடிக்குமாறு அரசதலைவரால் அறிவித்தல் வழங்கப்பட்டது.

நாடுமுழுவதும் கடந்த 16 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதிவரை திரிபீடகாபிவந்தனா வாரமாக கடைப்பிடிக்குமாறும் அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை நகரசபையின் அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிலையிலேயே அரச தலைவரின் அறிவித்தலை சபை புறக்கணித்துள்ளது.

அரசதலைவர் செயலகம், புத்தசாசன அமைச்சு, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியன ஏனைய அமைச்சுக்களுடன் ஒன்றிணைந்து "திரிபீடகாபிவந்தனா" (புனித திரிபீடக) வாரத்தை நாடுமுழுவதும் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

நேற்று செவ்வாய்க்கிழமை தனியார் நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இன்று புதன்கிழமை பௌர்ணமி தின "அரசதலைவர் சதகம் யாத்ரா" நிகழ்வு இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் நாடு முழுவதும் உள்ள விகாரைகளில் திரிபீடக தர்மபோதனைகள் பற்றி மக்களைத் தெளிவுபடுத்தும் போதனை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை அரசதலைவர் செயலகம் மற்றும் மாகாண ஆளுநர் அலுவலகங்கள் இணைந்து ஏற்பாடு செய்யும் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அரச நிறுவனங்களால் அன்னதானம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சமய வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மார்ச் 23 ஆம் திகதி சனிக்கிழமை தலதா மாளிகை வளாகத்தில் "திரிபீடகாபிவந்தனா" (புனித திரிபீடக) வாரம் நிறைவுபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலின் படி வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள், மற்றும் விகாரைகளில் மட்டுமே பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. புனித திரிபீடகத்தை வடக்கு மக்கள் புறக்கணித்தே வருகின்றனர்.

வடக்கில் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு அதில் விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்களுக்குள் பௌத்த கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொலிஸார், இராணுவத்தினர் வழிபடுவதற்காகவே அவை அமைக்கப்பட்டுள்ளன என்று அரசு தெரிவித்திருந்தது.

இவ்வாறான பின்னணிகளில் அரசுமீது கடும் விசனம் கொண்டுள்ள மக்கள் பௌத்தத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தவாரத்தை முற்றாகப் புறக்கணித்து வருகின்றனர். (ஐ-21,26,9)



## பிள்ளைத் தமிழ் நூல் வெளியீடு

சாவகச்சேரி, மார்ச் 20

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் மீது பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் பாடல் தொகுப்பு வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வு ஆலய மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் தமிழ் ஆசிரியர் சி.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

ஆலய முகாமையாளர் சிவ.சி.பஞ்சாட்சரத்தால் பிள்ளைத்தமிழ்ப் பாடல் தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

குறித்த நூலை கவிஞர் கெ.சுதாகரன் ஆக்கம் செய்து தொகுத்துள்ளார்.

முதற் பிரதியை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் பெற்றுக் கொண்டார்.

இந்த நூலின் வெளியீட்டுரையை துணுக்காய் பிரதேச செயலக கலாசார அலுவலர் சிவமுகுந்தன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் திருக்கணித நிலைய முகாமையாளர் எஸ்.சிவஞானசுந்தம், சிற்பக் கலைஞர் எஸ்.கலாமோகன், ஆலய தர்மகர்த்தா சிவ.பஞ்சாட்சரம், துர்க்காபுரம் நூல் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.சிவபாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-131)



*யாழ்ப்பாணம் அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் அதிபர் ந.விக்னேஸ்வரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி சூ.நோபேட் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (ஐ)*

## காயமடைந்தவரைக் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்த்த நீதிபதி

சாவகச்சேரி, மார்ச் 20

விபத்தில் காயமடைந்து வீதியில் காணப்பட்டவரை தனது மகிழுந்தில் ஏற்றி மருத்துவமனையில் சேர்த்துவிட்டு கடமைக்குச் சென்றார் நீதிமன்ற நீதிவான்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

கோப்பாய் கைதடி வீதியில் சாவகச்சேரி நோக்கி வந்த உந்துருளியும் ஏ 9 முதன்மைச் வீதியில் வந்த பட்டா ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் உந்துருளியில் வந்த நபர் காயமடைந்தார்.

அவ்வேளையில் யாழ்ப்பாணம் சென்றுவிட்டு திரும்பிய சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் வீதியில் காயமடைந்த நிலையில் காணப்பட்ட நபரைக் கண்டுள்ளார்.

இதனையடுத்து உடனடியாக தனது மகிழுந்தில் காயமடைந்தவரை ஏற்றிவந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்துள்ளார். இதன் பின்னரே தனதுகடமைக்குச்சென்றுள்ளார்என்றுதெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி வசந்தன் (வயது 34) என்பவரே விபத்தில் காயமடைந்தார். (ஐ - 9)

## அனுமதியின்றி மணல் ஏற்றியோருக்குத் தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 20



அனுமதிப் பத்திரமின்றி 3 பாரஊர்திகளில் மணல் ஏற்றி வந்த சாரதிகளுக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் 4 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மட்டுவில் புத்தூர் சாலையில் பாரவூர்தியில் கடந்த 15 ஆம் திகதி மணல் ஏற்றிவந்தபோது பொலிஸாரால் பிடிக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சாரதிக்கு ஒரு லட்சம் ரூபாவும், அவருக்கு உதவிய வசாவிளானைச் சேர்ந்த உதவியாளருக்கு 50 ஆயிரம் ரூபாவும், நாவற்குளிப் பகுதியில் கடந்த 16 ஆம் திகதி டிப்பரில் மணல் ஏற்றி வந்த சாரதிக்கு ஒரு லட்சம் ரூபாவும், தனன்களப்பு பகுதியில்கடந்த 14 ஆம் திகதி டிப்பரில் மணல் ஏற்றிவந்த சாரதிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## சபை அனுமதி இன்றி விளம்பரங்கள் காட்சிப்படுத்துவோர் மீது நடவடிக்கை

### *நகரசபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்*

சாவகச்சேரி, மார்ச் 20

சாவகச்சேரி நகசபையின் அனுமதி பெறாமல் எந்தவொரு விளம்பர பதாகைகள், ஸ்ரிக்கர்கள் போன்றவை காணப்படின் சம்பந்தப்பட்ட நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி நகரசபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என தவிசாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபை எல்லைக்குட்பட்ட மரங்கள், கம்பங்கள், மதில், பொது இடங்கள் போன்றவற்றில் சபையின் அனுமதியின்றி விளம்பரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் பல இடங்களில் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைப்பதில்லை.

சபையின் அனுமதியின்றி விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்தினால் அதனை வெளியிடும் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை உறுப்பினர் ம.நடனதேவன் முன்மொழிவைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இவரது கருத்தை அனைவரும் ஆதரித்து அனுமதி பெறாத விளம்பரங்களை அப்புறப்படுத்துவதெனவும், விளம்பர நிறுவனப் பிரதிநிதியை அழைத்து கலந்துரையாடி விளம்பரக் கட்டணத்தை அறவிடவேண்டுமெனவும், தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சபையால் ஏற்றுக் கொண்டதையடுத்து தீர்மானமாக நிறைவேற்றபட்டது எனத் தெரிவித்தார். (ஐ-9)

## ஆன்மிக சுற்றுலா

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக சிலாபம் முனீஸ்வரர் ஆலயத்துக்கு இன்று புதன்கிழமை அழைத்துச் செல்லப்படவுள்ளனர். இந்த ஆன்மிகச் சுற்றுலா வில் இல்லத்தைச் சேர்ந்த 30 வரையான முதியவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று இல்ல அத்தி யட்சகர் தெரிவித்தார். கைதடி முதியோர் இல்லத்தினர் முதியோர்களை ஆன்மிக வழிபாட்டுக்காக ஆலயங்கள்தோறும் அழைத்துச் செல்லப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஐ-17)

## அபிசேகத் திருவிழா

கொழும்புத்துன்றபுங்கன்குளம்வில்லையடி சிறி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அபிசேகத் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த அபிசேகத் திருவிழா தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும். அபிசேக பூர்த்தி நாளாகிய எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாளுக்குச் சிறப்பு அபிசேகப் பூசை வழிபாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மந்திகையில் கற்பகம் விற்பனை நிலையம்

பனை அபிவிருத்திச் சபை மந்திகையில் கற்பகம் விற்பனை நிலையம் ஒன்றைக் கடந்த வாரம் திறந்து வைத்தது. மந்திகை சந்தைக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் இந்தக் கற்பகம் விற்பனை நிலையம் சபைத் தலைவர் ந.இராசேந்திரத்தால் திறந்து வைக்கப்பட்டது. கற்பகம் விற்பனை நிலையத்தில் பனம் உற்பத்திப் பொருள்கள் யாவும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. பனம் உற்பத்திப் பொருள்களைக் கூடுதலாகச் சந்தைப்படுத்தும் நோக்கில் இந்தக் கற்பகம் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டும் வருகின்றன என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது. (ஐ-17)

வீட்டுத் திட்டத்தைக் கட்டி முடிப்பதற்கு

## சிரமங்களை எதிர்கொள்ளும் துணுக்காய் பிரதேச முதியோர்

முல்லைத்தீவு,மார்ச் 20
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட அம்பலப் பெருமாள் குளம் பகுதியைசேர்ந்த வயோதிபர்கள் நால்வருக்கு இந்த ஆண்டு ஒன்பது இலட்சத்து 95 ஆயிரம் ரூபா வீட்டுத்திட்டம் கிடைத்தும் மணல் எடுக்கமுடியாத நிலையில் வீட்டுத்திட்டத்தைக் கட்ட முடியவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர்.
"எமக்கென்று சொந்த வீடு இல்லாத நிலையில் அறுபது வயதைத் தாண்டியும், இனிமேலாவது நிம்மதியாக ஒரு வீட்டில் இருப்போம் என்றால் அதற்கு முன்னர் இறந்துவிடுவோம் என்ற கவலையில் வாழ்கின்றோம்" என்று தங்கள் வீட்டுத்திட்ட வீட்டைக் கட்டி முடிக்க முடியாத நிலையில் வயோதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இந்த வீட்டைக் கட்டுவதற்கு பிரதேச செயலரிடம் மணலுக்கு அனுமதி கோரினால் ஒரு லோட் மணல் மண்ணுக்கு மட்டுமே அனுமதி தந்துள்ளார்கள். வயது போன நிலையில் ஐம்பது கிலோமீற்றருக்கு அப்பால், அம்பலப் பெருமாள் குளத்தில் இருந்து துணுக்காய் சென்று மணலுக்கான அனுமதி எடுப்பது மிகச்சிரமமான காரியமாக உள்ளது என வயோதிபர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-ரி3)

# முத்துஐயன் கட்டு குளத்தின் கீழ் 4,390 ஏக்கர் சிறுபோக செய்கை

**முல்லைத்தீவு,மார்ச் 20**
**முத்துஐயன் கட்டுக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்காக 3 ஆயிரத்து 3 ஏக்கரும், ஆயிரத்து 387 ஏக்கர் உப உணவு செய்கைக்குமாக மொத்தம் 4 ஆயிரத்து 390 ஏக்கர் நிலம் சிறுபோகச் செய்கைக்காகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.**

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு குளத்தின் கீழான சிறுபோக விவசாயச் செய்கை தொடர்பிலான கூட்டம் நேற்று நடைபெற்றது.
ஒட்டுசுடுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட முத்துஐயன் கட்டு முத்துவிநாயகர்புரம் பொதுநோக்கு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்ட விவசாய பணிப்பாளர் என். கோகுலதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந. சுதாகரன் மற்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர், ஒட்டுசுட்டான் உதவிப் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், கமக்கார அமைப்புக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இதன்போது நேற்றுமுன்தினம் சுப நேரமான நண்பகல் ஒரு மணி தொடக்கம் 2 மணிவரையான நேரத்தில் முத்துஐயன் கட்டுக்குளத்தின் இரண்டு வாய்க்கால் கொட்டுகளும், சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.
இன்று தொடக்கம் ஜூலை 20ஆம் திகதி வரை சிறுபோக செய்கைக்காக முத்துஐயன்கட்டு குளத்தின் நீர் திறந்து விடப்படவுள்ளது எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (க-ரி3)


## விவசாயிகளுக்கு இழப்பீடு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு,மார்ச் 20
முல்லைத்தீவு மாவட்டத்தில் 600 விவசாயிகளுக்கான விவசாய இழப்பீட்டுக் காசோலைகள் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் காப்புறுதி நிறுவனம் அறிவித்துள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு இறுதி மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர்ச் செய்கைகளை நேரடியாகப் பார்வையிட்டு, 4 ஆயிரத்துக்கும் அதிகமான விவசாயிகளுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்காக விவசாயிகள் காப்புறுதி அமைப்பினர் தகவல்களைத் திரட்டியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளியவளை, ஒலுமடு,புதுக்குடியிருப்பு,உடையார்கட்டு,கொக்குத்தொடுவாய், குமுழமுனை ஆகிய கமக்கார அமைப்புக்களின் கீழான 600 விவசாயிகளுக்கான இழப்பீட்டு காசோலைகள் மாவட்டச் செயலகத்திடம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் அதனை விரைவில் விவசாயிகளிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து வரும்காலங்களில் ஏனைய விவசாயிகளுக்கும் இழப்பீட்டுத்தொகை கட்டம் கட்டமாக வழங்கப்படும் எனவும் விவசாய காப்புறுதி நிறுவனத்தின் அலுவலர் தெரிவித்தார். (க-ரி3)



## வீட்டுத் திட்டங்களுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா,மார்ச் 20
வவுனியா இராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட விக்ஸ்காடு கிராமத்துக்கு வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.
'எல்லோருக்கும் வீடு' எனும் தொனிப் பொருளில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் குரூஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
இலங்கை முழுவதும் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக விக்ஸ்காடு கிராமத்தில் வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது. நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர், உதவி மாவட்ட முகாமையாளர், உதவி பொறியியலாளர் மற்றும் பிரதேச தொழில்நுட்ப அலுவலர்கள், இராசேந்திரம்குளம் கிராம அலுவலர், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், சிறிரெலோ கட்சியின் இளைஞர் அணித் தலைவர் பரமேஸ்வரன் கார்த்தீபன், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-222)



## ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞன் கைது

வவுனியா,மார்ச் 20
ஹெரோய்ன்போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா சிறைச்சாலைக்கு அருகில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை வவுனியா பொலிஸாரால் இவர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 910 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற இளைஞர் ஒருவர் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய போதைத்தடுப்பு பிரிவினருக்கு தகவல் தெரிவிக்கபட்டது.
அதற்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸ் பொறுப்பதிகாரி உசாந்த தலைமையிலான குழுவினர் இளைஞனை சோதனை செய்த போதே அவரிடமிருந்து ஹெரோய்ன்போதைப்பொருளை மீட்டுள்ளனர்.
வவுனியா தேக்கவத்தை, பகுதியை சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்களை வவுனியா மேல்நீதிமன்றில் முன்னிலப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-110)

அக்கராயன்

# குடிதண்ணீர் நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுத் தாருங்கள்

## சரவணபவன் எம்.பியிடம் கோரிக்கை

கிளிநொச்சி,மார்ச் 20
அக்கராயனில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுத் தருமாறு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் அக்கராயன் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.
கடந்த 17ஆம் திகதி அக்கராயன் பகுதிக்கு பயணம் செய்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தபோதே, பொது அமைப்புகளால் அக்கராயனில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கம் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால், அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் குடிநீர்த் திட்டமொன்று தொடங்கப்பட்டு கடந்த ஓராண்டுக்கு மேலாக இருநூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குக் குடி தண்ணீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வந்தது. குடி தண்ணீர்த் திட்டத்தின் கிணறு முற்றாக நீர் வற்றியதன் காரணமாகத் தற்போது குடி தண்ணீர் வழங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.
அக்கராயன் குளம் திறந்து விடப்படும்போது கிணற்றின் நீர் மட்டம் உயரக் கூடியவகையில் தண்ணீர் வாய்க்காலுக்கு அருகிலேயே கிணறு அமைக்கப்பட்டபோதிலும், தற்போது அக்கராயன் குளம் சிறுபோக நெற்செய்கைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளபோதிலும், அக்கராயன் குடிதண்ணீர்த் திட்டத்துக்குரிய கிணற்றில் நீர் மட்டம் உயராததன் காரணமாகக் குடி தண்ணீர் வழங்கலில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கடந்த ஒருமாத காலமாகக் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும், இந்தநெருக்கடிக்கு நாடாளுமன்ற உறுப்பினரிடம் தீர்வைப் பெற்றுத்தருமாறு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் குடிதண்ணீர்த் திட்டத்துடன் தொடர்புடையவர்களுடன் கலந்துரையாடித் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிப்பதாகத் தெரிவித்தார். (க)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கொடிகாமம், மார்ச் 20
கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் தேசிய மாணவர் படையணிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை அதிபர் கி. விக்கினராஜா தலைமையில் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.
தேசிய மாணவர் படையணிக்கான சான்றிதழ்களைக் கல்லூரி அதிபர் கி.விக்கினராஜா வழங்கினார். (க-159)



முன்பள்ளி ஆசிரியர்

# போட்டிப் பரீட்சார்த்திகள் ஆளுநரிடம் முறைப்பாடு

**யாழ்ப்பாணம்,மார்ச் 20**

**வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் தரம் III பதவிக்கு நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டும் பின்னர் அந்த தேர்வு நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ள திறந்த போட்டி பரீட்சார்த்திகள் ஆளுநரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

முன்பள்ளி ஆசிரியர் சேவையின் தரம் III பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் 2017ஆம் ஆண்டு மே மாதம் விண்ணப்பம் கோரப்பட்டது. அதன் பின்னர் தகைமைகள் குறைக்கப்பட்டு 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விண்ணப்ப முடிவு திகதியாக அறிவிக்கப்பட்டது.

2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திறந்த போட்டிப் பரீட்சையும், 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பிரயோக பரீட்சையும் நடைபெற்றது. இதில் சித்தியடைந்தவர்கள் வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும் உள்ளூராட்சி மாகாண நிர்வாக அமைச்சினால் நவம்பர் மாத 19ஆம் திகதிய கடிதம் மூலம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். அதன் பின்னர் நேர்முகத் தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் உரிய தினத்தில் நிறுத்தப்படுவதாகத் தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டது.

ஆனால் இன்று வரை இதற்கான எந்த பதிலும் கிடைக்கவில்லை.

41 வெற்றிடங்களுக்கு ஆள்ச் சேர்ப்புச் செய்வதற்கான நடைமுறைகள் பின்பற்றப்பட்டும் இன்று வரை பதில் இல்லை. இது தொடர்பில் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம்- என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரிவிக்கப்பட்டதாவது:

"நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும் காலத்தில் அரசியல் குழப்பம் நடைபெற்றது.

இந்த நேரத்தில் நியமனங்கள் வழங்க வேண்டாம் என்று அரசு அனைவருக்கும் பணித்திருந்தது. அதற்கு அமைவாக ஆளுநரின் மாற்றத்தின் பின்னர் நியமனம் வழங்குவது மற்றும் சம்பள ஏற்பாடு தொடர்பில் மாகாண ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது" என்றார். (க-7)

## தாழ்வுபாடு ஆலய வருடாந்தத் திருவிழா



மன்னார்,மார்ச் 20

மன்னார் மறைமாவட்டத்தில் தாழ்வுபாடு சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா பங்கு தந்தை பி.யேசுராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் அமலி மரி தியாகிகள் சபையின் முன்னாள் முதல்வரும் தற்பொழுது இந்தச் சபையின் மறை போதகரின் குழுத் தலைவருமான அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளாருடன் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (க-60)

## அன்னை பூபதி நினைவு தினம்

மட்டக்களப்பு,மார்ச் 20

இந்தியஅரசின்அடக்குமுறைக்கு எதிராக உணவு ஒறுப்புப் போராட்டம் மேற்கொண்டு உயிர் நீத்த அன்னை பூபதியின் 31ஆம் ஆண்டுநினைவேந்தல் நிகழ்வு நேற்று பிற்பகல் இடம் பெற்றது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பில் உள்ள தலைமை அலுவலகத்தில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொது செயலர் செ.கஜேந்திரன் கலந்து கொண்டார். (க-160)



தொல்பொருள் திணைக்களத்தால்

# உரிமை கோரும் காணி விவரம் எமக்கு எந்தத் தகவலும் தெரியாது

*மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் கைவிரிப்பு*

முல்லைத்தீவு ,மார்ச் 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் உரிமை கோரும் நிலங்கள் தொடர்பில் மாவட்டச் செயலகத்துக்கு எந்தத் தகவலும் தெரியாது என மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 ற்கும் மேற்பட்ட இடங்களைத் தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் என உரிமை கோரும் தொல்லியல் திணைக்களம் அந்தப் பகுதிகளை அளவீடு செய்து தருமாறு நில அளவைத் திணைக்களத்தி டம் கோரியிருப்பது தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு பதிலளித்தார்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தால் மாவட்டச் செயலகம் . மாவட்ட பொதுச் சந்தை , ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், குமரபுரம் முருகன் ஆலயம், குளங்கள் உட்பட உரிமை கோரும் பல நிலங்கள் தொடர்பில்நிலஅளவைசெய்யகோரிக்கை விடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாவட்டச் செயலகத்துக்கு எந்தத் தகவலும் தெரியாது. இருப்பினும் குறித்த திணைக்களத்தின் கோரிக்கையின் பெயரில் நில அளவைத் திணைக்களம் எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாகவும் இது வரை எந்தவித அறிக்கையிடலுமில்லை. எனவே இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கருத்தறியப்படும்" எனத் தெரிவித்தார். (க-105)





## முத்தமிழ் விழா

மன்னார். மார்ச் 20

மன்னார் தேவன்பிட்டி றோ.க.த.மகா வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை அதிபர் சீ.டனீஸ்ரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மடு வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன், சிறப்பு விருந்தினராக மன்னார் வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை அதிபர் அ.தேவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அருட்பணி செ.அன்புராசா சிறப்புரை ஆற்றினார். பாரம்பரியக் கலைகள், சமூக விழிப்புணர்வு நாடகம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)

## விளையாட்டு மைதானத்துக்கு காணி கொள்வனவு

பளை, மார்ச் 20

பளை மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்துக்குக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர், புலம்பெயர் வாழ் பழைய மாணவர்கள்ஆகியோர் விளையாட்டு மைதான காணிக் கொள்வனவுக்காக நிதிப்பங்களிப்பைச் செய்திருந்தனர்.

அது தொடர்பான நன்றி தெரிவிப்பு ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென அதிபர் க.உதயகுமாரன் அறிவித்துள்ளார் . (க-9)



## விளையாட்டு நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 20

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் வண்ணாங்கேணி சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு 17ஆம் திகதி இடம்பெற்றது .

பாடசாலை முதன்மை ஆசிரியர் ராஞ்சி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேனும், சிறப்பு விருந்தினர்களாகப் பிரதேச சபை உப தவிசாளர் மு.கஜன், கிராம அலுவலர்களான சுபாஷினி, சுதர்சன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-6)

## பொதுக்கூட்டம்

பளை,மார்ச் 20

பளை மத்திய கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கல்லூரி மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

அனைத்து மாணவர்களின் பெற்றோர்கள், கல்லூரி அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் உட்பட அனைவரையும் வருகை தருமாறு கல்லூரி அதிபர் க.உதயகுமாரன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## சன சமூக நிலையம் திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்.மார்ச் 20

சூராவத்தை ஜொனியன்ஸ் சன சமூக நிலையத்தின் திறப்பு நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு ஜொனியன்ஸ் சன சமூக நிலையத் தலைவர் கு. டெனிஸ் கமல்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு உடுவில் பிரதேச செயலர் சி. ஜெயகாந்த் முதன்மை விருந்தினராகவும், மட்டக்களப்பு மறைக் கோட்ட குரு முதல்வர் அருட்பணி. ரி. ஏ. தேவதாசன் ,கிளிநொச்சி மறைக் கோட்ட குரு முதல்வர் அருட் பணி. ஏ. ஜேசுதாசன் ,சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய முதன்மைக் குரு பிரமசிறி சண்முகானந்தக் குருக்கள், சூராவத்தை புனித திரேசாள் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி ஜெ. எக்ஸ் பேர்னாட் றெக்னோ, வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 20

யாழ்ப்பாணம் தையிட்டி கலாவல்லி முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் முன்பள்ளி முன்றிலில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

தலைவர் வன்னியசிங்கம் பிரபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## ஜி.சி.ஈ சாதாரண பரீட்சை பெறுபேறுகள் இந்தமாத இறுதியில்

கொழும்பு, மார்ச் 20

ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்தமாத இறுதியில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான பணிகள் தற்போது நிறைவுபெற்றுள்ளன என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் 4ஆயிரத்து 561 மத்திய நிலையங்களில் நடைபெற்ற பரீட்சையில் 6 லட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் தோற்றினர். (ஐ)

## தேசியப் பாடசாலைகளுக்கு
# 3,500 ஆசிரியர்கள் விரைவில் நியமனம்
### கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

**தே**சிய பாடசாலைகளுக்கு 3ஆயிரத்து 500 ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கான பத்திரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கிரிஉல்ல ரத்னாலங்கார மஹா வித்தியாலயத்தின் ஆய்வு கூடம் மற்றும் ஆரம்பக் கல்வி கற்றல் வள நிலையம் ஆகியவற்றை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

கல்விக் கட்டமைப்பை அரசியலிலிருந்து மீட்க வேண்டும். கல்வித் துறையின் அனைத்துப் பதவிகளும் தகைமை உடையோருக்கு வழங்குவதே எனது கொள்கை.

அதிபர்களுக்கான பயிற்சி மற்றும் தரமான அபிவிருத்திக்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதிபர்கள் ஆயிரம் பேருக்கு வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளோம்.

கடந்த நான்கு வருடங்களில் தகைமையற்ற ஆசிரியர்கள் எவரையும் கல்விக் கட்டமைப்பில் இணைக்கவில்லை. கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் வீதத்தை இரு மடங்காக அதிகரிப்பதற்காக விடுதிகளுக்கான வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 'ரப்' கணினி இந்த வருடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்காலத்தில் ஐந்தாம் தர மாணவர்களுக்கும் 'ரப்' கணினியைப் பயன்படுத்தி கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய நிலைமை உருவாக்கப்படும் - என்றார். (த)

## அலரி மாளிகையில் மிலேனியம் அமைப்பா?
### விமலின் குற்றச்சாட்டை நிராகரிக்கிறார் சாகல

கொழும்பு, மார்ச் 20

அமெரிக்காவின் மிலேனியம் சவால் அமைப்பின் பணியகம் ஒன்று அலரி மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளதாக, கூட்டுஎதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால், அதை அமைச்சர் சாகல ரத்நாயக்க மறுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடந்த குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ச, தலைமைஅமைச்சரின் அதிகாரபூர்வ வதிவிடமான அலரி மாளிகையில் அமெரிக்கா, மிலேனியம் சவால் அமைப்பின் செயலகத்தை அமைத்துள்ளது என்றும், கொழும்புத் துறைமுகத்தில் இருந்து திருகோணமலை வரை 200 கிலோமீற்றர் தூரத்துக்கு சிறப்பு பொருளாதார வலயம் அமைக்கப்பட்டு அங்கு அமெரிக்காவின் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சாகல ரத்நாயக்க,

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பொய்யான தகவல்களைப் பரப்புரை செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

மிலேனியம் சவால் அமைப்போ அல்லது வேறெந்த அமெரிக்க முகவர் அமைப்போ, அலரி மாளிகையில் செயலகத்தை அமைக்கவில்லை.' பொய்களைச் சொல்வதற்கும் ஒரு எல்லை உள்ளது. ஊடகப் பரப்புரைக்காக, வீரவன்ச கற்பனைக் கதைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார் - என்றார். (த)

## மகேந்திரனை ஒப்படைப்பது பற்றி சிங்கப்பூர் அரசே தெளிவுபடுத்தவும்
### அரசதலைவர் சிறிசேன கோரிக்கை

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக வகை கூற வேண்டிய முக்கிய நபரை இலங்கை அரசிடம் ஒப்படைப்பது சம்பந்தமாக, தனது கொள்கை பற்றிய தெளிவான கூற்றை சிங்கப்பூர் அரசு வெளியிட வேண்டும் என்று இலங்கை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அதுபற்றி சிங்கப்பூர் தலைமைஅமைச்சருடன் கலந்துரையாடியதாகவும் அரசதலைவர் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மோசடி செய்தார் என்று•அரச தலைவர் குற்றஞ்சாட்டியிருக்கும் நிலையில்அவர்சிங்கப்பூரில் வசிக்கிறார் என்றும் கூறப்படும் நிலையில் சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலஞ்ச, ஊழலை ஒழிக்கும் ஐந்தாண்டுசெயற்றிட்டத்தை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி 62 இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் வாக்குகளின் மூலமாக அரசதலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட தனது தேர்தல் அறிக்கை முக்கிய விடயமாகஅமைந்திருந்தது ஊழல், மோசடிகளை ஒழிப்பது.

வரலாற்றில் இடம்பெற்ற பெரும் கொள்ளையான மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாகக் கண்டறிவதற்கு நான் நியமித்த அரசதலைவர் ஆணைக்குழு, ஆணைக்குழுக்கள் பற்றி அதுவரையில் மக்கள் மத்தியில் இருந்து வந்த நம்பிக்கையீனம் மற்றும் பின்னடைவான கருத்துக்களை மாற்றியமைத்தது என்று தெரிவித்தார்.

இந்த விசாரணையை மேற்கொண்டுவரும் அதிகாரிகள் பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. சிலவேளைகளில் அவர்களுக்கெதிராக விசாரணை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அதனை அரச நிர்வாகத்தில் இடம்பெற்ற பலவீனமான நிகழ்வாக தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இலஞ்ச, ஊழலை ஒழிப்பதற்கு தெளிவான நிகழ்ச்சித்திட்டமொன்று நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினை உள்ளது. சிறந்த அரச சேவையின் மூலம் இலஞ்ச, ஊழல் இல்லாத சிறந்ததோர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஊழல், மோசடிகளுக்கு எதிராக தண்டனை வழங்குதல் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசதலைவர் சுட்டிக்காட்டினார். (த)



## ஐ.நா. பக்க அமர்வில் வீரசேகர குழு குழப்பம்

கொழும்பு, மார்ச் 20

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பக்க அமர்வில், றியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் குழப்பம் விளைவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்குச் சமாந்தரமாக, பக்க அமர்வுகள் இடம்பெறுகின்றன.

இலங்கை தொடர்பான பக்க அமர்வு ஒன்று நேற்றுமுன்தினம்,பிரான்ஸ்தமிழர்மனிதஉரிமைமையத்துடன்இணைந்து, பசுமை தாயகம் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். இலங்கையிலிருந்து வந்திருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினரும் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தில் புலம் பெயர் தமிழர்களின் போர்க் குற்றச்சாட்டுகளை றியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் நிராகரித்து, குழப்பம் விளைவித்தனர்.

இதனால் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

நிகழ்வு முடிந்த பின்னரும், கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துக்கும், சரத் வீரசேகர தலைமையிலான குழுவினருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## ஆட்சியில் செய்யாது தவறிழைத்து தற்போது ஆட்சிக்காகக் கெஞ்சுகிறார்
### மகிந்தவைச் சாடுகிறார் அமைச்சர் ஹலீம்

எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நீண்ட காலமாக ஆட்சியில் அரசதலைவராக இருந்த காலகட்டத்தில்கூட கண்டி - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை வீதியை மறந்து விட்டு, தற்போது ஒரு மாதத்தில் அமைத்துத் திறந்து வைப்போம் என்று கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

இவ்வாறு முஸ்லிம் சமய, கலாசார, தபால்துறை அமைச்சர் எம். எச் ஏ. ஹலீம் தெரிவித்தார்.

பூஜாப்பிட்டிய நகரில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்ட ஹலீம் மேலும் தெரிவித்ததாவது:

ஆள்களைச் சேர்த்துக் கொள்ள முடியாதவர்கள் கண்டியில் கூட்டம் கூட்டி, ஏமாற்றமடைந்தனர். பேசுவதவற்கு ஒன்றும் இல்லை. அதில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கூறுகிறார், தங்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் கொழும்பு கண்டிவீதியை ஒருமாதத்தில்முடித்துதிறந்துவைப்போம்என்று. அவர் அரசதலைவராக எத்தனை வருடங்கள் இருந்தார் என்பதை மறந்து விட்டார் - என்றார். (த)



## பாதுகாப்பு என்றுகூறி காணி சூறையாடப்படுகிறது
### அரசைச் சாடுகிறார் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, மார்ச் 20

தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் மக்களின் சொந்தக் காணி நிலங்கள் சூறையாடப்படுகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் அண்மையில் குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ள வறுமையானது, மறுபக்கத்தில் இன்னமும் எமது மக்களுக்கு மறுக்கப்படுகின்ற எமது மக்களின் காணி, நிலங்களின் ஊடாக பொருளாதார இலாபங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

தேசிய பாதுகாப்பு என்ற பெயரைக் கூறிக் கொண்டு எமது மக்களின் சொந்த காணி, நிலங்கள் படையினருக்கான பொருளாதார ஈட்டல்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த விடயத்தின் உண்மை நிலை என்ன?

யாழ்ப்பாணத்தில் தற்போது படையினர் வசமுள்ள 3ஆயிரத்து 918 ஏக்கர் காணியில் 3ஆயிரத்து 642 ஏக்கர் காணிகள் தனியாருக்குச் சொந்தமானவை. அவற்றை மக்களுக்கு விட்டுக் கொடுக்க அரசு தயாரில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதியைப் பெறாமலும், நீதி மன்றம் தடைவிதித்துள்ள நிலையிலும், பொலிஸாரையும் சட்டை செய்யாது, கேபிள் கம்பங்கள் யாழ்ப்பாணம், வலிகாமம் தென்மேற்கு போன்ற பகுதிகளில் பாதையோரங்களில் கொங்கிறீட் இடப்பட்டு நடப்படுகின்றன. - என்றார். (த)

## ஓ.எம்.பி பதவிகளுக்கு விண்ணப்பிக்க ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் (ஓ.எம்.பி) செயற்படுவதற்கு அவசியமான பதவி வெற்றிடங்களுக்கு புதிய ஆள்களை நிரந்தர மாக இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் கோரியுள்ளது.

குறித்த பதவிகளுக்கென கோரப்பட்டுள்ள தகைமையை உடைய காணாமல்போனோரின் நேரடி குடும்ப உறுப்பினர்கள் அப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுவதாகவும் அந்தஅலுவலகம் குறிப்பிட்டுள்ளது. கரணாமல் போனோர் அலுவலகத்தின் பதவிகளுக்குரிய வெற்றிடங்கள், அப்பதவி குறித்த விவரம், அவற்றுக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை மற்றும் தகைமைகள், சம்பள விவரம் ஆகிய தகவல்கள் உள்ளடங்கியதாக காணாமல்போனோர் அலுவலகத்தினால் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-21)

# அரசதரப்புடன் பேசி தீர்வுகள் பெறப்படும்

## சி.வி.விக்கினேஸ்வரன் நம்பிக்கை

மட்டக்களப்பு.மார்ச் 20

தமிழ் பேசும் மக்களின் காணிப்பிரச்சினைகள், முஸ்லிம் அரசியல் வாதிகள் மற்றும் அரசதரப்புடன் பேசி உரிய தீர்வு பெற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தான்தோன்றித்தனமாக செயற்பட்டாலும், அவர்கள் விரும்பியவற்றை செய்ய முன்வந்ததாலும் தான், புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்க வேண்டி வந்தது.

கொழும்பு அரசு மற்றும் வெளிநாடுகளின் உதவியை நம்பாமல் எமது முயற்சியால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். மற்றும் அரசியல் தீர்வு வாழ்வாதாரம் பிரச்சினைகளுக்குரிய தீர்வு வழங்கப்படவில்லை.

நாங்கள் விரும்பியதை விடுத்து அவர்கள் விரும்பியதை எமக்கு தர முன்வருகின்றனர்.

இதனால் தான் இந்தப் புதிய கட்சி உருவானது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சுயநலன் சார்ந்து செயற்பட்டதால்தான் கிழக்கில் இன்று காணி அபகரிப்புகள் சட்ட ரீதியற்ற முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. இதனை அனுபவம் வாய்ந்தவர்களின் அனுசரணையுடன் உரிய புள்ளிவிவரத்தின் அடிப்படையில் தீர்க்கவும், தமிழ் பேசும் மக்களின் காணிப்பிரச்சினைகள் முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் அரசதரப்புடன் பேசி உரிய தீர்வை பெற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-46)

*அதிகாரத்தைப் பயன்படுத்தத் தெரியாத*

# முன்னாள் முதல்வர் விக்கி கிழக்கைச் சிதைக்கின்றார்

## மாகாணசபை முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு



*கொழும்பு, மார்ச் 20*

**வடக்கு மக்களுக்குத் தீர்வைப்பெற்றுத்தரத் தவறிய, தனது அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று அறியாத வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண மக்களைச் சிதைக்க எத்தனிப்பதை நிறுத்த வேண்டும்.**

இவ்வாறு கூறியுள்ளார், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளருமான த.கலையரசன்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கிழக்குக்குப்பயணம் செய்து மக்களைச் சந்திப்பது தொடர்பாகக் கருத்துக் கூறும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண முதலமைச்சராகஇருக்கும்பொழுது தங்களது அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று அறியாதவர், வடக்கிலுள்ளபிரச்சினைகளைத் தீர்த்திருக்க வேண்டியவர், இவையனைத்தையும் தவறவிட்ட தலைவரே சி.வி.விக்கினேஸ்வரன்.

**அழிவுப் பாதைக்கே தமிழரை நகர்த்துகிறார்**

அதிகாரங்களையெல்லாம் வைத்துக்கொண்டு செயற்படமுடியாத தலைவர் இப்போது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை சின்னாபின்னமாக்கி சிதறடிக்க எத்தனிப்பது நகைப்புக்குரியது. இனரீதியான பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டு வாழ்கின்ற சூழலில் கிழக்கிலே இருக்கின்ற தமிழர்களை சிதைப்பதற்கு எந்தவொரு கொள்கையுமில்லாமல் நேரத்திற்கொரு கருத்தும், நாளுக்கொரு கருத்தும் சொல்லும் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன், எங்களை கூறுபோட முற்படுவது கிழக்கை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்வதாகவே பார்க்கின்றோம்.

எம்மையும் மக்களையும் குழப்பி கூறுபோடுகின்ற செயலை அவர் மாத்திரமல்ல அவரோடு சேர்ந்து செயற்படுகின்ற ஊடுருவிகளும்செயற்படுவது மனவேதனையான விடயம்.

வடக்கு கிழக்கு இணைப்பு தமிழர்களின் இதயத்துடிப்பாக இருந்தாலும் இன்று வடக்குவேறு கிழக்குவேறு என்ற அடிப்படையில் நிர்வாக ரீதியான செயற்பாடுகள் இருந்தாலும் கிழக்கு மாகாணம் எனும்போது நாங்கள் தீர்க்க தரிசனமாகச் செயற்படவேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

**கூட்டமைப்பைச் சிதைக்கும் கைங்கரியத்தை விடவில்லை**

அந்த அடிப்படையில் வடக்கு முன்னாள் முதல்வர் ஒரு சிலரோடு சேர்ந்து குழப்ப முற்படுவது வேதனையளிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைப்பதைத் கையிலெடுத்துக்கொண்டு செயற்பட்டதை கடந்தகாலத்திலும்சரி தற்காலத்திலும்கூட அறிந்து கொண்டு இருக்கின்றோம். வடக்கு மாகாண முன்னாள் முதல்வரோடு இணைந்து பல கட்சி தாவியவர்களும், பல துரோகங்களையும் இனத்துக்குச் செய்தவர்களும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

எங்களது அரசியல் பயணத்தில் கட்சி தடையாக இருந்ததில்லை. ஆனால் முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரனோ, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் தமிழ் மக்களையும் பிரித்தாளும் செயற்பாடுகளை செய்துகொண்டிருக்கின்றார். முதலமைச்சர் பதவிக் காலத்தில் திறம்பட செயற்பட்டிருந்தால் சிறப்பான தலைவராகவும் இருந்திருப்பார். அதைஎமதுகட்சித்தலைமையும் ஏற்றுக்கொண்டிருக்கும் - என்றார். (து)

*பிற மாகாண நிதி ஒதுக்கீட்டின்*

# பத்து வீதமேனும்கூட கிழக்குக்கு இல்லை

## தமிழ்த் தலைமைகள் சிந்திக்கவில்லை என்றும் வியாழேந்திரன் எம்.பி. கூறுகிறார்

செங்கலடி, மார்ச் 20

வரவு - செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கியுள்ள நிதியில் 10 வீத நிதிகூட கிழக்கு மாகாண அபிவிருத்துக்கு ஒதுக்கப்படவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு தன்னாமுனை ஜோசப் கல்லூரியின் 144ஆவது கல்லூரி தினம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசை விமர்சித்துவிட்டு வரவு செலவுத்திட்டத்தில் அவர்களுக்கு ஆதரவாக முதலாவதாகக் கையை உயர்த்துவது, தலைமை அமைச்சரை விமர்சித்துவிட்டு பின் அவரைப் பாதுகாக்க கையை உயர்த்துவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. இதுவே நான்கு வருடத்தில் செய்த மிகப்பெரிய சாதனை.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இதைக் கடந்தகாலத்தில் செய்தவர்களில் நானும் ஒருவன். இந்த வருடம்தான் எமக்கு மன நிம்மதியாகவுள்ளது. வரவு- செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளேன்.




கிழக்குக்கு நகரத்திட்டமிடல் என்று ஆயிரக்கணக்கான மில்லின் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அவை சம்மாந்துறை, கல்முனை, வாழைச்சேனையை அன்மித்த பகுதிகளே. இதற்கு எங்களவர்கள் உடனே கையை உயர்த்தி அற்புதமான வரவு செலவுத்திட்டம் என கூறுகின்றனர். இதைப்போல கேவலம் கெட்ட செயல் ஒன்றும் இல்லை.

அரசை முஸ்லிம் அரசியல் வாதிகளும் கொண்டுவருகின்றனர் மலையக அரசியல்வாதிகளும்கொண்டுவருகின்றனர். அவர்கள் கையை உயர்த்திவிட்டு சும்மா இருக்கவில்லை, உடனே ஆளும் கட்சியிடம் சென்று தேவையான நிதிகளைக் கேட்டு எடுத்துக் கொள்கிறார்கள்.

மலையக அரசியல் வாதிகளும் அப்படித்தான்.

ஆனால் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் நடக்க கூடிய ஒன்றையும் பெறவேயில்லை - என்றார். (து)

கேலிச்சித்திரம்




நன்றி: நாமல் அமரசிங்க.

# தேவையறிந்து பணிபுரிவதே சுகாதார அமைச்சின் கடமை

வாக்குகளுக்காக மக்களுக்குச் சேவைபுரியாது, மக்களின் தேவையறிந்து சேவைகள் செய்வதே சுகாதார அமைச்சின் கடமை என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சொறிக்கல்முனையில் அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தாவது:

உலகவங்கியிடமிருந்து 200 மில்லியன் ரூபா நிதி சுகாதார அமைச்சுக்குக் கிடைத்துள்ளது. இலங்கையில் தொற்றா நோய் காரணமாக, 25 வீதமான மக்கள் அவதியுற்றுவருகின்றனர். மக்களின் கஸ்ரத்தை குறைத்து அவர்களின் குருதிப் பரிசோதனை உட்பட் ஏனைய பரிசோதனைகளை குறித்த பிரதேசங்களில் ஏற்படுத்திக்கொடுக்க இந்தத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம் என்றார். நிகழ்வில் சுகாதாரத் துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (து)



*உணவுப் பழக்கங்கள் பற்றி*

# சுகாதாரச் சங்கங்களிடையே ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

கொழும்பு, மார்ச் 20

மக்களுக்கு அறிவுறுத்தப்படவேண்டிய சுகாதாரமான உணவுப்பழக்க வழக்கங்கள் கொண்ட ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், ஆயுர்வேத அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தோடும், இலங்கை மிருக வைத்திய அதிகாரிகள் சங்கத்தோடும் இந்த ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய உணவுக்கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் சுகாதாரமான உணவுப்பழக்க வழக்கங்கள் பற்றி மக்களுக்கு அறிவுறுத்துதல் சம்பந்தமாக இது கைச்சாத்திட்டது.

பால் மா பவுடருக்குப் பதிலாக, பதப்படுத்தாத தூய பாலைப் பயன்படுத்துதல், இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைக்குப் பதிலாக உள்ளூர் அரிசி, தானிய வகைகள் மற்றும் கிழங்குகளையும் பயன்படுத்துதல் பற்றிய குறிப்புக்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து)



# ணம் வண்ணை
# ் ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்
# சிறப்பு மலர் – 20.03.2019

ஆலயத்தை தாமே இனிது பரிபாலித்தபின், தமது புத்திரர்களான ஸ்ரீகோபாலச் செட்டியார், ஸ்ரீகந்தப்பச் செட்டியார் அவர்களிடத்து ஒப்புவித்து விட்டுத் தமது அந்திம காலத்தைக் காசியிற் கழிக்க விரும்பி அங்கு சென்று சில காலம் சீவித்த பின், திருவருளால் தமது உடல் நிரியாணத்தை உணர்ந்து கருங்கல்லினால் ஒரு தொட்டி அமைப்பித்து, அத் தொட்டியில் ஆரோகணித்துக் கங்கையில் இறங்கினார். இவர் போன்ற மகா புண்ணிய புருஷர் உலகில் முன்னும் பின்னும் இருந்ததில்லை என்றால் மிகையாகாது. பின் கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார், பொன் ச்சாமிச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார் ஆகியோர் பரி பாலித்து, சில காலம் வைத்தியலிங்கச் செட்டியாரின் மனைவியார் திருமதி வை.கண் ணம்மா ஆச்சி அவர்களாலும், பின்னர் அவர்களது புதல்வர் கந்தப்புச் செட்டியாராலும் கோபாலன் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார் அவர்களால் 1805 ஆம் ஆண்டு வரையப்பட்ட சாசனத்தின்படி அவரது (வழித்தோன்றல்களால்) தொடர்ந்தும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. நல்லைநகர் ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார். அவர்களுக்கு பின் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கர சுப்பையர் சுவாமிகள் செய்து வந்தார்கள். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள், துறவு பூணும் வரை முத்தமிழ்மணி சி.எஸ் எஸ். மணிபாகவதர் என்ற பூர்வாஸ் சிரம நாமத்துடன் சமயப் பிரசங்களை இவ்வாலய வசந்த மண்டபத்திலே செய்து வந்தார்கள். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது. இத் தலத்திற்கு தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இலங்கையின் ஏனைய பாகங்திகளிலும் யாழ்ப்பாணத்தி லும் உள்ள சைவத் தலங்களெல்லாம் இவ்வாலயத்தைப் பின் பற்றி நித்திய நைமித் தியங்கள் நடத்துவதற்கு இக் கோயிலே ஆதாரமாக விளங்கியது. இத் தலத்தில் உலக மாதாவாகிய பாலாம்பிகை (தையல்நாயகி) அம்பாளோடு வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் கொண்டெழுந் தருளி சைவ நன் மக்களுக்கு கருணை சுரந்தருளுகிறார்.

2002 ஆம் ஆண்டு
கும்பபிஷேக மலரின் பிரதியாக்கம்


ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி பேரருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்



Since 1978

நடராசா கஜந்தன்

நியூ மைதிலி ஜுவலர்ஸ்

ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்




இதோ உங்கள் பழைய 22kt நகைகளை
புதிய 22kt தங்கத்தின் விலைக்கே
கொள்வனவு செய்து அதற்கு மாற்றாக
நவீன விஸ்தரிக்கப்பட்ட எமது
காட்சியறையில் உங்கள் மனதில்
மின்னும் டிசைன்களை ஆனந்தமாக
தெரிவு செய்யுங்கள்.



newmaithily40@gmail.com
New Maithily Jewellers
0094212217878

38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 221 7878 Fax:021 2217877



KL KIRUBA LEARNERS

கிருபா லேணர்ஸ் KIRUBA LEARNERS

Govt.Approved A Grade Driving Trainig School

தலைமைக் காரியாலயம் இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353 | 0777225292




வட மாகாணத்தின் முதற் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

No.1 Driving Training School In North

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- இரவு நேர வாகனப் பயிற்சி.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்

கிளைக் காரியாலயங்கள்:

**யாழ்ப்பாணம்**

227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், (மதவடி அருகில்)
021 224 2022, 071 4546 956

முதலாம் கட்டைச் சந்தி, பருத்தித்துறை.
021 492 3201, 071 4546 961

36, கச்சேரி நல்லூர் வீதி, (கச்சேரி அருகில்) யாழ்ப்பாணம்.
021 222 6699, 076 722 5292

ஒம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.
021 222 6688, 071 777 6969

கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைச் சந்தி, தெல்லிப்பளை.
021 224 3737, 071 4546 959

கண்டி வீதி, சாகவச்சேரி, (நீதிமன்றம் அருகில்)
021 227 0700, 071 4546 957

பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக), நெல்லியடி.
021 300 6550, 071 4546 958

82, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
021 221 4488, 0777 227 740

காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி.
021 225 2500, 076 212 1299

**வவுனியா**

216, ஏ9, வவுனியா, (வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 0777 100 444

**மன்னார்**

94, பிரதான வீதி, மன்னார்.
023 225 1656, 077 847 2732

**கிளிநொச்சி**

ஏ9 வீதி, கிளிநொச்சி, (கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 5646 955

புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு.
021 320 1515, 077 8585 263

நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 6544, 070 333 6161

வாடியடி சந்தி, பூநகரி.
021 320 1818, 070 333 7171







ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி பேரருள்
அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்

செல்வி நகைஅகம்

CHELVI Nakai Agam

தங்கப்பவுண் நகை வியாபாரம் Manufacturers of Gold Jewels



22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.


T.P: 021 222 9441

1/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.

உதயன்
புதன் பொய்கை
மார்ச் 20, 2019
@UthayanPrint

இராமபுரத்தூர் நிசாந்தன்

# இலக்கியங்களில் யானையின் உலா



இலக்கியம் என்பது எமக்கு வாழ்வியலைக் கற்றுத் தருவதாகும். புண்பட்ட மனதுக்கு அருமருந்தாக அமைவது இலக்கியம். இரசனை எனும் உணர்வினை உள்ளத்தில் கொடுத்திடும் அட்சய பாத்திரமே இலக்கியமாகும். இத்தகு சிறப்புடைய இலக்கியங்கள் பேசாத விடையங்களே இல்லை. காதல் மற்றும் வீரத்தில் தொடங்கி பல்வேறு கருத்தியல்களை பதிவு செய்கின்றன எமது இலக்கியங்கள். அதனூடாக எமக்கு வாழ்வியல் இன்பங்களைக் கற்றுத் தருகின்றன.

ஆம் இலக்கியங்கள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான சிறப்பியலைக் கொண்டிருக்கின்றன. இலக்கியங்களில் விலங்குகள் மற்றும் பறவைகள் பல இடங்களில் இழையோடுகின்றன. இலக்கியப் புலவர்கள் மற்றும் கவிஞர்கள் விலங்குகளையும், பறவைகளையும் தத்தம் பாடல்கள் வழியே வர்ணிப்பில் இழையோடச் செய்திருக்கின்றனர். அவற்றில் முதன்மையாக இலக்கியம் தனிலே உலாவிடும் யானை பற்றிய கருத்தாடல்களையும் அவை குறித்த வர்ணிப்பின் பாங்கினையும் இங்கு கண்டு மகிழ்ந்திடுவோம்.

### வியப்பினைத் தருகின்ற யானையின் சிறப்பியல்

இறைவன் படைத்த உயிரினங்களில் விலங்குகள் எனும் போது அவற்றில் உடன் எமக்கு நினைவுக்கு வருவது யானையே. யானையின் தோற்றம், அதன் வலிமை, அதன் செயல்கள் என யானையை சிறுவர் முதல் பெரியவர் வரை ஆச்சிரியம் கொண்டு கண்ணுறுவர் என்பதே உண்மை. ஆம். யானை விலங்குகளில் சிறப்புடையதே. யானையின் உடலில் உள்ள அத்தனை பாகங்களும் மதிப்பும், சிறப்பும் உடையவை என்பதை நாம் அறிவோம் அல்லவா? அவ்வாறே முன்னைய காலங்களில் மன்னர்கள் வீதியுலா வருவதற்கு யானைகளையே பயன்படுத்தினர். மேலும் மன்னர் தம் படைகளில் யானைகள் முதன்மை நிலை பெற்றிருந்தன என்பதும் நோக்கத்தக்கது. அதாவது நாற்படைகளில் யானைப் படையும் ஒன்றாக விளங்கியது எனலாம். இதை விட முன்பு கோவில்களில் கூட யானைகள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. இறைவனைச் சுமப்பதற்கும், பக்தர்களை ஆசிர்வதிப்பதற்கும் என யானைகள் நிலை கொண்டிருந்தன. ஏன் முன்னைய காலத்தில் வீதிக் கட்டுமானப் பணிகளுக்கும், பெரிய கட்டிடப் பணிகளுக்கும் யானைகளைப் பயன்படுத்தியுள்ளமைக்கான வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. ஆம். இவ்வாறு பல்வேறு கோணங்களில் பாதுகாக்கப்பட்டும், மதிக்கப்பட்டும் வந்த யானைகள் இன்று முற்று முழுதாகவே அழிந்து போய்விடும் நிலையில் உள்ளன என்பதே கவலைக்குரிய விடையமாகும். யானைகள் அதிகளவில் வேட்டையாடப் படுகின்றன. அவற்றின் வாழிடங்கள் அழிக்கப்படுகின்றன. ஆம். யானையில் ஆண் பெண் எனும் பால்வகை உண்டு. ஆண் யானை களிறு எனவும், பெண் யானை பிடி எனவும் கொள்ளப்படுகின்றது. பொதுவாக யானைக்கு பல்வேறு மாற்றுப் பெயர்கள் வழங்கி வருவதனை எமது இலக்கியங்கள் சான்று பகிருகின்றன. அவ்வகையில், களிறு, வேழம், நாகம், குஞ்சரம், ஒருத்தல், கயமுனி, வாரணம், கரி, உம்பல், பிணிமுகம், பொங்கடி, தும்பி, வழுவை, ஓங்கல், கலபம், அஞ்சனம் இவ்வாறு பல பெயர்கள் யானையைக் குறித்து நிற்கின்றன.

### முத்தொள்ளாயிரத்தில் உலாவுகின்ற யானை

முத்தொள்ளாயிரம் மூவேந்தர்களின் புகழ்பாடும் இலக்கியமாகும். இந்த இலக்கியத்தில் அதிகளவு பாடல்களில் யானை பற்றிய வர்ணிப்பு இடம்பெற்றுள்ள தன்மைகளை கண்ணுறலாம்.

சேர மன்னன் வீரம் மிகுந்தவன். அவனது யானையும் அவனைப் போலவே வீரம் செறிந்தது. அவனது யானை கோபத்தால் சிவந்த கண்களுடன் போரிடுகின்றது. அதனால் பகை அரசர்களது வெண்கொற்றக் குடைகளை பறித்து எறிகின்றது. அவ்வாறு செய்கின்ற பழக்கத்தினால் வானத்தில் தோன்றும் நிலாவையும் பகை அரசரது வெண்கொற்றக் குடை எனக் கருதி அதனைப் பறிப்பதற்குத் தன் துதிக்கையினை நீட்டுகின்றதாம் அந்த யானை.

*வீறு சால் மன்னர் விரிதாம வெண்கொடையைப்*
*பாற எறிந்த பரிச்சயத்தால் தேறாது செங்கண்மாக் கோதை*
*சின வெங் களி யானை திங்கள் மேல் நீட்டும் தன் கை*

ஆகா எவ்வளவு கற்பனை. இதைப் போலவே, ஆற்றல் மிக்க பகை மன்னர்களின் வேல் நிறைந்த கதவுகளைத் தகர்த்து எறிந்த பின் கோட்டைக் கதவைப் பெயர்த்து அதைத் தன் தந்தங்களில் தூக்கிக் கொண்டு நின்றதாம் ஒரு யானை. அந்தக் காட்சி பார்ப்பதற்கு கடலில் ஓய்ந்து நிற்கும் பாய்மரக் கப்பல் போல் காட்சியளிக்கின்றதாம் என்கின்றது முத்தொள்ளாயிரப் பாடல்.



### மிதித்து நடக்கின்றது வீரம் செறிந்த வேழம்

சோழ மன்னனின் யானை பராக்கிரமம் பொருந்தியது. அது தன் முதல் அடியை காஞ்சி நகரில் வைத்தது. அடுத்த அடியைத் தஞ்சையில் வைக்கின்றதாம். அப்படியே அடுத்த அடியை ஈழத்தில் அதாவது இலங்கையில் பதிக்கின்றதாம். அட, இத்தனை நாடுகளையும் வீரத்தோடு மிதித்து நடக்கின்றதே அந்த யானை. அதன் வலிமை தான் என்னே. அக் காட்சியை,

*கச்சி ஒரு கால் மிதியா ஒரு காலால்*
*தத்து நீர்த் தன் தஞ்சை தான் மிதியாப்*
*பிற்றையும் ஈழம் ஒரு கால் மிதியா வருமே*
*நங் கோழியர் கோக் கிள்ளி களிறு*

எனப் பாடல் கவியுறுத்துகின்றது.

### நாணமில்லாது நடக்கும் சோழனினுடைய யானை

சோழ மன்னன் யானையின் மீது வீதியுலா வருகின்றான். அந்த மன்னன் மீது ஒரு பெண் காதல் கொண்டவள். அவள் சோழனைக் காணும் ஆசையில் காத்திருக்கின்றாள். சோழ மன்னன் ஒரு பெண் யானையின் மீதேறி வருகின்றான். அந்த யானை ஆடி அசைந்தவாறு சற்று நளினமாக நடந்து வருகின்றது. இதைக் கண்ணுற்ற அந்தப் பெண் சோழனைச் சுமந்து வரும் யானையைப் பார்த்து, அடி யானையே சோழன் உன் மீது இருக்கின்றான் என்ற கர்வத்தில் இப்படி ஆடிக் கொண்டு வருகின்றாயோ? காவிரி பாயும் நாட்டில் வாழும் பெண்கள் இப்படி நாணமில்லாமல் நடக்க மாட்டார்கள். இது உனக்குத் தெரியாதா? என்றளாம். அடடா, என்ன ஒரு கற்பனை. யானை என்றாலும் பெண் எனில் நாணம் இருக்க வேண்டும் என்பதை கற்பனை நயத்தோடு பாடியுள்ள புலவரின் கவியாற்றல் சிறப்புடையதே.

### கம்பராமாயணத்தில் வலம் வரும் யானை

கம்பராமாயணத்தில் கம்பரும் யானையை தன் பாடல்களின் வழியே உலாவ விடுகின்றார். தந்தையின் ஆணை ஏற்று வனவாசம் சென்றான் இராமன்.




அண்ணனை மீண்டும் வனத்திலிருந்து அழைத்து வந்து முடிசூட்டுவேன் என சபதம் செய்து வனம் நோக்கிச் சென்றான் இராமனின் இளவலாகிய பரதன். பரதனோடு அயோத்தியின் சேனை முழுவதும் புறப்பட்டது. அவ்வாறு அயோத்தியின் சேனையில் யானைப் படையின் வர்ணிப்பினை கம்பர் பின்வருமாறு வர்ணிக்கின்றார். எண்ண அருஞ் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது.

*கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்*
*அண்ணல் வெங் கரி மதத்து*
*அருவி பாய்தலால்,*
*உண்ணவும், குடையவும்,*
*உரித்து அன்று ஆயதே.*

ஆம், இடம் அகன்ற அளவில்லாத நீரினைக் கொண்ட கங்கையாறு முழுவதிலும் தலைமை உடையதும், பெருமை உடையதுமாகிய யானைகள் வியாபிக்கின்றன. அப்போது அவற்றின் தந்தங்களின் வழியே மத நீரானது பாய்ந்து ஓடி கங்கையாற்றின் நீருடன் கலந்து விடுகின்றது. இதனால் கணக்கிட முடியாத வண்டுகளுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் அருந்தவும், குளித்து நீராடவும் உரிமையில்லாது கங்கையாற்றின் நீரானது தன்மை மாறிப் போயிற்றாம். யானைகளின் பெருக்கம் மிகுதியாக இருப்பதாலும், அவை கோபம் கொண்டிருப்பதாலும் மதநீர் சொரிந்து அந்த நீர் கங்கையாற்றில் பரவுகின்றது என்பதனை நயமுறக் கம்பர் காப்பியமாக்குகின்றார்.

இவ்வாறே, பரதனது சேனையில் உள்ள அந்த யானைப் படையானது கங்கையாற்றினைக் கடந்து செல்கின்றது. நீண்ட துதிக்கைகளை உடைய அந்த யானைகள் தமது அத் துதிக்கைகளை மேலே உயர்த்திக் கொண்டு கங்கையாற்றில் நீந்திச் சென்றனவாம். இது எப்படி இருந்ததெனில், மழை தருகின்ற மேகக் கூட்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதனால் முழக்கவொலி அதிகரிக்க, ஊழிக் காலத்திலே கடல் நீரை முழுவதும் வற்றிப் போகும் படியாக அதை உள் இழுத்து உண்பதற்கு திரண்டு வந்ததைப் போல இருந்ததாம்.

மேலும், அந்த பெருமை மிகுந்த யானைகள் கங்கையாற்றில் நீந்திச் செல்லும் போது அங்கிருந்த சங்கு, சுறாமீன், முத்துக்கள், மாணிக்கம் முதலியவை கரையில் தள்ளப்படுகின்றதாம், இது மட்டுமல்லாது மதநீர்ப் பெருக்கை உடைய மலை போன்ற உயரிய யானைகளின் உடல்கள் முழுவதும் கங்கையாற்று நீரில் மறைந்து விட, அவற்றின் தலை முகடுகள் மாத்திரம் வெளித் தெரிந்தனவாம். ஆகா. அருமையாக உள்ளதல்லவா?



**சுந்தரர் பாடிய யானையின் அழகியல்**

சிவபிரான் வீற்றிருக்க திருத்தலங்களில் ஒன்று திருப்பருப்பதம் எனும் சீப்பதம் எனும் மலையாகும். அழகிய இயற்கை வளங்களால் சூழப்பட்டது அத் திருத்தலம். அத்தகு இயற்கை எழிலோடு இறைவனை புகழ்ந்து பாடுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். அவரது அத்தகு திருப்பதிகங்களிலே யானை பற்றிய வர்ணிப்பும் இழையோடுகின்றது.

எம்பெருமான் வீற்றிருக்கின்ற அம் மலையின் அடிவாரத்தில் வாழ்கின்ற குறவர்கள் தம் இடங்களுக்கு வருகின்ற யானைகளை பிடித்து வந்து அவற்றிற்கு கட்டாயமாக உணவினை ஊட்டுகின்றனர். இதைக் கண்ணுற்ற பெண் யானைகள் தம் ஆண் யானைகளும் அவர்களால் பிடிபடக் கூடும் எனக் கருதி அவற்றை அழைத்துக் கொண்டு ஓடவும், ஆண் யானைகளோ தம் பெண் யானைகளும் குறவர்களால் பிடிபட்டு விடுமோ என மருண்டு பிளிறு தலைச் செய்து பல இடங்களிலும் தேடித் திரிந்து தம் துணை யானைகளைக் காணாமல் திகைப்புடன் பல இடங்களிலும் உலாவித் திரிகின்றன வாம். அதைப் பாடல் வழி காண்போம்.

*மலைச் சாரலும் பொழில் சாரலும் புறமே*
*வரும் இனங்கள்*
*மலை பால் கொணர்ந்து இடித்து ஊட்டிட*
*மலங்கித் தம் களிற்றை அழைத்து ஓடியும்*
*பிளிறி அவை*
*அலமந்து வந்தெய்த்துத் திகைத்து ஓடித் தம்*
*பிடி தேடி தேடிடும்*
*சீபர் பத மலையே*

அவ்வாறு குறவரிடத்துக் கொண்ட அச்சத்தினால் பயந்து ஓடிய பெண் யானை ஒன்று நீண்ட நேரத்தின் பின் தன் துணை யானையை நாடி வருகின்றது. இதைக் கண்ணுற்ற அந்த ஆண் யானையே, நீ மற்றோர் ஆண் யானையை சார்ந்தது ஏனோ? எனக் கூறித் தன் துதிக்கையை மேலே உயர்த்தி கோபம் மிகுந்து மத நீரைச் செரிந்து முகத்தை சுளித்து நிற்க, அதைக் கண்ட பெண் யானை, நீர் இவ்வாறு என் மீது அடாப் பழி சொல்லித் தூற்றினால் நான் உயிர் தரித்திருக்க மாட்டேன் எனக் கூறி அயலறியத் தன் தவறின்மையைக் கூறித் தன் ஆண் யானையின் கோபத்தைத் தணித்து அதனுடன் சேருகின்ற சிறப்பினைக் கொண்டதே எம்பெருமானின் அந்த மலையாம் என்கின்றார் சுந்தரர். ஆகா, காதல் செய்யும் யானைகளையும் கண்டோம் நாம்.

**புறநானூற்றில் யானை**

சங்க இலக்கியமான புறநானூற்றில் இழையோடுகின்ற யானையின் சிறப்பியலைக் காண்போமா? மாந்தரஞ் சேரல் இரும்பொறை எனும் மன்னனின் யானை வீரமும், வலிமையும், விவேகமும் கொண்டது. அந்த யானை தொங்குகின்ற துதிக்கையை உடையது, பெருமை கொண்ட நடையினை உடையது, ஒலிக்கும் மணியானது கட்டப்பட்டிருக்கின்றது, இவை தவிர, மேலே வளைந்து உயர்ந்திருக்கும் கொம்பு, பிறை போன்ற நெற்றி, சினம் கொண்ட பார்வை, விரிந்த காலடிகள், பருத்துள்ள கழுத்து, தேன் சிந்துகின்ற மாலை, தந்தம் வழியே சிந்துகின்ற மதநீர், இரும்பைப் போன்ற தலை இத்தகைய சிறப்புக்களை எல்லாம் கொண்டிருக்கின்ற இளமை பொருந்திய யானையே அந்த அரசனுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கின்றதாம். அருமை.

**ஆன்மிகத்தில் யானை**

இவ்வளவு ஏன். எமது இந்து சமயத்தில் கூட யானைகள் முதன்மை நிலை பெற்றுகின்றன அல்லவா? இந்துக்கடவுள்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றன யானைகள். மகாலட்சுமிக்குப் பிரியமானவை இந்த யானைகள். அஷ்ட லக்ஷ்மிகளில் கஜ லக்ஷ்மியும் ஒன்று. கஜம் என்றால் யானை. லக்ஷ்மியின் அருகில் இரு யானைகள் நின்று துதிக்கையால் நீர் தூவி வாழ்த்தும். மேலும், தேவர்களின் தலைவன் இந்திரன் ஐராவதம் எனும் வெள்ளை யானையை தன் வாகனமாகக் கொண்டுள்ளான். இன்றும் நம் ஆலய திருவிழாக்களில் கடவுளர் வீதி வலம் வருவதும் யானை உருவம் தாங்கிய வாகனங்களில் அல்லவா?

# மன்னாரில் நடைபெற்ற உளமே புகுந்த நிகழ்வு

கே.எஸ்.சிவஞானராஜா

மன்னார் திருக்கேதீச்சரத்தில் சிவத்தமிழை சமய கடைப்பிடித்தல்களுடன் போற்றி வளர்ப்பதில் பேறுடைய இல்லமாகத் திகழ்வது அம்மை அப்பன் இல்லமாகும். திருமதி சி.வல்லிபுரம் அம்மாவின் பெருங்கருணையால் அம்மை அப்பன் இல்லத்தில் உபசாரம், தானம், தொண்டு, பண்பாடு, பரோபகாரம், பிராத்தனை, வழிபாடு, குருபூஜை, திருமுறை பாராயணம், உபந்நியாசம், பிரசங்கம், திருவாசக முற்றோதல் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகள் நடைபெறுவதற்கு வசதியாக ஓர் அழகான கலாசார மண்டபம் கவினுறக் கட்டப்பட்டுள்ளது.

மண்டபம் திறக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்ட முப்பெரும் நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கனவாகும். அவையாவன, தவத்திரு ரமண மகரிஷி ஞானகுருபூஜை, திருக்கேதீச்சர பண்பாட்டு மரபுகள் நூல் வெளியீடு, புலவர் ஆ.திருநாவுக்கரசுவின் நினைவுப் பேருரை மேற்படி மூன்று நிகழ்வுகளும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டுக் கடந்த 3ஆம் திகதியன்று சிறப்பாக நடைபெற்றது.

1879ஆம் ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதி பூமியில் அவதரித்தரமணமகரிஷி, திருவருள் வயப்பட்டவராய் அருணாசல அருட்பெருந் திருத்தந்தையை நோக்கியவராய் திருவண்ணாமலையில் 1896ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி சரண் புகுந்தார். "அவரவர் பிராரப்தத்தின் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கு இருந்து கொண்டு அவரவரை ஆட்டுவிப்பான். அதுமட்டுமல்ல என்று நடவாதது எப்படி முயற்சிக்கினும் ஒருபோதும் நடக்காது. அதேபோல் நடப்பது என்ன தடை செய்யினும் ஒருபோதும் நில்லாது நடந்தே தீரும். இது திண்ணமாகும். ஆதலினால் மௌனமாய் இருப்பது நன்று" என்று மொழிந்தபடி சொல்லுணர்வு அடங்க விருபாட்சி குகையிலும் கந்தாச்சிரமத்திலும் தங்கி அடியார்களுக்கு 'ஞானோபதேசம்' செய்து கொண்டேயிருந்தார்.

இன்று அது மாபெரும் ரமணாச்சிரமமாக ஞானவொளி பெருக்குகின்றது. 54ஆண்டுகள் திருவண்ணாமலையில் தவமிருந்து 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி தனது பூவுடலைச் சிவமாக்கி சமாதியானார். அப்பொழுது ஒரு ஜோதி பிரவாகித்து வால் நட்சத்திரம் போல் வானில் பிரகாசித்து அருணாசல மலை உச்சியிலே அடங்கியது.

இவரது திருவருள் நிறைந்த வாழ்வை பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர், சைவப்புலவர் ஏரம்பமூர்த்தி அனுசாந்தன் உபந்நியாசம் செய்ய அருணாசல அக்ஷரமணிமாலை 108 பாடல்களையும் கே.எஸ்.சிவஞானராஜா பக்கவாத்திய சகிதம் பாடி ரமண மகரிஷி பகவானை இரங்கச் செய்தார். முதலாவது நிகழ்வு இனிதே நிறைவு கொண்டது.

இரண்டாவது நிகழ்வாக திருக்கேதீச்சர பண்பாட்டு மரபுகள் என்ற நூல் வெளியீடு இடம்பெற்றது. இந்த நூலில் 'கேது' பூசித்த வரலாறு தொடக்கம் துவஷ்டா மண்டோதரி, மோதேவடிகள் பூசித்து வழிபாடாற்றிய வரலாறுகள் தெளிவாகவும் மற்றும் சோழர்கால திருக்கேதீச்சரம் மாதோட்ட நகர அமைப்பு, கோயில் அமைப்பு, சிற்பக் கலை மகிமை, ஓவியக் கலைச் சிறப்புக்கள், இசைக் கலை மரபுகள் பிரம்மாதமாகவும் பூஜை விழா மரபுகள், நித்திய நைமித்திய விழா ஒழுங்கமைப்பு மாச நட்சத்திர விழாக்கள், திருவெம்பாவை விழா மகிமை, மகா சிவராத்திரி விழா மகிமை, மகோற்சவ பெருவிழாச் சிறப்புகள், பாலாவித் தீர்த்த மகிமை நனி சிறப்பாகவும் எடுத்தாளப்பட்டுள்ளது.

மேலும் திருக்கேதீச்சர திருப்பதிகங்கள் பற்றிய தேன்துளிகள், சமய நிகழ்வுகள், இந்நியத் திருத்தலங்களுக்கு நிகரானது திருக்கேதீச்சரம் என நிரூபிக்கும் பாங்கும் படைப்பும் அற்புதம்.

அனுசாந்தன் இந்த நூலின் மூலம் புலமை பெற்ற விரிவுரையாளராக அடையாளம் காணப்படுகிறார். கதிரைகளை மட்டும் அலங்கரிக்காமல் கருத்துக்களையும் அலங்கரிப்பதையே உயர்மட்டங்கள் கவனத்தில் கொள்ளும்போதுதான் சமூகம் வியப்படையும். இல்லாவிடின் பதவிகள் போலிகளாகி விடும் என்பது அனுபவசாலிகளின் கணிப்பு. அனுசாந்தன் இந்த விடயத்தில் வெற்றிபெற்றுவிட்டார்.


மூன்றாவது நிகழ்வாக திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் முன்னாள் இணைச் செயலர் புலவர் ஆ.திருநாவுக்கரசு அவர்களின் நினைவுப் பேருரை, அம்மை அப்பன் இல்லச் செயலர் சார்பாக நிகழ்த்தப்பட்டது.

54 வருடங்கள் கோவிரோடு ஒன்றித்துப் பணியாற்றிய அமரர் திருநாவுக்கரசுவுக்கு ஒரு மாபெரும் நினைவஞ்சலியை ஒப்பேற்ற முடியாமல் போனதையிட்டு கூடியிருந்த சபையினர் கண்கலங்கினர். இவரது காலமே ஆயத்தின் பொற்காலமாகும். மேற்படி மூன்று நிகழ்வுகளும் மன்னாரில் நெஞ்சில் நிறைந்தனவாய் உளம் புகுந்தன.


# நதியில்லா ஓடம்

## கவிதைநூல் வெளியீட்டு விழா













சம்பூர் தமிழ் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் சம்பூரைச் சேர்ந்த கவிஞர் க.யோகானந்தன் எழுதிய 'நதியில்லா ஓடம்' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பூர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.
சம்பூர் தமிழ் கலா மன்றத்தின் தலைவரும் வைத்திய கலாநிதியுமான அ.சதீஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் இந்த நூலுக்கான ஆசியுரையை சம்பூர் பத்திரகாளி அம்பாள் ஆலய தலைமைக் குரு கிறிஷ்ண கவிதாஷ் வழங்கியதோடு நூல் வெளியீட்டு உரையை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஷ்வரன் வழங்கினார். நூல் வாழ்த்துறை பிரபல எழுத்தாளர் நந்தினி சேவியர் வழங்கியதுடன் நூல் நயவுரையை பொலி சஞ்சிகை ஆசிரியர் பு.ஜெயாகரன் வழங்கினார். அத்தோடு நிகழ்ச்சி தொகுப்பினை எம்.சச்சிதானந்தம் வழங்கினார். இதில் முதன்மை அதிதியாக கொழும்பு பல்கலை கழகத்தின் பொறியியல் துறையின் பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் முதன்மை அதிதியாக கலந்து கொண்டார்.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் சிறப்புற நடந்த தமிழ்த்தினப் போட்டிகள்












மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்ட தமிழ் தினப் போட்டிகள் நேற்றுமுன்தினம் திங்கள்கிழமை கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் வித்தியாலத்தில் இடம்பெற்றன.
மண்முனை தென்மேற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.தயாசீலன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது, சுவாமி விபுலானந்தரின் நினைவுச்சிலைக்கு மாலையும் அணிவிக்கப்பட்டு, வணக்கமும் செலுத்தப்பட்டது. ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## பந்தங்கள் கொண்டு செல்லும் நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 20

கிளிநொச்சி புளியம்பொக்கனை நாக தம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. அதைமுன்னிட்டு பாரம்பரிய முறையிலான பந்தங்கள் கொண்டு செல்லும் நிகழ்வு இன்று மாலை 3 மணியளவில் மீசாலை பந்தமரவடியில் இருந்து ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-131)

## முன்னாயத்த கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணம் கல்வி சார் கிறிஸ்தவ ஐக்கியத்தின் இந்த ஆண்டுக்கான பரிசளிப்பு நிகழ்வு சம்மந்தமான ஆயத்தக் கூட்டமும், 2019ஆம் ஆண்டுக்கான ஐக்கியத்தின் கிறிஸ்தவ பாடப் பரீட்சை தொடர்பான கூட்டமும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் கல்விசார் கிறிஸ்தவ ஐக்கியத்தின் தலைவர் ஜெ. ஜெயமோகன் தலைமையில் இடம்பெறும். யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கியத்தைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கிளர்ந்தது...

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது, பன்னாட்டு விசாரணை தேவை போன்ற கோரிக்கைகளை வலியுறுத்திக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கு ஆதரவாக முழு அடைப்புப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தப் போராட்டதுக்கு பல்வேறு அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் ஆதரவு தெரிவித்திருந்தன.

**எழுச்சிப் பேரணி**

நேற்றுக் காலை மட்டக்களப்புக் கல்லடிப் பாலத்தில் மக்கள் திரண்டனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், மதகுருமார்கள் என ஆயிரக் கணக்கானோர் பங்கு கொண்டனர். அங்கிருந்து ஆரம்பமான மக்கள் எழுச்சிப் பேரணி மெல்ல காந்தி பூங்காவை நோக்கி நகர்ந்தது. வீதியூடாகப் பேரணி நகர்ந்தபோது அதைத் தடை செய்யப் பொலிஸார் முயற்சித்தனர். எனினும் மக்களின் எதிர்ப்பை அடுத்து அவர்கள் அந்த முயற்சியைக் கைவிட்டனர். பேரணி நகர்ந்து தொடருந்து வீதியூடாகக் காந்தி பூங்காவை அடைந்தது. அங்கு பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

"எம்மால் இராணுவத்திடம் ஒப்படைத்த உறவுகள் எங்கே?", "இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்", "இராணுவமே வெளியேறு", "காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது?", "சர்வதேசமே உறவுகளை மீட்டுத் தா உண்மைக்காக குரல் கொடு", "எமது நிலம் எமக்கு வேண்டும்." என்பன போன்ற கோசங்களை எழுப்பி பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மக்கள் போராட்டங்கள் நடத்தும்போது அவற்றைப் பற்றி அலட்டிக் கொள்ளாதிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பிரச்சினைகளை உள்ளூர் பொறிமுறை மூலம் தீர்ப்போம் என்று கூறுகின்றார். அவரது இந்த நடவடிக்கை எமக்கு ஏமாற்றம் தருகின்றது. இந்த அரசு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை சிறிதளவும் எமக்கு இல்லை. பன்னாடுகள் தலையீடு செய்து எமக்கான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்தினர்.

**முழு அடைப்பு**

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக மட்டக்களப்பில் முழுக் கடையடைப்பு நடத்தப்பட்டது. அனைத்து வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன. கிழக்கில் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களிலும் முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வங்கிகள், அரச நிறுவனங்களுக்கு பணியாளர்கள் சென்றபோதும் அங்கு வழமையான பணிகள் நடைபெறவில்லை. பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சென்றபோதும் மாணவர்களின் வரவு இல்லை என்று கூறமளவு வீழ்ச்சியடைந்திருந்தது.

தனியார் பேருந்துகள் சேவைகளைப் புறக்கணித்திருந்தன. தூர சேவைகள் நடைபெற்றன. இ.போ.ச. பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன.

**வடக்கில் குழப்பம்**

வடக்கு மாகாணத்தில் சில இடங்களில் கடையடைப்பு நடத்தப்பட்டது. ஏனைய இடங்களில் வழமையான செயற்பாடுகள் நடைபெற்றன. கடையடைப்புத் தொடர்பான தெளிவின்மை காரணமாகவே இந்த நிலைமை காணப்பட்டது.

கிளிநொச்சியில் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. அதைப் போன்று யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி, சங்கானை, சுன்னாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களிலும் கதவடைப்பு நடத்தப்பட்டது. வர்த்தக நிலையங்கள், சந்தைகள் என்பன மூடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. தமக்குக் கடையடைப்புத் தொடர்பான எந்த அறிவிப்புக்களும் கிடைக்கவில்லை என்று யாழ்ப்பாண நகரப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர். வவுனியாவில் இயல்பு நிலைமை காணப்பட்டது. அங்கும் தமக்கு உரிய அறிவிப்புக்கள் கிடைக்கவில்லை என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. மன்னாரிலும் இயல்பு நிலைமை காணப்பட்டது. கதவடைப்புத் தொடர்பாகத் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று மன்னார் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (எ-7,9,6,105,213,160,46,40)

## போரில்...

சேனநாயக்க.

வெலிகமவில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விசாரணைகளை எதிர்கொள்ள நாம் அச்சம் கொள்ளவில்லை. ஏனெனில் நாம் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை.

எந்தப் போரிலும் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படும். இது கடினமான உண்மை. மக்களுக்கு இழப்பு ஏற்படுத்தாது போரை நடத்த முடியாது.

அதற்காக நாம் போரின்போது அதைச் செய்தோம் என்று அர்த்தமில்லை. கடந்த காலத்தைத் தோண்டக் கூடாது. கடந்த 10 ஆண்டுகளில் நடந்துள்ள நல்ல விடயங்களைப் பார்க்க வேண்டும். பன்னாட்டு விசாரணை தேவையில்லை. எமது நீதித்துறைக்கு அதற்கான தகுதி உண்டு - என்றார். (எ)

## புத்தர்...

குற்றஞ்சாட்டப்படு கின்றது.

மூனாமடு மற்றும் பேயாடிக்கூழாங்குளம் ஆகிய இடங்களில் தமிழ் மக்கள் தொன்று தொட்டு விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தமது வயல் நிலங்களுக்கு அருகே ஆலயங்களை அமைத்து வழிபட்டு வந்ததுடன், இளைப்பாறுமிடம் என்பவற்றையும் அமைத்திருந்தனர். மூனாமடுவில் அமைந்திருந்த நாகபூசனி அம்மன் ஆலயம் நீண்டகாலமாகத் தமிழ் மக்களால் பேணப்பட்டு வந்தது.

1995ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அந்தப் பகுதியை இலங்கை இராணுவம் கையகப்படுத்தியது. அவர்களால் அமைக்கப்பட்ட முகாமில் வழிபாட்டுக்காக புத்தர் சிலை ஒன்றையும் அவர்கள் நிறுவியிருந்தனர். பின்னர் அந்தக் காணிகள் மக்கள் பயன்பாட்டுக்காக விடுவிக்கப்பட்டபோதும், அங்கு நிறுவப்பட்ட புத்தர் சிலை அகற்றப்படவில்லை. தற்போது வவுனியாவில் உள்ள பிக்கு ஒருவர் அந்தப் பகுதியைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருகின்றார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம், அந்தக் காணி இந்து ஆலயம் அமைந்துள்ள பகுதி. அந்தக் காணி நாகபூசனி அம்மன் ஆலயக் காணி என்று பிரதேச செயலகமும் கூறியுள்ளது. அதற்கான ஆதாரங்களும் உள்ளன. அதை வேறு எவரும் உரிமை கோரவோ, கையகப்படுத்தவோ அனுமதிக்க முடியாது என்று கூறியுள்ளது.

வடக்கில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ள காணிகளில் பெரும்பாலானவை தனியார் காணிகளே. புத்தர் சிலையை அனைத்து இடங்களிலும் நிறுவி அந்த இடங்களைச் சொந்தம் கொண்டாட நினைப்பது நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும். புத்த பெருமானின் போதனைகளை ஏற்று நடக்கும் எவரும் இவ்வாறான காரியங்களைச் செய்ய மாட்டார்கள். அந்த இடத்தில் நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றி, தமிழ் மக்கள் பூர்வீகமாக மேற்கொண்டுவரும் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டும் என்றும் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 21ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-110)

## குழந்தையைத்...

இணைந்து மரமொன்றில் கட்டி வைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் சமூகவலைத்தளங்களில் நேற்று பரவலாகப் பேசப்பட்டது.

நொச்சியாகம - கடுபத்வெவ - கபரகொயாவெவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே தனது குழந்தையைத் தரையில் அடித்தார் என்று கூறப்படுகின்றது.

மனைவியுடன் ஏற்பட்ட தகராறில் மனைவியை தடியொன்றால் தாக்கியதுடன், மனைவியின் கையில் இருந்த குழந்தையும் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். குழந்தையைத் தூக்கி சந்தேகநபர் தரையில் அடித்தார் என்று சம்பவத்தை நேரில் பார்த்த பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

படுகாயமடைந்த குழந்தை நொச்சியாகம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர் சிவில் பாதுகாப்பு அதிகாரியாக பணியாற்றியுள்ளார் என்றும், அவர் தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-21)

## மாமியாரின்...

மருமகன். காயமடைந்த மாமியார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் வசிக்கும் 20 வயதுடைய இளைஞனே இவ்வாறு தனது மாமியாரின் காது ஒன்றைக் கடித்து குதறியுள்ளார்.

கடற்தொழில் செய்யும் அவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாமியாருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார். அப்போது ஆத்திரத்தில் மாமியாரின் காதைக் கடித்துக் குதறியுள்ளார் என விசாரணைகளில் தெரியவருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாமியாரிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸார் மருமகனைக் கைது செய்தனர். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிமன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் மருமகனை முற்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த மன்று சந்தேக நபரை வரும் ஏப்ரல் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (எ-21,26,106)

## தமிழகத்தில்...

ளுக்கு எதிராகப் பன்னாட்டு நீதிமன்றில் விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழகத்தின் அரசியல் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே தற்போது ஆட்சியில் உள்ள நிலையிலேயே தற்போது தனது தேர்தல் அறிக்கையில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழகத்தின் துணை முதலமைச்சரும் கட்சி ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்ச் செல்வம் தமது கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் ஈழத் தமிழருக்கு உரிய நீதி கிடைக்கவும், அவர்தம் உரிமைகளை நிலைநாட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான கொடூரச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீதும், அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் பன்னாட்டு நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட்டு, ஈழத்தில் நடைபெற்ற துயரங்களின் பின்னணியில் மறைந்திருக்கும் அனைத்து உண்மைகளை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலைநாட்டிட நாடாளுமன்றின் ஒப்புதலுடன் அரசமைப்பில் சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## சுழற்சி...

ணத்தில் பகல் வேளைகளில் சுமார் நான்கு தொடக்கம் ஐந்து மணித்தியாலங்களும், இரவில் ஒன்று முதல் இரண்டு மணித்தியாலங்களும் சுழற்சி முறையில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் சேவை நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த சுழற்சி முறைமின் வெட்டு நிலமை சுமார் 3 நாள்கள் வரை நீடிக்கலாம் என்றும் மின் தடை ஏற்படும் இடங்களில் மின் வெட்டு நடைமுறை நேரம் மாற்றம் அடையலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## இந்திய...

எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கடந்த ஜனவரி 13 ஆம் திகதி இந்திய மீனவர்கள் எட்டுப் பேர் இலங்கைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர். மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது படகு விபத்துக்குள்ளானதில் எல்லை தாண்டியதாக கைதான மீனவர்கள் தெரிவித்திருந்தனர். தமிழகம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் மூலம் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எட்டு மீனவர்களில் 11ஆம் வகுப்பு படிக்கும் ஷாம் டேனியல் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர் துரைபாண்டி என்பர்களுடைய கல்வி நடவடிக்கைகள் பாதிப்பதையடுத்து அவர்களை விடுவிக்குமாறு கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கைதான இந்திய மாணவர்கள் இருவர் உள்ளிட்ட எட்டு இந்திய மீனவர்களும் நேற்று மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட னர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஏ.ஜூட்சன் அவர்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மாணவர்கள் இருவரது கல்வியைக் கருத்தில் கொண்டு விடுவிக்க வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டு நேற்றுமுன்தினம்ஆர்ப்பாட்டம்ஒன்றையும்முன்னெடுத்திருந்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்குமாறு கோரி கடந்த கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவின் போது கடற்படைத் தளபதிகளிடம் மனுக்களைக் கையளித்திருந்தனர். இந்த நிலையிலும் மீனவர்களுக்கு விளக்க மறியல் நீடிக்கப்பட்டமை இந்திய மீனவர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (க-21, 26)

## சுமந்திரன்....

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்பு கொண்டு, தீர்மானத்தில் மாற்றம் கொண்டுவர இடமளிக்க முடியாது என்று கூறினார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் கலந்துரையாடிய பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, ஜெனிவாவில் உள்ள அயலுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பனவைத் தொடர்பு கொண்டு பேசினார் என்றும், அதையடுத்து அமைச்சர் திலக் மாரப்பன, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் தொடர்பு கொண்டு பேசினார் என்றும் கூறப்படுகின்றது.

(எ)

தேசிய குத்துச்சண்டை

# 10 வயதில் பதக்கம் வென்ற மாணவன்

வவுனியா, மார்ச் 20
பாடசாலை ரீதியாக தேசிய மட்டத்தில் நடைபெற்ற வூசூ குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியாவை சேர்ந்த ஆர்.கே.கெவின் என்ற மாணவன் வட மாகாணத்தில் மிகக் குறைந்த வயதில் வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை புரிந்துள்ளார்.
அகில இலங்கை ரீதியில் கண்டி மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற வூசூ குத்துச்சண்டைப் போட்டியில் வடமாகாணத்தை பிரதிபலித்து 15 வீர வீராங்கனைகள் கலந்து கொண்டிருந்த நிலையில் வவுனியா அகில இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 6இல் கல்வி பயிலும் மாணவனான ஆர்.கே.கெவின் தனது 10 ஆவது வயதில் குத்துச்சண்டையில் வெள்ளிப்பதக்கத்தைத் தனதாக்கி கொண்டுள்ளார். (ஒ.110)





# சாவகச்சேரி கிங்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 20
நல்லூர் தெற்கு சனசமூக நிலைய 70ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்திய மென்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் சாவகச்சேரி கிங்ஸ் அணி கிண்ணத்தை வென்றது. அரியாலை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சாவகச்சேரி கிங்ஸ் அணியை எதிர்த்து இணுவில் கலைஒளி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி கிங்ஸ் அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.
ஜேன்மன் 22 ஓட்டங்களையும், கௌசிக் 8 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் இணுவில் கலைஒளி அணி சார்பில் ஜீவிதன், நிரோசன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலைஒளி அணியினர் 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களை மட்டும் பெற்று ஒரு ஓட்டத்தால் தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.
கோகுலன் 18 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் சாவகச்சேரி கிங்ஸ் அணி சார்பில் பிரதீஸ் 2 இலக்குகளையும் சசி, ரோமன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளை வீழ்த்தினர். (ஒ.23)

## இன்றைய ஆட்டங்கள்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்று புதன் கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★★★★

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று புதன் கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★★★

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடாத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்று புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை கலைநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செம்மலை உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

★★★

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் கப்டன் சோமஸ்சுந்தரம் வெற்றிக் கிண்ணத்துக்கான 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஏபி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)



# வெள்ளையின் ஹட்ரிக் கோல் வென்றது ஊரெழு றோயல்

யாழ்ப்பாணம், மார்ச் 20
தர்மகுலநாதன் வெள்ளையின் ஹட்ரிக் கோல் உதவியுடன் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை வென்றது ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி.
நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்ட நேர முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
ஊரெழு றோயல் அணி சார்பில், தர்மகுலநாதன் வெள்ளை தலா 3 கோலையும், பொற்பதி அணி சார்பில் றஞ்சித்குமார், விஜயகுமார் இருவரும் தலா ஒவ்வொரு கோலையும் பதிவு செய்தனர். (ஒ.5.23)

# டைமன்ஸ் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 20
சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட்சகோதரன் கில்லறி ஜோசப்பின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டும், கில்லறி விளையாட்டுக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாந்திபுரம் குரோஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வதிரி டைமன்ஸ் அணி வெற்றி பெற்றது. வதிரி டைமன்ஸ் அணி சார்பாக லக்கி ஒரு கோலைப் பதிவு செய்தார். (ஒ.23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20
தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

# அசத்தியது வவுனியா தமிழ் மத்திய பாடசாலை

வவுனியா, மார்ச் 20
வவுனியா மாவட்ட பாடசாலை கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் ஜீவன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 14 வயதுப் பிரிவு இருபாலருக்குமான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.
வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா தமிழ்மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதியது.
2:1 என்ற கோல் கணக்கில் வவுனியா தமிழ்மத்திய மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.
மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மூன்றுமுறிப்புவித்தியாலயஅணியை எதிர்த்து செட்டிக்குளம் அரவித் தோட்டம் வித்தியாலய் அணி மோதியது. மூன்று முறிப்பு வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தக்க வைத்தது. (ஒ.23)






## ஆஸி. பார்முலா -1 கார்ப்பந்தயம்

# பின்லாந்து வீரர் போட்டோஸ் முதலிடம்

உலகின் மிகப்பெரிய கார்ப்பந்தய போட்டியான பார்முலா- 1 கார்பந்தயம் இந்த ஆண்டு 21 சுற்றுக்களாக நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு சுற்றிலும் முதல் 10 இடங்களைப் பிடிப்பவர்களுக்கு முறையே 25, 18, 15, 12, 10, 8, 6, 4, 2, 1 வீதம் புள்ளி வழங்கப்படும். போட்டியின் போது ஒரு சுற்றை அதிவேகமாக கடக்கும் வீரருக்கு மேலதிகமாக ஒரு புள்ளி வழங்குவது இந்த முறை புதிதாக அறிமுகம் செய்யப்பட்டது. 21 சுற்றுக்கள் முடிவில் அதிக புள்ளிகள் குவிக்கும் வீரர் உலக சம்பியன்ஷிப் பட்டத்தை வெல்வார்.


இந்த சீசனுக்குரிய முதலாவது சுற்று ஆஸ்திரேலிய கிராண்ட்பிரி, மெல்போர்ன் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் போட்டியில் பங்கேற்றனர். பந்தய தூரமான 307.574 கிலோமீற்றர் இலக்கை பின்லாந்து வீரர் வால்டெரி போட்டோஸ் 1 மணி 25 நிமிடம் 27.35 வினாடிகளில் கடந்து வெற்றி பெற்றார். அத்துடன் குறிப்பிட்ட சுற்றை வேகமாக கடந்த வகையில் அவர் மொத்தம் 26 புள்ளிகளையும் தட்டிச் சென்றார்.

5 முறை சம்பியன் பட்டத்தை வென்ற இங்கிலாந்து வீரர் ஹாமில்டன் அவரை விட 20.886 வினாடி மட்டுமே பின்தங்கி 2ஆவது இடத்தைப் பெற்று 18 புள்ளிகளைப் பெற்றார். நெதர்லாந்து வீரர் மேக்ஸ் வெர்ஸ்டப்பான் 3ஆவது இடத்தையும், முன்னாள் சம்பியன் ஜேர்மன் வீரர் செபாஸ்டியன் வெட்டல் 4ஆவது இடத்தையும் பிடித்தனர்.

பார்முலா-1 பந்தய இயக்குநர் சார்லி ஒயிட்டிங் உடல் நலக்குறைவால் 3 நாள்களுக்கு முன்பு மரணம் அடைந்தார். அவருக்கு இந்த வெற்றியை அர்ப்பணிப்பதாக முதல் இடத்தைப் பிடித்த போட்டோஸ் தெரிவித்தார்.

## மெஸ்ஸி 'ஹட்ரிக்' கோல்கள்

# ரியல் பெட்டிஸை வீழ்த்தி பார்சிலோனா அபாரம்



ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் பார்சிலோனா அணி 4:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா - ரியல் பெட்டிஸ் அணிகள் மோதிய முதலாவது பாதி ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் மெஸ்ஸி ஒரு கோலைப் போட்டார். மீளவும் அவர் முதல் பாதி ஆட்டத்தின் இறுதியில் 45ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட பார்சிலோனா அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் 63ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் சுராஜ் ஒரு கோலைப் போட்டார். ரியல் பெட்டிஸ் அணி வீரர்களும் பதிலுக்கு கோல்களைப் போடுவதற்கு முயற்சி செய்து ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தனர். அந்த அணியின் வீரர் மோர்ரன் 83ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டார். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் மெஸ்ஸி மீண்டும் ஒரு கோலைப் போட இறுதியில் பார்சிலோனா அணி 4:1 என்ற கணக்கில் ரியல் பெட்டிஸை வீழ்த்தி வெற்றி பெற்றது.



# மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி

12ஆவது ஐ.பி.எல். போட்டி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. இந்த நிலையில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக காணப்பட்ட வோர்னர் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் தடை விதிக்கப்பட்டு தடை முடிவடைவதால் ஒரு வருட இடைவெளியின் பின்னர் ஐ.பி.எல். போட்டியில் களமிறங்குகின்றார். இதனால் அந்த அணி மீண்டும் புத்துயிர் பெறவுள்ளது. அந்த அணியிடம் வலுவான பந்து வீச்சு காணப்படுவதால் குறைந்த ஓட்டங்களை சேர்த்தாலும் வெற்றியை வசப்படுத்தும் திறன் அந்த அணியிடம் இருந்தது. கடந்த தொடரில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டம் ஒன்றில் 118 ஓட்டங்களே பெற்ற போதிலும் வெற்றி பெற்று ஐ.பி.எல். வரலாற்றில் சாதனை படைத்தது. முதல் அணியாக பிளே ஆஃப் சுற்றில் கால்பதித்த அணியும் சன் ரைசர்ஸ்சே. இந்த ஐ.பி.எல். தொடரில் மீண்டும் டேவிட் வோர்னர் அணிக்கு திரும்பியுள்ள நிலையில் மீண்டும் புத்துயிர் பெற்று வலுவாக களமிறங்கத் தயாராகின்றது.

சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 2016ஆம் ஆண்டு கிண்ணத்தை சுவீகரித்தது. கடந்த வருடம் இறுதிப் போட்டிக்கு முன்னேறி சென்னையிடம் தோல்வியடைந்தது. இந்த அணியில் 15 இந்திய வீரர்களும், 8 வெளிநாட்டு வீரர்களும் காணப்படுகின்றனர்.

**பலம்**

இறுதிக்கட்ட பந்து வீச்சு அணியின் அசுரபலமாக உள்ளது. கடந்த தொடரில் ஏனைய அணிகளைவிட இறுதி 5 பந்துப்பரிமாற்றங்களில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் பந்து வீச்சா ளர்கள் குறைந்த ஓட்டங்களையே கொடுத்திருந்தனர். வெளிநாட்டு வீரர்களில் டேவிட் வோர்னரை, வில்லியம்சன், குப்தில், மொகமது நபி, ரஷித் கான் ஆகியோர் தொடர் முழுவதும் விளையாடவுள்ளனர்.

அனைத்து விதமான பந்து வீச்சு சேர்க்கையும் அணியில் உள்ளது. வலது கை வேகப்பந்து வீச்சு, இடது கை வேகப்பந்து வீச்சு, லெக் சுழற்பந்து, ஆஃப் சுழற்பந்து, மெதுவான வேகம் கொண்ட இடது கை பந்து வீச்சு என பல்வேறு கலவை உள்ளது. அத்தோடு பந்து வீச்சில் பன்னாட்டு தர வரிசையில் முதல் நிலையில் உள்ள ஆப்கானிஸ்தான் வீரர் ரஷித் கான் காணப்படுகின்றார். வேகப்பந்து வீச்சாளர்களாக புவனேஸ்குமார், சந்தீப் சர்மா, கலீல் அகமது சித்தார்த் கவுல் போன்றோர்களும் காணப்படுகின்றனர்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக டேவிட் வோர்னர், குப்தில் சிறப்பான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக காணப்படுகின்றனர். மத்தியவரிசையில் மனீஸ் பாண்டே, கேன் வில்லியம்சன், ரிக்கி புயி, சாஹா, கோஸ்வாமி காணப்படுகின்றனர். சகல துறை ஆட்டக்காரர்களாக ஷகிப் அல் ஹசன், விஜய் சங்கர், யூசுப் பதான் போன்றோர் அணிக்கு பலம் சேர்ப்பதாகக் காணப்படுகின்றனர்.

**பலவீனம்**

மத்திய வரிசை, பின் வரிசையில் நம்பிக்கை அளிக்கக்கூடிய ஹிட்டர்கள் இல்லை. கடந்த இரு தொடர்களிலும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி பெரும்பாலான ஆட்டங்களில் நடுத்தர வகையிலான இலக்கையே இழந்தது. வலுவான பந்து வீச்சை கொண்டே குறைந்த அளவிலான இலக்கை கொடுத்தாலும் வெற்றி பெறும் திறமையை கொண்டிருந்தது.

**மாற்றங்கள்**

நியூஸிலாந்து தொடக்க வீரரான மார்ட்டின் குப்தில், இங்கிலாந்தின் ஜானி பேர்ஸ்டோ ஆகியோர் புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அதே வேளையில் ஷிகர் தவான், டெல்லி கேப்பிடல்ஸ் அணியில் இடம் பிடித்துள்ளார். விஜய் சங்கர், ஷாபாஷ் நதீம், அபிஷேக் வர்மா ஆகியோர் டெல்லி அணியில் இருந்து சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு ஏற்கனவே மாறியுள்ளனர்.

# அஸ்வின் ஆதங்கம்

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக திகழ்ந்தவர் ரவிச்சந்திரன் அஸ்வின். இந்தியாவில் கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணப் போட்டியின் போது மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் முக்கியமான ஒரு கட்டத்தில் முறையற்ற பந்தை வீசினார். இந்தப் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது.

இதன் பின்னர் ரி-20 போட்டியில் தொடர்ந்து வாய்ப்பை இழந்தார். அதேபோல் 2017ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான அஸ்வின், ஜடேஜா ஜோடி சிறப்பாக விளையாடவில்லை. இதனால் ஒரு நாள் கிரிக்கெட் அணியிலும் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

அதே காலகட்டத்தில் ரிஸ்ட் சுழற்பந்து வீச்சாளர்கள் ரி-20 மற்றும் ஒருநாள் போட்டியில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். இதனால் குல்தீப் யாதவ் மற்றும் சாஹல் ஆகியோர் இந்திய அணியில் தொடர்ந்து இடம் பிடித்தனர்.

இது குறித்து அஸ்வின் தெரிவிக்கையில்: "தற்போது வெளியில் இருப்பதை நான் விரும்பவில்லை. ஏனென்றால், நான் அந்த அளவுக்கு மோசமாக செயற்படவில்லை. ஒருநாள் மற்றும் ரி-20 போட்டியில் என்னுடைய பந்து வீச்சு மோசம் என்று சொல்ல இயலாது. தற்போது ரிஸ்ட் சுழற்பந்து வீச்சாளர்கள் அணிகளுக்கு தேவைப்படுகிறார்கள் என்ற கருத்து நிலவி வருகிறது.

தற்போதைய நாகரிக கால கிரிக்கெட்டில் ரிஸ்ட் சுழற்பந்து வீச்சாளர்கள் அணிக்கு தேவைப்படுகிறார்கள். அதனால் நான் வெளியில் உட்கார்ந்து இருக்கிறேன்.

சையத் முஸ்தாக் அலி ரி-20 போட்டியில் கூட சிறப்பான வகையில் பந்து வீசினேன். தற்போதைய கால கிரிக்கெட் சவால் ஆனது. என்னுடைய சிறந்த பந்து வீச்சை எந்த அளவுக்கு வெளிப்படுத்த முடியுமோ, அதைச் செய்வதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்- என்றார்.



## மருந்தாளர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் மருந்தகத்திற்கு அனுபவமுள்ள மருந்தாளர் தேவை.
ஏனையவை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தொடர்பு - 077 955 7830**

---

திரு. தொம்சன் அவர்களின் மூன்றுமாத
**SPOKEN ENGLISH** WITH DIPLOMA CERTIFICATE

அரச தனியார் ஊழியர்கள், ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள், உயர்கல்வி மாணவர்கள் இணையமுடியும்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 23.03.2019
1.காலை 8.00 - 10.00 2.மாலை 03-05

23.03.2019 வரை இணைவோருக்கு மூன்று மாத பயிற்சிக்கட்டணம் ரூபா 3000 மட்டுமே.

செவ்வாய் வியாழன் பிரிவுகள் 21.03.2019
1.காலை 8.30 - 10.00 2.மாலை 03-05

SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர்
☎ 021 222 4282 077 621 4567

---

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு.
advt@uthayan.com.
021 493 1111

---

போட்டிப் பரீட்சைகளுக்கான மாலைநேர வகுப்புகள்

ஆரம்பம்
வியாழன் (21/03)
பி.ப 5.00→7.00

**பொது உளச்சார்பு**

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர், பதிவாளர் மற்றும் SLAS, SLEAS உட்பட அனைத்து பரீட்சைக்கும் செவ்வாய், புதன், வியாழன்
பி.ப 5.00→7.00

**076 688 3394**
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

---

## காசி யாத்திரை

ஆரம்பம் : 15.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10

**தரிசிக்கும் இடங்கள்:**

டெல்லிநாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள். கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா(தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திர கோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**

**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர் 2 பேருக்கு, வெஸ்ரன் கொமட், குளியலறை, இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

**"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"**

**கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்**
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154
Email: Sriranganathan2601@gmail.com
(IN 9608) (14.17)

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.O/L 6 Passes With 5 Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
Chartered Accounting Courses
Executive Level
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.A/L 3 Passes

**ஆரம்பம்: 23.03.2019**

Certificate Course in English
18 Batches have successfully completed the Course.
Started 23.03.2019

Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382/ 021 222 9149

---

## வேலைவாய்ப்பு

நல்லூரில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு முழுநேரம்/ பகுதிநேரம் சுத்திகரிப்பாளர் (Room boy) உடனடியாகத் தேவை.

**021 221 5199**
(CS 24118) (14.17)

---

**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் மணவாளக்கோலத் திருவிழா**

**காலம் :- 21.03.2019 வியாழக்கிழமை முற்பகல் 7.30 மணி**

அன்றையதினம் அம்பாளுக்கு 1008 சங்காபிடேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிடேகம், பூசைகளும் இடம்பெற்று அம்பாள் எழுந்தருளி உள், வெளி வீதி உலாவந்து அருள்பாலிப்பார். தொடர்ந்து மாகேஸ்வர பூசை இடம்பெறும்.

**பரிபாலன சபையினர்.**
**கொக்குவில்.**

---

## வேலையாள் தேவை

இல.235/7 பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சௌபாக்கிய விலாவிற்கு சுத்திகரிப்பு தொழிலாளி தேவை.

**021 221 1717/077 030 3951**
காலை/மாலை - 8.00 - 10.00am, 4.00 - 8.00pm
முகாமையாளர், சௌபாக்கிய விலா, யாழ்ப்பாணம்.
(CS 24116) (14.17)

---

## அலுவலர் தேவை

கணினி வேலை, கணக்கு வேலை, கடித தொடர்பாடல் செய்யக் கூடிய அனுபவம் உள்ளவர் தேவை. கிராம அலுவலரின் நற்சான்றுப் பத்திரத்துடன் வரவும்.

**K.S.பொன்னம்பலம் & சன்**
எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.
021 205 7005
(CS 24113) (14.17)

---

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

**சம்பத் வீட்டுக் கடன் வட்டி மேலும் குறைக்கப்பட்டுள்ளது**

(வ.ச.வ)
**14%** இலிருந்து

ரூ.1,000,000/- இற்கு

**மாதாந்த தவணை ரூ.12,098/- மட்டுமே**

முதல் 5 வருடங்களுக்கு நிலையான வட்டி வீதத்தின் கீழ் கடன் செலுத்தும் வசதி (14.5%)

தொழில்புரிவோருக்கு விசேட வட்டிவீதம் மற்றும் சௌகரியமான கொடுப்பனவு முறைகள்

Sampath SEVANA
வீட்டுக் கடன் திட்டம்

0112 30 30 50 www.sampath.lk

இன்றே அருகிலுள்ள சம்பத் வங்கிக்கு வாருங்கள். உங்கள் கனவு இல்லத்தை இலகுவாக நனவாக்கிடுங்கள்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.